



# தமிழரசு

சம்பர் 1-15, 1998 ரூ.3









# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்


மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :

**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**

417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.

தொ.பே., 8255467, 8255261, 8254917.

24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.


Mudra:TNSACS:6259:98

## இந்த இதழில்...


★ மக்களின் சமத்துவநிலை உயரவே சமத்துவபுரங்கள் ........ 2
★ மக்கள் கவிஞர் ........ 6
★ ஜாதீ (கவிதை) ........ 7
★ மூதறிஞர் இராஜாஜி ........ 8
★ திரைப்பட விருது வழங்கும் விழா ........ 9
★ மனித உரிமைகளும் **கலைஞரின்** அணுகுமுறைகளும் ........ 13
★ அரசு ஆணைகள் ........ 16
★ உலக தமிழ் இணையம் – கருத்தரங்கு மாநாடு ........ 17
★ தகவல் தொழில்நுட்பத்தை மக்கள் இயக்கமாக உணர்த்திடுவோம் ........ 18
★ சேலம் மாவட்டத்தில் மூன்று சமத்துவபுரங்கள் ........ 20
★ ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்விற்கான பயிற்சி முறைகள் ........ 26
★ பெருமரம் ........ 30
★ திட்டச் செயலாக்கத்தில் திருப்புமுனை ........ 33
★ சிற்றிதழ்கள் செய்ததும் செய்யத் தவறியதும் ........ 37
★ சென்னை மத்திய கூட்டுறவு வங்கி ........ 39
★ குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணிகள் ........ 41
★ ஊனம் ஒரு தடை இல்லை ........ 44
★ ஊனமுற்றோர்க்கு உதவிடும் அரசு ........ 45


**முதல் பக்க அட்டையில்**
**திரைப்பட விருது வழங்கும் விழா**
**கடைசிப் பக்க அட்டையில்**
**சேலம் மாவட்டத்தில் சமத்துவபுரங்கள் திறப்பு விழா**

### திருக்குறள்

*அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை*
*இகழ்வார்ப் பொறுத்தல் தலை.*

தன் மீது குழி பறிப்போரையே தாங்குகின்ற பூமியைப் போல் தம்மை இகழ்ந்து பேசுகிறவர்களின் செயலையும் பொறுத்துக் கொள்வதே தலைசிறந்த பண்பாகும்.

– **கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...


# தமிழரசு

திருவள்ளுவராண்டு 2029
கார்த்திகை
டிசம்பர் 1–15, 1998
மலர் : 30 இதழ் : 11
விலை ரூ.3

# மக்களின் சமத்துவநிலை உயரவே




# சமத்துவபுரங்கள்

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சேலம் மாவட்டத்தில், 4-12-98 அன்று கோனூர், கத்தேரி, நெய்க்காரப்பட்டி ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டுள்ள சமத்துவபுரங்களை திறந்துவைத்து ஆற்றிய உரையிலிருந்து...**

இதுவரையிலே சில மாவட்டங்களில் இது போன்ற சமத்துவபுரங்கள் ஆறு திறந்து வைக்கப்பட்டுள்ளன. இன்று கோனூரில் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த சமத்துவ புரம் ஏழாவது சமத்துவபுரமாகும்.

**சேலம் மாவட்டத்தில் மூன்று சமத்துவபுரங்கள்**

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சமத்துவபுரம்தான் திறக்கப்பட்டு அந்த வரிசையிலே ஆறு சமத்துவபுரங்கள் திறக்கப்பட்டன. ஆனால், சேலம் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முயற்சியினாலும், என்னுடைய அருமைத் தம்பி வேளாண்மைத்துறை அமைச்சர் தம்பி வீரபாண்டிய ஆறுமுகத்தின் பேரார்வப் பெருக்கினாலும், முயற்சியினாலும் இன்றைக்கு இங்கு மூன்று சமத்துவபுரங்கள் திறந்து வைக்கப்படுகின்ற



நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கின்றன. அந்த மூன்றிலே முதலாவதாக இன்றைக்கு கோனூரில் சமத்துவபுரம் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது.

சமத்துவபுரம் என்பது பல்வேறு சாதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிற பிரிந்திருக்கிற என்றுகூட சொல்ல மாட்டேன். யாரோ சில பேருடைய ஆதாயத்திற்காக நாமெல்லாம் பல்வேறு சாதிகளாக பிரிக்கப்பட்டோம். மனித சமுதாயத்திலே ஒவ்வொருவரும் ஒரு தொழிலை மேற்கொள்வது அவசியம். அந்தத் தொழில் ரீதியாக பிரிந்து நின்றவர்கள் சாதி ரீதியாக பிரிக்கப்பட்டு விட்டார்கள்.

**மனம் பக்குவப்பட்டால்தான் ஒன்றே குலம் என்ற உணர்வு ஏற்படும்**

அதிலே வந்த ஆபத்துதான் இன்றைக்கு சாதிக் கலவரங்கள், அதை ஒட்டி நடைபெறுகின்ற மதக் கலவரங்கள், வெறுப்புணர்வினால் விளைகின்ற பல்வேறு வன்முறைச் சேட்டைகள். அதையெல்லாம் ஒரேயடியாக சட்டத்தின் மூலமாக மாத்திரம் தீர்த்து விட முடியாது.

காவலர்களைக் கொண்டு மாத்திரம் தீர்த்துவிட முடியாது. மனம் பக்குவப்பட்டாக வேண்டும். நம்முடைய மனம் அதற்குப் பக்குவப்பட்டால்தான் நாமெல்லாம் 'ஒரே குலம்' என்ற உணர்வை பெறமுடியும்.

ஒன்றே குலம் என்று சொன்ன அந்தக் கருத்தை இன்றைக்கு நாம் பேசுகிறோம். ஏற்றுக் கொண்டதைப் போல மக்களிடத்திலே எடுத்துக் காட்டுகிறோம். நம்மைப் பொறுத்தவரையிலே அதைக் கடைப்பிடிக்க முடியாத ஒரு சூழ்நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். அதை எல்லாம் கடந்து, என்ன சொல்லுகிறோமோ அது வாயளவிலே என்றில்லாமல் மனதளவிலும் அவைகளை நிலை நாட்ட வேண்டும் என்ற கருத்தோடுதான் இந்த சமத்துவபுரங்களை உருவாக்கி, இங்கே பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள் குடியேறி, அவர்கள் ஒருவருக்கொருவர் அண்ணன் தம்பிகளாக, அக்காள் தங்கைகளாக பழகிட வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தினால் — நம்மை வைத்துச் சூதாட்டம் நடத்தலாம் என்று எண்ணுகின்ற சூழ்ச்சிக்காரர்கள் நிச்சயமாகத் தோல்வி அடைவார்கள்.

கோனூர் சமத்துவபுரத்தில் இந்து அருந்ததியர் 11 பேர் இந்த வீடுகளிலே இன்றைக்கு இருக்கிறார்கள். ஆதிதிராவிடர்கள் 28 பேர் இங்கு வாழுகின்றார்கள். ஒண்டிப்பெண்டி என்ற சமூகத்தைச் சேர்ந்தவர் ஒருவர் வாழுகிறார். ஆக மொத்தம் 40 பேர் பட்டியல் இனத்தைச் சேர்ந்தவர்கள்.



வன்னியர்கள் 20 பேர், நாவிதர்கள் இரண்டு பேர், சலவைத் தொழிலாளர்கள் 3 பேர்கள்.

பிறப்படுத்தப்பட்ட வகுப்பில் — முகம்மதியர் லப்பை — 1, செங்குந்த முதலியார் — 1, துளுவ வெள்ளாளர் — 2, விஸ்வகர்மாக்கள் — 11, கொங்கு வேளாளர் — 2, நாடார் — 8, பிற வகுப்பினர் — ரெட்டியார் — 4, பிராமணர் — 6 — என்று இப்படி பிராமணர் முதல் ஆதிதிராவிடர்கள் உள்ளிட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள் இந்த 100 வீடுகளிலே வாழுகிறார்கள்.

**ஒன்றாக வாழ்வதால் மழை நன்றாகத்தான் பெய்கிறது**

ஏற்கெனவே 6 மாவட்டங்களில் இதுபோன்ற வீடுகள் தலா 100 வீடுகள் கட்டப்பட்டு 600 வீடுகளில் எல்லாச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் வாழுகிறார்கள். அதனால் நாட்டுக்கு எந்த ஆபத்தும் வந்து விடவில்லை. மழை நன்றாகத்தான் பெய்து கொண்டிருக்கின்றது. இவர்கள் எல்லாம் ஒன்றாக குடியமர்த்தப்பட்டிருக்கிறார்களே என்பதற்காக, மழை வராமல் வானம் பொய்த்து விடவில்லை. எந்த அநீதியும் நாட்டிலே நடைபெற்று விடவில்லை. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், "ஆண்டவன்தான் நம்மைப் படைத்தான்" என்று சொல்லுகின்றோம். அந்த ஆண்டவன் படைப்பில் ஒருவன் உயர்ந்தவன், ஒருவன் தாழ்ந்தவன் என்று நிச்சயமாக இருக்க முடியாது. இந்த ஆட்சியினுடைய சாதனைகளிலே ஒரு கட்டம்தான் சமத்துவபுரம்.

**கத்தேரி சமத்துவபுரத் திறப்பு விழாவில்...**

நாட்டில் இந்து மதம் என்றும், இஸ்லாமிய மதம் என்றும், கிறித்தவ மதம் என்றும் பல மதங்கள் இருக்கின்றன. மதங்களைக் கடைப்பிடிப்பதோ, அல்லது அந்த மதஉணர்வுகளைக் கடைப்பிடிப்பதோ, அல்லது அந்த மதஉணர்வுகளை மதிப்பதோ அந்த மதத்திலே உள்ளவர்களின் உரிமை. அதிலே நான் குறுக்கே நிற்க விரும்பவில்லை.

ஆனால் இஸ்லாம் மதமும், இந்துமதமும் மோதிக் கொள்வது, அல்லது இந்து மதமும் கிறித்தவ சமுதாயமும் மோதிக்கொள்வது என இத்தகைய மத நல்லிணக்கமற்ற காரியங்கள், மனித நேயமற்ற காரியங்கள் சாதியின் பெயரால் நடந்தாலும், உயர்சாதி,

தாழ்ந்த சாதி என்ற நிலையிலே நடந்தாலும், உன்னுடைய மதம், என்னுடைய மதம் என்ற வேறுபாட்டில் நடந்தாலும் அந்த மதவாதங்களை அனுமதிக்க முடியாது. அதைப்போலவே சாதிபேத சச்சரவுகளை அனுமதிக்க முடியாது.. எல்லோரும் சகோதரர்களாக வாழவேண்டும்.

அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக — கட்டாயப்படுத்தி அல்ல; யார் யார் இஷ்டப்படுகிறார்களோ



அவர்கள். எதையும் சட்டத்தால் சாதிக்க முடியாது. சட்டத்தால் இதுபோன்ற காரியங்களைச் சாதித்தாலும் அது நிற்காது. எனவேதான் மனந்திருந்தி அவர்களாகவே முன்வந்து, "நாங்கள் ஒன்றாகக் குடியிருக்கிறோம். நாங்கள் ஒரே குலமாக இங்கே வாழுகிறோம். நாங்கள் சகோதரர்களாக இங்கே வசிக்கிறோம்" — என்று யார் முன்வருகிறார்களோ, அவர்களுக்க இந்த வசதி செய்துதரப்பட்டு, அதற்காக வகுக்கப்பட்ட திட்டம்தான் சமத்துவபுரம் திட்டம்! இந்தத் திட்டம் இந்தியாவிலேயே முதல்முதலாக தமிழ்நாட்டிலேதான் இந்த ஆட்சியிலேதான் உருவாக்கப் பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல ஆறு சமத்துவபுரங்கள் தமிழகத்திலே இதுவரையில் அமைந்திருக்கின்றன. இன்று காலையில் ஏழாவது சமத்துவபுரம். இது எட்டாவது சமத்துவபுரம். அடுத்து இன்னொரு சமத்துவபுரத்தை நான் திறந்துவைக்க இருக்கின்றேன்.

இதற்கெல்லாம் காரணம்; இந்த சமத்துவபுரங்கள் மாத்திரம் சமத்துவத்தை உருவாக்கி விடாது. "நூறு பேருக்கு வீடுகட்டிக் கொடுத்து எல்லா சாதிக்காரர்களையும் ஒன்றாக வைத்துவிட்டால் சமத்துவம் வந்து விடுமா?" என்று சிலபேர் கேட்கிறார்கள்.

அவர்களுடைய அடிப்படை என்ன என்றால் சமத்துவம் வரக்கூடாது என்பது! அதனால்தான், "வந்து விடுமா?" என்று கேட்கிறார்கள். வந்துவிட வேண்டும் என்ற ஆவலில் கேட்கவில்லை.

அன்றைக்கு ஒருநாள் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் ஆதிதிராவிடர்களை அழைத்துக் கொண்டு ஆலயங்களிலே ஆலயப் பிரவேசம் செய்தார். சமத்துவம் வந்து விட்டதா? வரவில்லை. வரவில்லை என்றாலுங்கூட, அந்த உணர்வைக் காட்டுவதில் தவறில்லை.

மதுரையிலே வைத்தியநாத ஐயர், ஆதி திராவிடர்களை அழைத்துக் கொண்டு ஆலயப்பிரவேசம் செய்தார். சமத்துவம் வந்து விட்டதா என்றால் இல்லை.

தந்தை பெரியார் ஆலயப் பிரவேசம் நடத்திக் காட்டினார். சமத்துவம் உடனடியாக வரவில்லை. இவைகள் எல்லாம் சமத்துவத்தை உருவாக்குவதற்காக சில வழிமுறைகள். சில உணர்வுகளின் அடையாளங்கள், அந்த அடையாளத்தைத் தான் இங்கே நூறு வீடுகளாக நீங்கள் காணுகின்றீர்கள்.

**இந்த சமத்துவபுரங்களில் வசிப்பவர்கள் யார் யார் ?**

இந்த நூறு வீடுகளிலே வசிக்கப் போகின்றவர்கள் யார்? பட்டியல் இனத்தவர்க்கு — (SC) 40 வீடுகளை ஒதுக்கியிருக்கிறோம். இந்து அருந்ததியர் 19 பேர், வள்ளுவன் ஒருவர், ஆதிதிராவிடர்கள் 17 பேர், குறவர் 3 பேர் — இவர்கள் 40 குடும்பங்கள் இங்கே வசிக்க இருக்கின்றார்கள்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 25 வீடுகள்; ஆண்டிப்பண்டாரம், மருத்துவர், வண்ணார் என்கிற சலவைத் தொழிலாளி, வன்னியர், ஜங்கம செட்டியார், போயர், கிறித்தவ சமுதாயத்தைச் சேர்ந்த குளாளர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், நாடார் கவரை நாயுடு, வெள்ளாளர், கைக் கோலர், கம்மாளர், கிறிஸ்தவ நாடார், தேவாங்கர், யாதவர் என இப்படி 25 வீடுகள்.

பிராமணர்—9, கன்னடத்தவர்.1, அய்யர், ஐயங்கார் முதல் ஆதிதிராவிடர் வரையில் அத்தனைபேரும் ஆண்டவன் படைப்பில் சமம்தான் என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையிலே, இந்த 100 வீடுகளும் இங்கே அமைந்திருக்கின்றன. இந்த 100 வீடுகளில் வாழப்

போகின்ற சகோதரர்கள், சகோதரிகள், தாய்மார்கள், பெரியவர்கள் ஒருமித்த எண்ணத்தோடு, நாமெல்லாம் மனிதர்கள் என்ற அந்த உணர்வோடு வாழவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இன்றைக்கு 100 வீடுகளில் ஒன்றாக வாழுகின்ற காரணத்தால் சமத்துவபுரம் என்று இந்த இடம் அழைக்கப்பட்டாலும், எதிர்காலத்தில் தமிழ்நாடே எல்லோரும் கூடி வாழுகின்ற சமத்துவபுரமாக ஆகவேண்டும் என்பது என்னுடைய ஆவலாகும்.

**நெய்க்காரப்பட்டி சமத்துவபுரத் திறப்பு விழாவில்...**




இதுவரையில், தமிழகத்தில் 50 சமத்துவபுரங்களை உருவாக்க வேண்டும் என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டு ஆறு மாவட்டங்களில் சமத்துவ புரங்கள் திறந்து வைக்கப் பட்டிருக்கின்றன.

இன்று சேலம் மாவட்டத்தில் மூன்று தொகுதிகளில் 7வது, 8வது, 9வது சமத்துவபுரங்கள் திறந்து வைக்கப் பட்டிருக்கின்றன. இந்த ஒன்பது சமத்துவ புரங்களில் 900 வீடுகள் சமத்துவமாக வாழ, சகோதரத்தோடு வாழ, ஒரே உணர்வோடு நாமெல்லாம் தமிழர்கள் என்கிற உணர்வோடு வாழ்ந்திட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த முயற்சியில் நாங்கள் ஈடுபட்டு இருக்கிறோம்.

**இந்தத் திட்டம் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லை**

இந்தியாவிலேயே இந்தத் திட்டம் வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லை; தமிழ் நாட்டைத் தவிர. இந்தியாவிற்கு வழி காட்டத்தக்க பல திட்டங்களை இந்த ஆட்சியிலே நாம் உருவாக்கி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

**மக்களின் சமத்துவநிலை உயரவே சமத்துவபுரத் திட்டம்**


அரசு இன்று சமத்துவபுரத்தை அமைத்து திறந்து வைக்கிறது என்றால், மக்களின் அடிப்படைத் தேவைகளை மாத்திரம் அல்ல; அவர்களுடைய சமத்துவ நிலையும் உயர வேண்டும், பின்பற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த சமத்துவபுரத் திட்டம்.

நான் இங்கே இந்த சமூகங்களின் பெயர்களைப் படித்தால் இங்கே யார் யார் குடியேறியிருக்கிறார்கள் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள முடியும். நாற்பது பேரில் 19 பேர் அருந்ததியர். 15 பேர் பி.ஆர்.என்கிற பிரிவைச் சேர்ந்தவர்கள். 6 பேர் பி.எல் என்று அழைக்கக்கூடிய பிரிவைச சேர்ந்தவர்கள். இப்படி நாற்பது பேர். பிற்படுத்தப்பட்டவர்களில் வெள்ளாளக் கவுண்டர் ஆறு பேர். தேவாங்கு செட்டியார் இரண்டு பேர். நாடார் ஒன்பது பேர். நாயக்கர் எட்டுப் பேர். மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களில் வன்னியர் உள்ளிட்டவர்கள் மொத்தம் 25 பேர். பிற இனத்தவர் என்று எடுத்துக் கொண்டால் கிறிஸ்தவர் ஒருவர். முகமதியர் இரண்டு பேர். பிராமணர் நான்கு பேர். வெள்ளாளர் மூன்று பேர்.

**இந்த ஆட்சிக்கு ஒத்துழைப்பு தர வேண்டியது உங்கள் கடமை**

சமுதாய ஒற்றுமையில் நமக்கு இருக்கிற அக்கறையின் காரணமாகத்தான், பெரியார் வழி — அண்ணா வழியிலே சமுதாயம் நல்லமுறையில் சிறந்து நடைபோட வேண்டும் என்பதற்காகத்தான் இஸ்லாம் மார்க்கமானாலும் கிறிஸ்தவ மார்க்கமானாலும் அந்த சிறுபான்மை சமுதாய மக்களுக்கு பாதுகாப்பு அரணாகவும், அதே நேரத்தில் அந்த சிறுபான்மை சமுதாயத்தினர் பெரும்பான்மை சமுதாயத்தினரை உயர்த்தி மதித்து நடந்திட வேண்டும், பெரும்பான்மை சமுதாயம் சிறுபான்மை சமுதாயம் இரண்டிற்கும் பாராபட்சமில்லாமல், ஓரவஞ்சனையில்லாமல் ஒரே நிலையில் ஒரே அளவுகோலில் பார்த்து எல்லா சமுதாயங்களும் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற அக்கறையோடுதான் இந்த ஆட்சி இன்றைக்கு பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஆட்சிக்கு ஒத்துழைப்பு தர வேண்டியது உங்களைப் போன்றவர்களுடைய கடமை.

□ □ □



# மக்கள் கவிஞர்

- பேரறிஞர் அண்ணா

"மக்கள் கவிஞர்" - மனங்கவரும் மகத்தான இந்தப் பட்டம் சாதாரணக் கவிஞனுக்கு வழங்கப்படும் புகழ்மாலை இல்லை.

பன்னூறு ஆண்டுகளாய்ப் பாரிலே கவிஞர்கள் உலவி வந்தார்கள்; அளவுக்கு அதிகமாகவே உலவி வந்தார்கள். ஆனால் அவர்கள் செய்து வந்த வேலையெல்லாம் வேதங்களுக்கு விரிவுரை, விளக்கப் பாடல்கள் தீட்டுவது - படாடோப அரண்மனை வாழ்விற்குத் தங்கள் கவிதைத் திறத்தால் பகட்டுப் பூச்சுப் பூசுவது - ஆகியவைதாம்.

மக்களுக்காக - மக்களைப் பற்றி - மக்களிடையே பழகு மொழியில் கவிதை இயற்றிய கவிஞன் மிகமிக அருமை!

'மக்களின் கவிஞர்' ஆக மாறுவது எளிதான செயல் இல்லை. மிகவும் கடினமான இந்தச் சாதனையில்தான் முயன்று வெற்றி பெற்றிருக்கிறார் சி.சுப்பிரமணிய பாரதி.

தொடக்கத்திலேயே சுப்பிரமணிய பாரதியாரின் புலமைக் கூர்மை பற்றியும், திறமை குறித்தும் அவருடைய நண்பர்களான ஒரு சிறு குழுவினருக்குத் தெரியும். அவர்கள் வியந்து புகழ்ந்தார்கள். ஆனால், ஏனைய மக்கள் அனைவரும் அவர்களுடைய கவிஞராகிய அவரைப் பற்றி அறிந்தது எத்தனையோ ஆண்டுகளுக்கு அப்புறம்தான். அப்பொழுது கூட ஒரு வித அரசியல் மெருகேறிய ஒரு சில கவிதைகள் மட்டுமே பொதுமக்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

பாரதியார் - ஏரோட்டும் சாதாரண உழவனுக்குப் பாட்டுப் பாடினார். தொட்டில் ஆட்டும் தாய்மார்களுக்கு - விளையாட்டு வெளிகளிலே ஓடியாடும் குழந்தைகளுக்குக் கவிதைகள் இசைத்தார்.

சுற்றி வேலி கட்டிக் கொண்டு, அந்த எல்லைக்குள் அடங்கி, ஒடுங்கி விடுபவை அல்ல பாரதியாரின் பாக்கள்.

பழைமைப் பாதுகாவலர்களாக - சம்பிரதாய உடும்புகளாக விளங்குபவர்களை நோக்கி ஆவேசமாக அள்ளி வீசுகிறார் சுடு சொற்களை :

"ஏ, முட்டாள்களே! நெடுங்காலமாக நிலவி வருகிறது என்ற ஒரே காரணத்திற்காகச் சில கருத்துக்கள் உன்னதமானவை - உண்மையானவை - என்று சாதிக்கவா வருகிறீர்கள்?

பசி, வறுமை, அறியாமை முதலியவற்றை அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. எனவே, பணக்காரர்களின் கொடுமையை அவர் பலமாகச் சாடுகிறார் :

*'தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் – இந்த சகத்தினை அழித்திடுவோம்'*

- என முழங்குகிறார்.

"வாழ்க்கை வசதிகள் அனைத்தும் பெற்று, மக்கள் வாழ வேண்டும். வணிகம் வளமுடன் நடைபெற வேண்டும். இயந்திரத் தொழில்கள் பெருகிட வேண்டும். புதுமைக் காலத்தின் நலன்கள் எல்லாம் நாட்டிலே பொங்கிக் குவிய வேண்டும்!"

- என்றெல்லாம் அவர் விரும்புகிறார்.

எத்தகைய அபாயச் சூழலிலும், நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையுமாக நெஞ்சம் தளராமல் பாரதியார் நடந்து செல்வதை நாம் காண்கிறோம்.

பாரதி வெறும் தேசியக் கவிஞர் அல்லர்; சீர்திருத்த வானில் மின்னிய விடிவெள்ளி அவர்!

அந்நியன் மீது அவருக்கு ஆத்திரம். நாடு அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று விரும்பினார் அவர். அதுமட்டுமே அவரது இலட்சியமாக, தீர்க்கமான முடிவாக இருந்து விடவில்லை. அதுதான் அவரது இலட்சியத்தின் தொடக்கம்.

அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதுடன் நாட்டு மக்கள், தங்களைப் பிணைத்து இறுக்கும் தளைகள் அத்தனையையும் தகர்த்து எறிந்து, உண்மையான விடுதலை வீரர்களாக விளங்க வேண்டும் என்று விரும்பினார் அவர். உலக மக்களின் முன்னிலையில் அவர்கள் உன்னத உயர்வு பெற்றுத் திகழ வேண்டும் என்று அவாவினார். புதிய விழிப்புப் பெற்று, புதுமை ஆண்களாகவும், பெண்களாகவும் நாட்டு மக்கள் நடமாடும் காட்சியைக்காண ஆசைப்பட்டார்.

## மக்கள் கவிஞரின் மாபெரும் வேலைகள்

சிந்தனைத் தெளிவுடன் பாரதி நிலைமையை ஆராய்ந்தார். நாட்டில் நடமாடும் தீமைகளை வேரோடு களைய முனைந்தார். மக்கள் நலனில் அக்கறை கொண்ட 'மக்கள் கவிஞரை'த் தவிர, யாரும் அவ்வளவு முயற்சி எடுத்திருக்க முடியாது.

பாரதியாருக்குத் தெரியும் - மக்கள் சக்தி ஆட்சி செய்யத் தொடங்கும் யுகம், இந்த யுகம் என்பது. மக்களே மன்னர்களாக மாறும் காலம் இது என்பதை அவர் அறிவார். எனவே, அத்தகைய விடுதலைக்காகப் போராடும்படி பொதுமக்களை அவர் தூண்டினார்.

மக்கள் கவிஞனை எதிர்நோக்கி நிற்கும் சிக்கல்கள் எண்ணற்றவை; மிகக் கடினமானவை. புதிய உண்மைகளை மக்கள் உணரும்படி செய்வது - புதுப்பாதையிலே அவர்கள் நடைபோடத் தூண்டுவது - புதிய நோக்கிலே விளைவுகளை எடைபோட அவர்கள் முயலும்படி செய்வது - எல்லாம் மக்கள் கவிஞனின் வேலைகள்!

பாரதியார் அச்சமின்றிப் போராடினார். அவர் நடத்திய போராட்டம் முடிய வில்லை. அதற்குள்ளாகவே அவர் மறைந்து விட்டார்.

அவரது சிந்தனைப்படை வலிமையை நமக்கு உதவியுள்ளார். அதனைத் துணைக்கொண்டு போராட்டத்தை நாம் வெற்றிகரமாக முடிக்க முடியும்.

மக்கள் கவிஞர் பாரதியாருக்கு நாம் வழங்கும் மாபெரும் காணிக்கை - மரியாதை - அவர் நடத்திய அறிவுப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டியதுதான். தீவிரமாக-உன்னதமான போக்கில் - மக்கள் விடுதலைக்கான போராட்டம் நடைபெற வேண்டும்! வேண்டிய வீரர்கள் இருக்கிறார்கள் - வெற்றி காண்பது உறுதி!

*நன்றி: அண்ணா போற்றிய பெருமக்கள் நூலிலிருந்து...*

# ஜாதி

ஜாதிப் பித்தர்களே
ரத்தம் வேண்டுமா ரத்தம்
எடுத்துக் கொள்ளுங்கள்
என்னில்

கத்தி உள்ளதா கத்தி
செருகுங்கள் என் கண்ணில்

கொள்ளி உள்ளதா கொள்ளி
செலுத்துங்கள் என் புண்ணில்

சிந்தி முடிந்ததா
கோபம்?

வெந்து தணிந்ததா
வீடு?

இப்போது சொல்லுங்கள்
இது என்ன?

குடலுக்கும் வயிற்றுக்கும்
குருட்சேத்திரமா?

இந்த மண்ணில்
வெற்றிலை எச்சில் துப்பவும்
விரும்பாதவன் நான்

இப்படி ரத்தம் துப்பினால்
எப்படி?

கண்ணுக்குள்
கறுப்பும் வெள்ளையும்
கை கலக்குமாம்

இமை இறங்கிவந்து
தீ வைக்குமாம்

இந்த தேசத்தில்
அடுப்புகளுக்கே இன்னும்
நெருப்புவந்து சேரவில்லை

அதற்குள் கூரைக்கா....?

விசாலப்படுத்தச் சொன்னது
மனத்தைத்தானே
மயானத்தையா...?

**கவிஞர் வைரமுத்து**

இந்த ஜாதிக்கத்தி
தற்கொலைப் பட்டறையில்
தயாரிக்கப்பட்டதப்பா

இந்தக் கத்திக்கு
இரண்டு வேலை
எதிர்த்தவனை அழிப்பது
எடுத்தவனையும் ஒழிப்பது

எறியுங்கள்
எறிந்தே விடுங்கள்

ஜனத்தொகை விடவும்
பிணத்தொகை மிகுந்தால்
இனத்தொகை என்னாவது...?



ஜாதி ஒரு மாயை

எந்த ரசாயனம்
ஜாதியின் நிறம்காட்டும்?

எந்த பௌதிகம்
ஜாதியின் குணம் காட்டும்?

"இப்போது தேவை
இன்னஜாதி ரத்தம்"

வரிவிளம்பரம் வந்ததுண்டா?

"இன்ன ஜாதி அரிசி
இங்கே கிடைக்கும்"
கடையில் பலகை கண்டதுண்டா?

சொல்லுங்கள்

வெட்கத்தில் விழுகிறேன்
துக்கத்தில் அழுகிறேன்

உலகம்
விண்ணைத் துளைத்து
விடியவைக்கப் பார்க்கிறது

நாமோ பூமியைத் துளைக்கும்
புழுக்களாய்.... புழுக்களாய்....

உலக மானுடம்
சிறகு தயாரிக்கச் சிந்திக்கிறது

நாமோ
இருக்கும் உடைகளையும்
இழந்துவிட்டு.... இழந்துவிட்டு....

இங்கு
எல்லா ஜாதியும் இருக்கிறது

இல்லாத ஒரே ஜாதி
மனிதஜாதி

இன்னும்
தீப்பந்தம் தேவை
ஜாதியின் சடலம் எரிக்க

இன்னும்
ஆயுதம் தேவை
வகுப்புவாதத்தின்
ஆணிவேர் அறுக்க

இப்போதைக்கு
ஒரு வெண்புறா தேவை
திரும்பத் திரும்பத்
தெற்கில் பறக்க

**இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல**
என்ற கவிதைத்தொகுப்பிலிருந்து....

# மூதறிஞர் இராஜாஜி


இராஜாஜி அவர்கள் ஒவ்வொரு பிரச்சினையையும் மிகத் தெளிவாக அறிந்து வைத்திருக்கிறார்.

திருக்குறளுக்கு அவர் உரை எழுதியிருக்கிறார். அவரது உரை தனித்தன்மை வாய்ந்தது. அந்தத் தனித் தன்மைக்குக் காரணம், அவருடைய கூர்த்த மதிதான்.

அவரது சிந்தனையும் செயலும் மார்க்க அரேலியரைப் பின் பற்றியவை ஆகும்.

இராஜாஜியைப் போன்று பெரிய நிலையை அடைந்தவர்கள், சிறிய சிக்கல்களையெல்லாம் ஒதுக்கிவிடுவார்கள்.

'சிறு பொறிதான் பெரு நெருப்பாகும்' என்பதை உணர்ந்த இராஜாஜி, பிரச்சினைகளில் சிறியது - பெரியது என்ற பாகுபாடு பார்க்காமல், அவற்றைத் தீர்ப்பதற்குத் தம்முடைய கருத்தைச் செலுத்துவார்.



இராஜாஜி செய்ய வேண்டிய தொண்டுகளையும், கடமைகளையும் செய்துவிட்ட போதிலும், இப்பொழுதும் தீவிரமாகச் சிந்தனையைச் செலவிடுவதற்குக் காரணம் - தவறு ஏற்பட்டு விட்டால் அதற்குத் தாமும் உடந்தையாக இருந்துவிடக் கூடாது என்பதும், தவற்றை இடித்துக் காட்ட வேண்டும் என்ற உணர்வும் இருப்பதுதான்.

காலமும் உலகமும் தன்னைக் கேட்கும் என்பதால்தான், அக்கிரமத்தையும், அநீதியையும், எதிர்ப்பதில் இந்த வயதிலும் தம்மை அவர் ஒப்படைத்துக் கொண்டிருக்கிறார்.

அவருக்குப் பல எதிர்ப்புகள் ஏற்பட்ட போதிலும் கலங்குவதில்லை.

'நாம் சொன்னால் யாரும் எதிர்க்க மாட்டார்கள்' என்ற எண்ணத்தில் அவர் பிரச்சினைகளை அணுகுவது இல்லை.

நான் அவரிடத்தில் பெருமதிப்போடு கவனிப்பது யாதெனில் - மக்கள் எல்லாரையும் சிந்திக்கும்படி அவர் செய்திருக்கிறார் என்பதேயாகும்.

இதுவே, இராஜாஜி தமது வாழ்க்கையில் பெற்றுள்ள மகத்தான வெற்றிகளில் தலையாயது ஆகும்.

உலக அமைதிக்காக அவர் அயல்நாட்டுப் பயணம் மேற்கொண்டார்.

அணுக்குண்டுகளைச் செய்து குவித்து வைத்திருந்த அமெரிக்க நாடு சென்று, அந் நாட்டின் அதிபர் கென்னடியைச் சந்தித்தார்.

உலகுக்கு அமைதி வேண்டும் என்பதற்காக அந்தப் பயணத்தை மேற்கொண்டவர் - 'இந்தியாவிலிருந்து சென்றவர்' என்பது இந்த நாட்டினுக்குப் பெருமைமிகு அத்தியாயமாக விளங்கும்.

இராஜாஜி ஆற்றிய பணி அத்தகையது. அந்தக் காரியத்துக்கு ஈடான பெருமை மிக்கது - அவரது வாழ்க்கை வரலாற்றிலும் வேறு இருக்க முடியாது.

உலகை மருட்டிய அணுக்குண்டுப் பிரச்சினை குறித்து அமெரிக்க ஆட்சித் தலைவரோடு அவர் பேசிவிட்டு வந்தது - உலக வரலாற்றில் இடம் பெறும்.

இந்த உலகில் ஒரு நாள் போர் நிறுத்தம் ஏற்படும். பயங்கரங்கள் நீடிக்காமல் உலகம் 'சாந்தி பூமியாக' ஆகும்.

அதற்காகப் பெருமுயற்சி எடுத்தவர்களது பெயர்களில் இராஜாஜியின் பெயர் உறுதியாக இடம் பெறும்.

இராஜாஜியின் உலக அமைதிக்கான இந்தச் சாதனைக்குக் கீழேதான் அவருடைய ஏனைய சாதனைகள் - அதாவது அவர் 'கவர்னர்-ஜெனரல்' ஆக இருந்தது - 'கவர்னர்' (ஆளுநர்) ஆக இருந்தது - முதலமைச்சர் ஆக இருந்தது - சுதந்தரக் கட்சியின் தலைவராக இருந்தது - எல்லாம் எழுதப்படும்.

அப்படிப்பட்ட மாமேதை ஒருவர் வாழ்கிற காலத்தில் நாம் வாழ்கிறோம். இந்தக் காலத்தில் நாம் பயன் பெறாவிட்டால் இனி எந்தக் காலத்திலும் நாம் பயன்பெற முடியாது.

மாமேதை ஒருவர் வாழ்ந்த நாட்களில் நாம் வாழ்கிறோம் என்பதற்கு - இதுவரை அவரால் நாம் அடைந்த பலன்களை எண்ணி, நம் நன்றியையும் அஞ்சலியையும் இந்த விழா நாளில் நாம் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**(மூதறிஞர் இராஜாஜி அவர்களின்
91வது பிறந்த நாள் விழா,
டாக்டர் ஏ. இலட்சுமணசாமி (முதலியார்)
தலைமையில் 14.12.1968
சென்னையில் நிகழ்ந்தபோது
பேரறிஞர் அண்ணா
ஆற்றிய உரை)**

# திரைப்பட விருது வழங்கும் விழா

மாண்புமிகு செய்தி–விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன் அவர்களின் வரவேற்புரையுடன் விழா தொடங்கியது.

மேதகு ஆளுநர் நீதிபதி எம். ஃபாத்திமா பீவி அவர்கள் விழாவிற்கு தலைமையேற்று சிறந்த படங்களுக்கான முதல், இரண்டு, மூன்றாம் பரிசுகளைப் பெற்றப் படங்களின் தயாரிப்பாளர்களுக்கு விருதுகளையும் காசோலையினையும் வழங்கினார். அத்துடன் சிறந்த படத்திற்கான சிறப்புப் பரிசினையும், பெண்களைப் பற்றி உயர்வாக சித்தரிக்கும் படத்திற்கான சிறப்பு பரிசினையும் வழங்கினார்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 21 சிறந்த நடிகர்கள், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு விருதுகளையும், தங்கப் பதக்கத்தினையும் வழங்கினார். அத்துடன் 5 கலைஞர்களுக்கு கலை வித்தகர் விருதினையும், சுப்ரீம் ஸ்டார் திரு. சரத்குமார் அவர்களுக்கு 1996ஆம் ஆண்டிற்கான எம்.ஜி.ஆர். விருதினையும் வழங்கி சிறப்புரையாற்றினார்.

சூப்பர் ஸ்டார் திரு. ரஜினிகாந்த் அவர்கள் விழாவில் விருதுப்பெற்ற கலைஞர்களை பாராட்டி உரையாற்றினார்.

## ஆளுநர் உரை

வியாபார நோக்கில் இல்லாமல் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் திரைப்படங்கள் தயாராக வேண்டும்.

வாழ்க்கையின் எதிர்மறையான எண்ணங்களைப் பிரதிபலிக்கும்




தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் சிறந்த திரைப்படங்கள், திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழிற்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரை தேர்ந்தெடுத்து விருதுகள் வழங்கி வருகிறது. 1997ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள் வழங்கும் விழா 8.12.98 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களுக்கு அரசின் சார்பாக – என் சார்பாக நன்றியை வழங்குகின்றேன்.

ஆளுநர் அவர்கள் இந்த விழாக்களுக்கு தலைமையேற்பது என்பது அவருக்கும் ஒரு கடமை.

அவர் தலைமையேற்க வேண்டுமென்பது ஒரு மரபு. அந்த மரபுக்கும் கடமைக்கும் ஏற்ப என்பது மாத்திரமல்லாமல், அம்மையார் அவர்கள் தமிழ் மக்கள்பால் கொண்டுள்ள அளவற்ற அன்பின் காரணமாக இந்த நிகழ்ச்சியிலே அவர் கலந்து கொண்டு பரிசு பெற்றவர்களை, விருது பெற்றவர்களை வாழ்த்தவிருக்கிறார்கள். அவருக்கு நான் தமிழக அரசின் சார்பாகவும், என் சார்பாகவும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விருதுகளைப் பெற்றுள்ள அனைவரையும் நான் ஆளுநர் அவர்களோடும், தம்பி ரஜினிகாந்த் அவர்களோடும் உங்கள் அனைவரோடும் சேர்ந்து வாழ்த்துகிறேன்.





வண்ணம் திரைப்படங்கள் அமையக் கூடாது. நல்ல விஷயங்களை, மக்களின் எண்ணங்களைத் தெரிவிக்கும் வகையில் இருக்க வேண்டும்.

சமீப காலமாகத் திரைப்படங்களின் தரம் குறைந்து வருகிறது. சட்டங்களைக் கையில் எடுத்துக் கொண்டும், சில சமயங்களில் சட்டத்துக்கு எதிராகவும் செயல்படுவதுப் போன்ற திரைப்படங்கள் வருகின்றன. எனவே, தணிக்கைக் குழுவின் கண்காணிப்பில் சிறந்த திரைப்படங்கள் உருவாக வேண்டும்.

உலகமே வியக்கும்வண்ணம் இதுவரை 28 ஆயிரம் திரைப்படங்களும், ஆயிரக்கணக்கில் குறும்படங்களும் இந்தியாவில் தயாராகி உள்ளன.

அண்மைக் காலமாக தமிழ்த் திரைப்படங்கள் தேசிய அளவில் விருதுகளைப் பெற்று வருகின்றன. திரைப்பட வளர்ச்சிக்குத் தமிழக அரசு அளித்து வரும் உதவிகள் பாராட்டப்பட வேண்டியவை.

## முதலமைச்சர்

இன்றைய தினம் நடைபெறுகின்ற சிறப்பு வாய்ந்த இந்த இனிய விழா ஆளுநர் அவர்களுடைய பேருரையோடு நிறை வுறவிருக்கின்றது. இந்த விழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு, விருது பெற்றவர்களையும், பரிசு பெற்றவர்களையும் வாழ்த்திய தம்பி



**கேளிக்கை வரியை குறைத்தது கழக அரசு**

திரைப்படத்துறைக்கு இன்னும் பல நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று கோரிக்கைகள் இருந்தாலுங்கூட, இந்த அரசைப் பொறுத்த வரையில் ஆற்றியுள்ள பெரும் சாதனை 89ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது 54 சதவிகிதமாக இருந்த, கேளிக்கை வரியை 40 சதவிகிதமாகக் குறைத்து அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றியிருக்கிறேன். பிறகு 98இல் இப்போது அந்த 40 சதவிகித கேளிக்கை வரியையும் 30 சதவிகிதமாகக் குறைத்து அதன் காரணமாக அரசுக்கு மொத்த இழப்பு நாற்பது கோடி ரூபாய் என்றாலும், அதை சமாளித்துக் கொண்டு கேளிக்கை வரியைக் குறைத்துள்ள ஆட்சி இந்த ஆட்சி.

அது மாத்திர மல்ல, வெளிப்புற காட்சி களுக்கு ஒரு நாளைக்கு படப் பிடிப்பிற்கு ரூ. 2,500 என்றி ருந்ததை 96ஆம் ஆண்டு முதல் ரூ. 500ஆக குறைத் திருப்பதும் இந்த ஆட்சிதான். சிற்பக் கலைக்கூடங்கள் இருக்கின்ற பகுதியில் தொன்மை வாய்ந்த இடங்களில் படப்பிடிப்பு என்றால் ஒரு நாளைக்கு ரூ. 5,000 என்று கட்டணம் வசூலிக்கப்பட்டது. அதை திரைப்படத் துறையினரின் வேண்டுகோளையேற்று ரூ. 5,000 என்பதை ஆயிரம் ரூபாயாக குறைத்திருப்பதும் இந்த ஆட்சியிலேதான்.



குறைந்த செலவில் படங்கள் தயாரிக்கப் படுமேயானால், அவை தரமான படங்களாக இருக்குமேயானால் அவைகளுக்கு ஏற்கெனவே ஒரு இலட்சம் என்று தொடங்கி பிறகு 3 இலட்சம் என்று விரிவடைந்து, இன்றைக்கு 5 இலட்சம் ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. 95ஆம் ஆண்டுக்கான தரமான குறைந்த செலவு படங்கள் 96ஆம் ஆண்டில் 40 படங்களுக்கு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றது. 1996ஆம் ஆண்டுக்கான படங்களுக்கு 1997இல் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

**சமூக மேம்பாட்டிற்கு உதவுகிற படத்திற்கு வரிவிலக்கு**

அதுமாத்திரமல்ல; சமூக மேம்பாட்டிற்கு உதவுகின்ற மிக முக்கியமான தகுதி வாய்ந்த படங்களாக இருந்தால், அந்தப் படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்கும் அளிக்கப் பட்டிருக்கின்றது. மை இந்தியா, சாதி சனம், புதல்வன், குடும்பச் சங்கிலி, எல்லாம் பணத்துக்காக, நீதியின் வாசலிலே ஆகிய இந்த ஆறு படங்களுக்கும் அவைகள் சமூக மேம்பாட்டிற்காக வெளியிடப்பட்ட தகுதிவாய்ந்த படங்கள் என்ற காரணத்திற்காக கேளிக்கை வரி விலக்களிக்கப்பட்டது.

***திருட்டு விடியோவை ஒழிக்க தனி காவல்படை***

இதையெல்லாம்விட மிக முக்கியமாக இந்த திருட்டு வீடியோ, சி.டி. டிஸ்க் – இதைக் கண்டுபிடிக்க தனி காவல் படை ஒன்றையே இன்றைக்கு உருவாக்கி அநேகமாக திருட்டு வீடியோ ஒழிக்கப்பட்டு விட்டது என்று மகிழ்ச்சி அடையக் கூடிய அளவிற்கு திரையுலகத்திற்கு ஒரு ஆறுதலைத் தந்துள்ள ஆட்சியும் இந்த ஆட்சிதான்.

திரைப்படத் தொழிலாளர்களுக்கு காப்புறுதி திட்டம் (இன்சூரன்ஸ்) ஒன்று அறிமுகப்படுத்தி முதலிலே திரைப்படப்பிடிப்பில் இறந்து போகும் தொழிலாளர் குடும்பத்திற்கு பத்தாயிரம் ரூபாய் நிதி வழங்கும் திட்டத்தைத் தொடங்கிய இந்த அரசு, இன்சூரன்ஸ் திட்டத்தின் மூலம் ரூ.50 ஆயிரம் வழங்க வழி வகுத்துள்ளது. ஸ்டண்ட் நடிகர் ஒருவர் படப்பிடிப்பிலே விபத்தின் காரணமாக இறந்துவிடுவாரேயானால் அவருடைய குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சர் நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

**இந்த ஆண்டு முதல் கூடுதலாக 500 நலிந்த கலைஞர்களுக்கு உதவி**




நன்றாக இருக்கின்ற கலைஞர்கள், படத்திலே நடித்து ஒரளவிற்கு வசதியாக இருக்கின்ற கலைஞர்களுக்கு பரிசுகளையும் பதக்கங்களையும் வழங்குகிறீர்கள். வயதான, நலிந்த கலைஞர்களின் கதி என்ன என்ற கேள்விக்கு விடை காண வேண்டுமென்பதற்காக 71ஆம் ஆண்டு நான் இரண்டாம் முறையாக ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது வயதான நலிந்த கலைஞர்களுக்கு மாதம் ரூ. 75 ஒய்வூதியம் வழங்கப்பட்டது. 89ல் நான் மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது அது மாதம் ரூ. 250 என்று உயர்த்தப்பட்டது. 92ஆம் ஆண்டு அது ரூ.400 ஆக உயர்த்தப்பட்டது. இப்போது 96ஆம் ஆண்டு அது மாதம் ரூ.500ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. மாதந்தோறும் அவ்வாறு ரூ. 500 பெறுகின்ற நலிந்த கலைஞர்களின் எண்ணிக்கை 4,563 பேர். ஆண்டுதோறும் மேலும் 300 நலிந்த கலைஞர்களை தேர்ந்தெடுத்து ஒய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு முதல் 300 என்பதை 500 நலிந்த கலைஞர்கள் கூடுதலாக உதவி பெறும் வகையில் ஆணையிடப்பட்டுள்ளது.

அதைப்போல திரைப்படப் பயிற்சிக் கல்லூரியின் சிறந்த மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. அவர்களில் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர், சிறந்த நடிகர் என்று இப்படி ஐந்தாறு பிரிவுகளில் ஒவ்வொன்றுக்கும் ஒரு பவுன் எடையுள்ள தங்கப்பதக்கமும், ரூ.5,000 ரொக்கப் பரிசும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.



இப்படியெல்லாம் திரைப்படத் துறைக்கு தன்னால் இயன்ற எல்லா உதவிகளையும் இந்த அரசு செய்து வருகிறது. அது மேலும் மேலும் திரைப்படத்துறையை வளர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான்; ஒரு ஊக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றுதான் இந்தப் பரிசளிப்பு விழாக்கள், விருது வழங்கும் விழாக்கள் நடைபெற்று வருகின்றன.

## திரு. ரஜினிகாந்த்

மக்களின் அடிப்படை பிரச்சினையைப் பற்றி பேசுங்கள். சாதி எங்கே இருக்க வேண்டும். வீட்டுக்குள் சாதி இருக்க வேண்டும். மதம் நெஞ்சுக்குள் இருக்க வேண்டும். கடவுள் பூஜை அறையிலும், மசூதியிலும், தேவாலயங்களிலும் இருக்க வேண்டும். அது தெருவுக்கு வந்துவிடக்கூடாது.

மதங்களை, சாதிகளை ஒழிக்க முதல்வர் கலைஞர் அவர்கள் கூட சமத்துவபுரம் என்ற ஒரு திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்கள்.

டிசம்பர் 6 அன்று எந்த அசம்பாவிதமும் நேராமல் தமிழக அரசும், முதல்வர் கலைஞர் அவர்களும் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு எனது முதல் பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன். அதைவிட அதிகமாக தமிழக மக்களுக்கு எனது பாராட்டுக்கள். தமிழக மக்கள் அளித்த ஒத்துழைப்பை மிகவும் பாராட்டுகிறேன்.

விழா முடிவில், செய்தி–சுற்றுலாத்துறை செயலாளர் திரு சி. இராஜரெத்தினம், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

# மனித உரிமைகளும் - கலைஞரின் அணுகுமுறைகளும்

**- இரா.பரதன்**

உலக வரலாற்றில். மனித உரிமை என்பது எங்கெல்லாம் மறுதலிக்கப்படுகிறதோ? அழுத்திவைக்கப்படுகிறதோ? அங்கெல்லாம், ஆதிக்கங்களை எதிர்த்து, புரட்சிகளும் – போராட்டங்களும் வெடித்திருக்கின்றன; உரிமைகள் பெறப்பட்டன; என்பதெல்லாம், 'மனித உரிமைப் போர்களாகவே பல்வேறு தருணங்களில் பரிணமித்திருக்கின்றன. அப்படிப்பட்ட உரிமைப் போர்கள் அல்லது விடுதலைப் போராட்டங்கள், என்பவையெல்லாம், பிறநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து, தங்களது உரிமையை மீளப்பெறல் என்பதாகும்.

விடுதலைப் போராட்டங்கள் என்ற நோக்கில் அவை ஆதிக்க வெறி கொண்ட பிறநாட்டவரின் 'ஆளுகைகளை எதிர்த்துத் தங்களது உரிமைகளைப் பெறுவதாக இருக்கும். ஆனால், இந்தியத் திருநாட்டைப் பொறுத்தவரையில், 'சுதந்திரம்' என்பது பல்வேறு முகங்களைக் கொண்டதாக இருந்தது என்றே கருதலாம். ஏனெனில், நாடு ஆங்கிலேய ஆதிக்கத்தின் கீழ் சிக்குண்டிருந்த அதேவேளையில், இந்தியச் சமூக நிலையில், உள்ளமைப்புகளில் பல்வேறு ஆதிக்கங்கள் வேரூண்டியிருந்தன.

அதனால்தான், இந்திய நாட்டின் விடுதலைக்கு வித்திட்ட அண்ணல் காந்தியடிகள் சுதந்திரத்திற்கு இணையாக, நம் சமுதாயத்தில் மண்டிக் கிடந்த பல்வேறு அவலங்களைக் களைவதில் அதிக முக்கியத்துவம் காட்டினார். சுரண்டல் ஆங்கில ஏகாதிபத்தியத்தின், அடக்கி ஆளும் ஆதிக்கம் ஒருபுறம் இருந்தாலும், காலங்காலமாக நம் மண்ணில் சனாதனத்தின் பெயரால், வேத ஆகமத்தின் பெயரால், உயர் சாதி–தாழ்ந்த சாதி எனும் வேற்றுமைகளும், பெண்களை அடக்கியாளும் ஆணாதிக்கம் போன்ற சமூக அநீதிகளும், அடி ஆழம் வரை அசைக்கவொணா வகையில் வேரூன்றியிருந்தன என்பது மிகையன்று. அதனால்தான், மூட நம்பிக்கைகளை விட்டொழித்து, 'மனிதனை மனிதனாக' மதிக்கின்ற வகையில், தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சமூக விடுதலை பெற்றுத்தந்திட அவர் பெரிதும் போராடினார். 'ஆண்டவனின் முன்னால் அனைவரும் சமம்' என்ற நோக்கில், கோவிலுக்குள் கூட அல்ல – கோவிலைச் சுற்றியுள்ள தெருக்களில்கூட, அம்மக்கள் பிரவேசிக்கக் கூடாது என்றிருந்த 'வருணாசிரம வறட்டு வேதாந்தத்தை' எதிர்த்து, ஆதிதிராவிடர்களை அழைத்துக் கொண்டு ஆலயப் பிரவேசம் நடத்தினார்; அவர்களை, ஏனைய சாதியினருடன் சேர்ந்து, ஆண்டவனைத் தரிசித்திட வழிவகை காண முயன்றார். ஏனெனில், நம்முடைய சனாதனச் சமூக அமைப்பில், அடக்கி, அழுத்தி வைக்கப்பட்டிருந்த, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமை



பெற்றுத் தருவதில் அண்ணல் காந்தியடிகள் அவர்கள் முன்னோடியாகத் திகழ்ந்தார். கேரள மாநிலம் வைக்கத்திற்கு, அண்ணல் காந்தியடிகளின் வேண்டுகோளை ஏற்று, அங்கு தாழ்த்தப்பட்ட மக்களை அழைத்துக் கொண்டு ஆலயப்பிரவேசப் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திய **தந்தை பெரியார்** அவர்கள் 'வைக்கம் வீரர்' என்று புகழப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தகுந்தது.

நாடு சுதந்திரம்பெற்று, 50 ஆண்டுகள் நிறைவுற்ற இத்தருணத்தில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தருவதில், இந்தியாவிலேயே **கலைஞர்** தான் பல முன்னோடிச் செயலாக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளார் என்றால், அது மிகையாகாது. சுதந்திரப் போராட்டங்களுக்கிடையில், ஆலயப் பிரவேசத்தின் மூலம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமை பெற்றுத்தர முயலப்பட்டது. ஆனால், **கலைஞர்** அவர்கள்தான், 'ஆதிதிராவிடர்களும் அர்ச்சகர் ஆகலாம்' என்று அவர்களை 'கருவறைப் பிரவேசத்திற்கே வழிகாட்டும்' வகையில் சட்டமியற்றினார். அதுமட்டுமல்ல, ஆலய–அறங்காவலர் குழுக்களில் ஆதிதிராவிடர்களும் அங்கம் வகித்திடும் வகையில் உரிமையளித்துச் சட்டமியற்றியதும் **கலைஞர்** தான்.

மட்டுமல்லாமல், உழைக்க மட்டுமே உரிமை பெற்றவர்களாகக் கருதப்பட்டு, அடக்கியாளப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்குச் சமூக அமைப்பிலும், பொருளாதார நிலையிலும் அவர்களுடைய உரிமைகளை நிலைநாட்டிட அடிகோலியவரும், **கலைஞர்** தான். அவ்வகையில், குடியிருக்கக்கூடச் சொந்த இடமின்றி, நில உடைமையாளர்களின் தயவில் குடிசைபோட்டு வாழ்ந்து வந்த அம்மக்களுக்கு 1970களில் அந்தந்த மனையிடங்களை அவர்களுக்கே சொந்தமாக்கி ஆணை வெளியிடப்பட்டதும் அன்றைய **கலைஞர்** ஆட்சியில்தான். அதைப் போலவே, அரசின் சார்பில் மனையிடங்களைக் கையகப்படுத்தி இலவச வீட்டுமனைப் பட்டாக்களைத் தந்ததுடன், இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில், ஆதிதிராவிட இன மக்களுக்கு இலவசக் கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டதும் **கலைஞர்** அரசில் தான். இவற்றிற்கெல்லாம் மேலாக, உயர் வகுப்பினருடன் சமமாக வாழ உரிமை பெற்றவர்களாக, அவர்களது நிலை உயர்த்திட **'சமத்துவபுரம்'** எனும் சமுதாயப் புரட்சிகாணும் திட்டமும் **கலைஞரால்** தான், இந்தியாவிலேயே முன்னோடியாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இவற்றோடு, ஆதிதிராவிட மக்களின் பொருளாதார நிலை உயர்த்திட, இலவச நிலப் பட்டாக்கள் வழங்கி அவர்களை நில உடைமையாளர்களாகவும், சுயதொழில் – வேலைவாய்ப்பு நோக்கில், **'தாட்கோ'** என்ற தனி அமைப்பினை உருவாக்கி, அவர்களை வணிகம்–சேவை போன்ற அமைப்புகளின் உடைமையாளர்களாக, பிற சமூகத்தினரைப் போன்று பொருளாதார உரிமை பெற்றவர்களாக ஆக்கிடும் செயற் திட்டங்களும் **கலைஞராலேயே** நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பவையும் மறுக்கவியலாச் சான்றுகளாகும்.

## ஒவ்வொரு வீட்டிலும் – ஊரிலும் – அலுவலகத்திலும் மனித உரிமைகள் பேணப்பட வேண்டும்

### - முதலமைச்சர் கலைஞர் அவர்களின் 'மனித உரிமை நாள்' செய்தி

இன்று (10.12.1998) மனித உரிமை நாள். உலக நாடுகள் அவையின் பொதுக்குழுவால் உலக மனித உரிமைகள் அறிவிக்கப்பட்டு - 50 ஆண்டுகள் நிறைவுபெறும் நாளாகவும் இந்நாள் உலக முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் முறையாகப் பராமரிக்கப்படும் சமுதாயம் உயர்ந்த நாகரிகம் படைத்த சமுதாயமாக மதிக்கப்படுகிறது. மனிதநேயம், சாதி மத பேதமற்ற சூழல்கள், மதச்சார்பின்மை ஆகியவை ஒரு சிறந்த மனித சமுதாயத்தின் சீரிய பண்புகள். வாழும் உரிமை, சுதந்திரம், சமத்துவம், கண்ணியம் ஆகியவை முக்கியமான மனித உரிமைகள். இத்தகைய மனித உரிமைகள் இந்தியத் திருநாட்டில் முற்றிலுமாக காக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன், 1993 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் காப்புச் சட்டத்தின் (Protection of Human Rights Act, 1993) கீழ், தேசிய மனித உரிமை ஆணையம் மத்திய அரசினால் அமைக்கப்பட்டது. தமிழகத்தில் மனித உரிமைகள் சிறந்த முறையில் பாதுகாக்கப்பட 17.4.1997 முதல், மாநில மனித உரிமை ஆணையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

தமிழகத்தில் மனித உரிமை காக்கும் பணிகள் மேலும் செம்மை பெற வேண்டும். இதற்குச் சமுதாயத்திலுள்ள பல்வேறு அரசியல் இயக்கங்கள், தனியார் தொண்டு நிறுவனங்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், காவல்துறையினர், பத்திரிகைத் துறையினர் உள்ளிட்ட அனைத்துப் பிரிவினரும் ஒருங்கிணைந்து அரசுக்கு உறுதுணை புரிந்திட வேண்டும்.

ஒரு நாடு என்ற அளவில் மட்டுமல்லாமல், ஒவ்வொரு வீட்டிலும்,ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு அலுவலகத்திலும் மனித உரிமைகள் பேணப்படவேண்டும். அப்பொழுதுதான் நாடு முழுவதிலும் அமைதி நிலைபெறும். அத்தகைய சூழ்நிலை எங்கும் - என்றும் நிலைபெற ஒவ்வொருவரும் உறுதியுடன் தொண்டாற்றுவோம் என இந்த மனித உரிமை நாளில் உறுதியேற்போமாக!

***பெண்ணுரிமை :***

பிறந்த மண்ணைத் தாயாகப் போற்றிடும் வழக்கம் நம் இந்திய மண்ணுக்கே உரியதுதான் என்றாலும், 'ஆணுக்குக் கீழாகவே வைத்துப் பெண்ணை, நமது சமூகம், உரிமை மறுக்கப்பட்டவளாகவே காலங்காலமாக அவமதித்திருக்கிறது என்றால், அது மிகையாகாது'.

எனவேதான் அண்ணல் காந்தியடிகள், "சமூக நீதி உருவாக வேண்டுமானால், பெண்ணைப் பலவீனமான பாலாகக் கருதாமல், முதலில் பெண்களுக்குச் சம உரிமை வழங்கப்பட்டேயாக வேண்டுமென்று" மிகுந்து வலியுறுத்தியுள்ளார். "ஒத்த வாழ்க்கையை மேற்கொண்டு வரும் பெண்களும், ஆண்களும் அடிப்படை உரிமையுள்ளவர்கள்" – "ஆண்–பெண் என்ற இணையில், ஏதாவது ஒன்றைத் தகுதியால் தாழ்த்துவதென்பது, இருவரையும் ஒரு சேரக் கெடுப்பதாகிவிடும்" போன்ற முழக்கங்களின் மூலம் பெண்ணுரிமையை நிலைநாட்டிட எத்தணித்தார்.

இந்நோக்கில், ஆணாதிக்க முறை ஒழிக்கப்பட வேண்டுமெனில், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்பட வேண்டும்; பொருளாதாரத்தை முன்னிலைப்படுத்துகின்ற நம் சமூக அமைப்பில், பெண்ணின் உரிமையை நிலைநிறுத்திட, "பெண்களுக்குப் பெற்றோர்களின் சொத்தில், மகனைப் போலவே – மகளுக்கும் சொத்தில் பங்குண்டு" என்று **கலைஞர்** ஆணை பிறப்பித்தார்.

பெண்ணுரிமை மறுதலிக்கப்பட்ட நம் சமூக அமைப்பில், சம்பாதிக்கின்றவன் ஆண் என்பதாலேயே வழிவழியாக 'ஆணாதிக்கம்' என்பது இயற்கையானதே என்று கருதப்பட்டுவந்த நிலை. எனவே, குடும்பத்தைக் காப்பதில், ஆணுக்கு இணையாகப் பெண்ணும் பொருளீட்டுபவளாக மாறுகின்றபொழுது, அதாவது குடும்பச் சுமையைத் தாங்குவதில், ஆணோடு–பெண்ணும் தோள் கொடுக்கத் தொடங்கும்போது பெண்ணின் 'சமஉரிமை' எய்தப்பட்டு விடுமல்லவா? எனவே, அத்தகு ஒரு நிலையை உருவாக்கிட, முதலில், பெண், கல்வி கற்றவளாக, விபரம் தெரிந்தவளாக விழிப்புப் பெற்றாக வேண்டுமெனும் இலட்சிய நோக்கில், **கலைஞரால்** உருவாக்கப்பட்டது தான், **'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டம்'**. ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவி திட்டம் வழங்கும் இத்திட்டத்தில், பெண் எட்டாவதுவரை படித்திருக்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. ஏனெனில், "பெண் கல்வி கற்று, மணமுடித்துப் பின் குடும்பத் தலைவியாக பரிணாமம் பெறுகிறபொழுது, தனது குழந்தைகளைப் படிக்க வைத்திடப் பெரிதும் எத்தணிப்பாள். ஏனெனில், பெண் கல்வி கற்றால், அது எதிர்காலச் சமுதாயத்தை அறிவார்ந்த சமுதாயமாக ஆக்கிடும் என்பது உறுதியல்லவா?

அதோடுமட்டுமல்ல, "ஆணுக்கு நிகராகப் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் போட்டி போட்டு முன்னேறிட வேண்டும்; எனவே, பெண்களுக்குக் கல்விகற்கும் வாய்ப்பு விஸ்தரிக்கப்பட்டாக வேண்டும். எனவேதான், **கலைஞர்** அவர்கள் பெண்களுக்குக் கல்வி கற்கும் வாய்ப்பை அதிகரித்திடும் வகையில், ஆதிதிராவிட இனப் பெண்கள் கல்வியைத் தொடர்கின்ற வகையில், பிளஸ்–2 வரையில் தொடர்கல்வி ஊக்கத்தொகை வழங்கும் திட்டம், அனைத்து இன, மதத்தைச் சார்ந்த ஏழைப் பெண்கள், இலவசமாகப் பட்டப்படிப்பு பயின்றிட, **ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவுப் பட்டப்படிப்பு உதவித் திட்டம்** ஆகியவற்றையும், வட்டார அளவிலுள்ள அரசு ஆண்கள் கலைக் கல்லூரிகளில், பெண்களும் பட்டம் பயில வாய்ப்பு, மேனிலைப் பள்ளிகளிலிருந்து பிரித்துப் பெண்களுக்கெனத் தனியாக உயர்நிலைப் பள்ளிகளையும் உருவாக்கியுள்ளார். வேலைவாய்ப்பில், 5ஆம் வகுப்பு வரை, ஆசிரியைகள் மட்டுமே நியமனம் என்ற தனி உரிமை; பட்டம் பயின்ற பெண்கள் சுய வேலைவாய்ப்புப் பெற்றிடும் வகையில், பெண் தொழில் முனைவோர் பயிற்சிகள், சுயமாகத் தொழில் தொடங்கிட முதலீட்டு மானியம் போன்றவை அளிக்கப்படுகின்றன.

கல்வி கற்காத கிராமப்புற மகளிர் பொருளீட்டிடும் வகையில், அவர்களைச் சுயச் சார்புடையவர்களாக மாற்றிடும் வகையில், பல்வேறு மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன. இவ்வாறாகப் பெண்ணை, ஆணுக்கு நிகர் என்ற உரிமையினை எய்திடும் வகையில், பல்வேறு திட்டங்கள் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பு வைக்கின்ற வகையில், மனித உரிமைச் சட்டத்தை அமல்படுத்துவதில், **கலைஞர்** அவர்களால் தனிக்கவனம் செலுத்தப்பட்டது. இந்திய அளவில், 12.10.1993ஆம் நாள் முதல் 'தேசிய மனித உரிமை ஆணையம்' அமைக்கப்பட்டு, 14.12.1993 அன்றே 'மாநில மனித உரிமைகள் ஆணையம்' அமைத்திடலாம் எனத் தேசிய ஆணையத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தும், 1996ல் **கலைஞர்** அவர்கள் மீண்டும் பதவியேற்ற பிறகுதான், 20.12.1996ல், தமிழ்நாட்டில், 'மாநில மனித உரிமை ஆணையம்' அமைக்கப்பட்டது.

மேலும், அரசு நலத்திட்டங்கள், நடைமுறைகள் ஆகியவற்றை மக்கள் அறிந்து கொள்ள, சட்டப்பூர்வமான உரிமையுண்டு என்பதை நிலைநிறுத்திட, **கலைஞர்** அவர்களால், 'The Tamil Nadu Right to Information Act, 1997 என்ற வரலாற்றுச் சிறப்புக்குரிய சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

சட்டமியற்றியதோடு நின்றுவிடாமல், 'மக்களுக்கு நேரடிப் பயனளிக்கக்கூடிய திட்டங்கள் மற்றும் பணிகள் பற்றியும், மக்கள் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம், அதற்கான நடைமுறைகள் மற்றும் விதிமுறைகள், அப்பலன்களைப் பெறப் பயன்படுத்த வேண்டிய படிவங்கள் என்ன, அதனைப் பெற எந்த அலுவலரை அணுகவேண்டும், எவ்வளவு நாட்களுக்குள் அப்பலன்களைப் பெறமுடியும் என்பன போன்றவைகளைத் தொகுத்து, **'மக்கள் சாசனம்'** வெளியிடச் செய்ததும் **கலைஞர்** தான்.

இவைகளோடு மட்டுமல்லாமல், அரசு வெளியிடும் அனைத்து ஆணைகள், நலத்திட்ட உதவிகளுக்கான விண்ணப்ப படிவங்களையும், பொதுமக்கள் எளிதாகப் பெற்றிடும் வகையில், இந்தியாவிலேயே முதன்முதலாக **'சமுதாய இண்டர்நெட்'** மையங்களை அமைத்திட ஆணையிட்டுள்ளவரும் **கலைஞர்** தான்.

நாடு சுதந்திரமடைந்து 50 ஆண்டுகள் ஆகிவிட்ட இந்நிலையில், மக்களுக்க உரிய உரிமைகள் தரப்பட வேண்டும் என்பதிலும், சமுதாய நோக்கில் எந்தப் பிரிவைச் சார்ந்தவராக இருந்தாலும், அவர்களது உரிமைகளைக் காத்திடுவெதிலும், உரிமைகளை வழங்குவதிலும் **'ஜனநாயகக் காவலராக'**க் **கலைஞர்** திகழ்கிறார் என்பது மறுக்கவியலா ஒன்றாகும். ★

**விவேகம் என்னும்**
**வெள்ளிமுளைத்து,**
**சாதிப்பித்து என்னும் சனி**
**தொலைந்தால்தான் சமத்துவம்**
**எனும் ஞாயிறு தோன்றும்!**

**— கலைஞர்**

## சென்னையில் அமையும் தேசிய சித்த மருத்துவ கழகத்திற்கு

## தாம்பரம் அருகே 14.78 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு

### முதல்வர் கலைஞர் ஆணை.

சென்னையில், “தேசிய சித்த மருத்துவக் கழகம்” ஒன்றை ரூ.35 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கு மத்திய அரசின், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை முன்வந்துள்ளது. இந்த மருத்துவக் கழகத்தை அமைப்பதற்காக, தாம்பரம் சானிடோரியத்திற்கு அருகே கடப்பேரி கிராமத்தில், தமிழ்நாடு அரசின் சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறையின் பொறுப்பிலுள்ள ரூ.6.64 கோடி மதிப்புள்ள 14.78 ஏக்கர் நிலத்தை, மத்திய அரசுக்கு இலவசமாக ஒதுக்கீடு செய்து முதல்வர் **கலைஞர்** ஆணையிட்டுள்ளார்.

இதன் மூலம் அமையவிருக்கும் தேசிய சித்த மருத்துவக் கழகத்தின் துணையோடு, சித்த மருத்துவத் துறை தமிழகத்தில் மேலும் வளர்ச்சி பெற நல்ல வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

# அரசு ஆணைகள்

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கட்டுப் பாட்டில் இயங்கும் பள்ளி/கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவ/ மாணவியர்க்கு வழங்கப்படும் உணவுக் கட்டணம் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வருகிறது. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/ மாணவியர்க்கு மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு வழங்கப்படும் உணவுத் தொகையில் 2/3 பங்கு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப் பட்டோர் நலத்துறையின் மானியம் பெறும் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் விடுதிகளில் தங்கிப்பயிலும் பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவ/ மாணவியர்க்கு வழங்கப்பட்டு வருகிறது.

அரசு ஆணை(நிலை) எண்.58, பிற்படுத்தப் பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, நாள் 9.6.98ல், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை கட்டுப்பாட்டில் இயங்கும் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்களின் உணவுக் கட்டணத்தை ஒரு மாதத்திற்கு ஒரு மாணவருக்கு ரூ.180/லிருந்து ரூ.225 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. அவ்வாணைக் கேற்ப அரசு ஆணை (நிலை) எண்:107, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை, நாள் 5.11.98ல், பிற்படுத்தப் பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மானியம் பெறும் தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவ/ மாணவியர்களுக்கும் வழங்கப்பட்டு வந்த உணவுக் கட்டணம் ரூ.120லிருந்து ரூ.150 ஆக (ரூ.225ல் 2/3 பங்கு) 1.11.98 முதல் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. ★

## 1998–99ஆம் ஆண்டில் ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் ரூ.15.93 கோடி செலவில் 32,514 தெரு விளக்குகள் புதிதாக அமைக்கப்படும்

தமிழ்நாட்டிலுள்ள, ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், 32,514 புதிய தெரு விளக்குகள் ரூ.15.93 கோடி செலவில் அமைக்கப்படவுள்ளன. இதில் ஊராட்சிகளில் 25,714 விளக்குகளும், பேரூராட்சிகளில் 4,800 விளக்குகளும், நகராட்சிகளில் 2,000 விளக்குகளும் புதிதாக அமைக்கப்படும். இந்த விளக்குகள் அமைப்பதற் கென ஏற்படும் செலவினத்தை, கீழ்க்கண்டவாறு அரசு நிர்ணயித்துள்ளது.

அ) 1998-99ஆம் ஆண்டிற்கு, மாநிலத்தில் உள்ள ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளில் ஒரு தெருவிளக்கு அமைக்க, ஆகும் சராசரி செலவு ரூ.4,900 என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஆ) ஏற்கெனவே உள்ள தெருவிளக்கு மின்கம்பங்களில், ஒரு மின்விளக்கு பொருத்திட ஆகும் செலவு ரூ.740 என்ற விகிதத்தில், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கப்படும்.

இ) ஏற்கெனவே உள்ள தெருவிளக்குக் கம்பங்களில் உள்ள மின் விளக்குகளை அகற்றிவிட்டு, சோடியம்/பாதரச ஆவி விளக்குகளாக மாறுதல் செய்து பொருத்தும் பணிக்கு, ஒரு விளக்கிற்கு ரூ.550 என்ற விகிதத்தில் வழங்கப்படும். மின் விளக்கு பொருத்திகளை, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் மின் வாரியத்திற்கு வழங்க வேண்டும்.

தற்போது, நகராட்சிகளில் 4,000 தெருவிளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாகவும், பேரூராட்சிகளில் 1,600 தெருவிளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாகவும், ஊராட்சிகளில் 10,000 தெருவிளக்குகள் சோடியம் ஆவி விளக்குகளாகவும் மாற்றப்படும். ★

# "உலக தமிழ் இணையம் - கருத்தரங்க மாநாடு"



மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் 28.11.1998 அன்ற நடந்த மாநில பணி முனைப்புக் குழு கூட்டத்தில் தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமாக "உலக தமிழ் இணையம் - கருத்தரங்க மாநாடு" ஒன்றை 1999-ஆம் ஆண்டு பிப்ரவரி 7 மற்றும் 8 தேதிகளில் சென்னையில் நடத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

தமிழ்மொழி தொன்மையும், இலக்கிய வளமும் உள்ள மொழியாக இருந்த போதிலும் அதனை சர்வதேச அளவில் கணிப்பொறியில் ஏற்றுக்கொள்ளக் கூடிய வழிகாட்டும் குறிப்புப் பலகை (Tamil Key Board) அல்லது தமிழ் குறிப்புப் பலகை வசதி கணிப்பொறியில் தற்போது இல்லை. இந்தப் பிரச்சினைகளுக்கு உலக அளவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை எட்டுவது இந்த கருத்தரங்கின் மிக முக்கியமான நோக்கமாக அமைவதோடு, தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ் பரவி ஏற்றம் பெற்றிட ஊக்குவிப்பதாகவும் அமையும்.

இந்த மாநாட்டைச் சிறந்த முறையில் ஏற்பாடு செய்வதற்கு வரவேற்புக் குழு ஒன்றை பின்வருமாறு அமைத்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

<u>வரவேற்புக்குழுத் தலைவர்</u>

திரு. முரசொலிமாறன், நாடாளுமன்ற உறுப்பினர்
(Vice-Chairman, State level IT Task Force)

<u>வரவேற்புக்குழு உறுப்பினர்கள்</u>

1. மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்.
2. மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர்
3. மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்
4. செயலர், தொழில்துறை
5. செயலர், பொதுத்துறை
6. டாக்டர் எம்.அனந்தகிருஷ்ணன், துணைத் தலைவர், மாநில உயர்கல்விக்குழு
7. திரு.எஸ்.ரங்கராஜன் (சுஜாதா), எழுத்தாளர்
8. செயலர், தகவல் தொழில்நுட்பத்துறை - உறுப்பினர் - செயலர்

# தகவல் தொழில் நுட்பத்துறை மக்கள் இயக்கமாக வளர்த்தெடுப்போம்!

இக்கூட்டத்தில், தீவிர தகவல் தொழில்நுட்பக் கொள்கைகளை உருவாக்குதல், சிப்காட், எல்காட் ஆகிய நிறுவனங்கள் மூலம் சென்னையில் தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை மேம்படுத்துதல், இலண்டன் வேர்ல்டுடெல் நிறுவனத்துடன் இணைந்து சமுதாய இண்டர்நெட் மையங்களை அமைக்கும் திட்டத்தின் முன்னேற்றம், உலகத் தரத்திற்கு இணையாக தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமாக டானிடெக் நிறுவனத்தை அமைத்துச் செயல்படுத்துதல். தகவல் தொழில் நுட்பத் தொழில்களுக்கு வழங்கிட, உலகத் தரத்திற்கு இணையாக 1 இலட்சம் சதுர அடி பரப்பில் டைடெல் பார்க் நிறுவனத்தினை சென்னை தரமணியில் நிறுவுதல், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு சிறப்பு மூலதன நிதி வழங்குதல் ஆகியவை குறித்து மாநில தகவல் தொழில்நுட்பத் துறை மேற்கொண்ட நடவடிக்கைகள்





தகவல் தொழில் நுட்பத் துறையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள, தகவல் தொழில் நுட்பவியல் பணிமுனைப்புக் குழு தமிழில் மென்பொருள் தயாரிப்பினை மேம்படுத்திட அமைக்கப் பட்டுள்ள துணைக் குழு ஆகியவற்றின் முதல் கூட்டம் பணிமுனைப்புக் குழுவின் தலைவர் முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் தலைமையில் 28-11-1998 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

விரிவாகப் பரிசீலிக்கப்பட்டன. தகவல் தொழில் நுட்பத்தைத் தமிழக அரசு அலுவலகங்களிலும், தமிழக அரசின் சார்பு நிறுவனங்களிலும் கடைப்பிடிப்பது குறித்தும் பணி முனைப்புக்குழு பரிசீலித்தது. தமிழ்நாடு அரசும் எல்காட் நிறுவனமும் புதிதாக உருவாக்கியுள்ள இண்டர்

நெட் வெப்சைட்டினை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்துவற்கு முன் பணி முனைப்புக் குழு பரிசீலித்தது. வெப்சைட் குறியீடுகளாகிய www.elcot.com மற்றும் gistcinc.nic.in ஆகியவைகளில் தகவல் தொழில்நுட்பக் கொள்கைகள் குறித்த விவரங்களும், மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பம் குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளும் அடங்கியுள்ளன. மேலும், வெளிப்படையாகவும், பொதுமக்களின் நலனுக்காகவும் தமிழக அரசு மேற்கொள்ளும் பணிகளில் ஒரு பகுதியாக, அரசுத் துறைகளின் மக்கள் சாசனங்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் இண்டர்நெட் மூலம் பொதுமக்களின் தேவைகளுக்குக் கிடைக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

ஹார்டுவேர் துறையின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் தேவையான தமிழக அரசின் கொள்கைத் திட்டத்தை "மெய்ட்" MAIT நிறுவனத்தின் தலைவர் திரு.ராம் அகர்வால் அவர்கள் பணிமுனைப்புக் குழுக் கூட்டத்தில் விரிவாக எடுத்துரைத்தார்.

ஹார்டுவேர் தொழிலுக்கு தமிழகம் சிறந்த இடம் என்னும் நிலையை ஏற்படுத்திட



தேவையான அனைத்து நடவடிககைகளுமம மேற்கொள்ளப்படும் என்று முதல்வர் கலைஞர் உறுதியளித்தார்.

மாநில பணிமுனைப்புக்குழு, தகவல் தொழில் நுட்பம் குறித்த தேசிய பணி முனைப்புக் குழுவின் முதல் அறிக்கையினை ஆய்வு செய்ததுடன், ஹார்டுவேர் துறை பற்றி இரண்டாம் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது பற்றியும் விவாதித்தது. மாநில பணி முனைப்புக் குழு தேசிய பணி முனைப்புக் குழுவின் இரண்டாம் அறிக்கையின் பரிந்துரைகளை, தமிழக அரசுக்கு இக்கூட்டத்தின் மூலம் வலியுறுத்தியது.

> **சா**திமத பேதத்தொல்லைகள்
> மனிதச் சமூகத்தைவிட்டு
> தொலைய வேண்டுமானால்
> மனிதனுக்கு விஞ்ஞான அறிவும்,
> நாட்டில் விஞ்ஞான
> வளர்ச்சியும் தேவை.
>
> **- அறிஞர் அண்ணா**



சென்னையில், ஏற்றுமதி செய்யத்தக்க தரமான சாஃப்ட்வேர்களைத் தயார் செய்திடும் நிறுவனங்களை ஏற்படுத்துவதற்காக மத்திய அரசின் மின்னணுத் துறையினால் தரைநிலையம் அமைக்கும் திட்டம் குறித்தும் பரிசீலிக்கப்பட்டது. மின்னணுத் துறை கேட்டுக் கொண்டபடி, தரை நிலையத்திற்கு தேவையான நிலமும், வட்டியின்றி 1 கோடி ரூபாய் கடனும், இதர உள்கட்டமைப்பு வசதிகளும் மாநில அரசின் மூலம் அத்துறைக்கு வழங்கிட பணி முனைப்புக்குழு முடிவு செய்தது.

தமிழில் சாஃப்ட்வேர்களை மேம்படுத்துவதற்கான துணைக் குழுவின் தலைவர் டாக்டர் எம்.அனந்தகிருஷ்ணன் பணி முனைப்புக் குழுவிடம் தமிழ் எழுத்துகளுக்கான நிலைப்படுத்தப்பட்ட குறியீட்டு முறையை மேம்படுத்தி, அதனைக் கையாள்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை எடுத்துரைத்தார். 1999ஆம் ஆண்டு பிப்ரவரி 7,8 ஆகிய தேதிகளில் சென்னையில், "உலகத் தமிழ் இணையம் - கருத்தரங்க மாநாடு" நடத்துவது என்றும், அந்த மாநாட்டை முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் தொடங்கிவைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

தொழில் முதலீட்டாளர் நட்புறவுக் கொள்கைகளைக் கடைபிடிப்பதன் மூலம் தகவல் தொழில்நுட்பத் தொழில்களின் ஒவ்வொரு பிரிவின் வளர்ச்சியையும் ஊக்கப்படுத்துவதில் மாநில அரசுக்கு உள்ள பொறுப்பையும், நிர்வாகத்தின் அனைத்து அணுகு முறைகளையும் தொடர்ந்து மேம்படுத்தும் வகையில், தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத்தை கடைப்பிடிக்கச் செய்வதில் மாநில அரசுக்கு உள்ள பொறுப்பினையும் பணி முனைப்புக் குழு வலியுறுத்தியது.

மாண்புமிகு முத்லமைச்சர் அவர்களின் தலைமையில் 28-11.98 அன்று நடந்த தகவல் தொழில்நுட்பவியல் பணிமுனைப்புக் குழு முதல் கூட்டத்தில் பணிமுனைப்புக் குழு துணைத்தலைவர் திரு.முரசொலி மாறன், எம்.பி., அவர்களும் மற்றும் உறுப்பினர்களும், துணைக்குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டார்கள். ★

சேலம் மாவட்டத்தில்

# மூன்று சமத்துவபுரங்கள்

> *"சமத்துவத்தை நாட வேண்டுமானால் சாதிகள் தொலைந்திட வேண்டும்."*
>
> **- பேறறிஞர் அண்ணா**

தந்தை பெரியார் தமிழ் மண்ணில் சாதி ஒழியவும், சமத்துவம், சீர்திருத்தம் ஆகியவைகளுக்காக பாடுபட்டு வந்தார். அந்த வழியிலே பேறறிஞர் அண்ணாவும் பெரும் சேவை செய்தார். இத்தகைய பெரியோர்களின் கருத்துக்களை வடிவமைத்து செயலாக்கம் செய்ய நமது முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் இதயத்திலிருந்து உதித்த ஒரு நல்முத்து சமத்துவபுரம் ஆகும். அது இந்த நாட்டின் சாதி சமயமற்ற நிலை உருவாக நல்லோர் வகுத்த வழிக்கு ஒரு வித்தாகும். பல்வேறு தரப்பு மக்களும் ஒருங்கிணைந்து சமத்துவத்துடனும், சீர்திருத்தத்துடனும் சக வாழ்வு வாழ்ந்தால்தான் சாதி சமயமற்ற சமுதாயம் ஏற்படும் என்பதை உணர்ந்து அறிந்த முதலமைச்சர் அவர்களின் இதய பீடத்திலிருந்து வெளிவந்த ஒரு நல்ல திட்டம் இந்த சமத்துவபுரம் ஆகும். சாதிகள் ஒழிய வார்த்தைகளால் பல்லாண்டுகளாக கூறிவந்தும் சாதிக்காததை வாழ்க்கையில் ஒன்றாக வாழ்ந்து சாதிக்கலாம் என்ற தீர்க்க தரிசன சிந்தனையின் வெளிப்பாடுதான் சமத்துவபுரம்.

சமத்துவபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள 100 வீடுகளில் ஆதிதிராவிட மக்களுக்கு 40 வீடுகளும், பிற்பட்ட வகுப்பினருக்கு 25 வீடுகளும், மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்கு 25 வீடுகளும், இதர வகுப்பினருக்கு 10 வீடுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டு குலுக்கல் முறையில் வீடுகள் வழங்கப்பட்டு ஒன்று கலந்த சாதி சமய பேதமற்ற நல்வாழ்க்கை நடத்தும் வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் சமத்துவபுரம் அமைப்பதில் பேரார்வம் கொண்ட வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் பல முறை நேரடியாக ஒவ்வொரு பணிகளையும் கூர்ந்து ஆய்வு செய்ததின் பயன்தான் ஒரே நேரத்தில் மூன்று சமத்துவபுரங்கள் இம்மாவட்டத்தில் உருவாகியுள்ளன.

மாநிலத்திலேயே ஒரே நேரத்தில் 3 சமத்துவபுரம் அமைகின்ற ஒரு பெரும் பேறு சேலம் மாவட்டத்திற்கு கிட்டியுள்ளது.

**நிலத்தேர்வு**

இம்மாவட்டத்தில் சேலம் வட்டம், நெய்க்காரப்பட்டி கிராமம், சங்ககிரி வட்டம் கத்தேரி கிராமம் மற்றும் மேட்டூர் வட்டம், கோனூர் கிராமம் ஆகியவற்றில் சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சமத்துவபுரம் அமைக்கும் பணிகள் நெய்க்காரப்பட்டியில் 7.85 ஏக்கர் பரப்பில் 12.7.98ல் தொடங்கி 23.11.98 அன்றும், கத்தேரியில் 10.16 ஏக்கர் பரப்பில் 13.7.98ல் தொடங்கி 23.11.98 அன்றும், கோனூரில் 12.65 ஏக்கர்



பரப்பில் 17.8.98ல் தொடங்கி 2.12.98 அன்றும் முடிவுற்றன.

**நெய்க்காரப்பட்டி சமத்துவபுரம்**

நெய்க்காரப்பட்டி கிராமத்தில் தேர்வு செய்யப்பட்ட இடம் சேலத்திலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. சேலம் – ஈரோடு தேசிய நெடுஞ்சாலைக்கு மிக அருகில் அமைந்துள்ளது. இந்த நிலம் தனியாரிடமிருந்து ஏக்கர் ரூ.85,000 மதிப்பில் ரூ.7.67,328 செலுத்தி கையகப்படுத்தப்பட்டது.

**கத்தேரி சமத்துவபுரம்**

கத்தேரி கிராமத்தில் தேர்வு செய்யப்பட்ட இடம் சங்ககிரியிலிருந்து சுமார் 15 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இது சேலம்–ஈரோடு தேசிய நெடுஞ்சாலைக்கு வடக்கே சுமார் 2 கி.மீ. தூரத்தில் சாமி யம்பாளையம் அருகாமையில் உள்ளது. இதனை ஏக்கர் ரூ.39,900 மதிப்பில் ரூ. 4,05,384 செலுத்தி தனியாரிடமிருந்து கையகப்படுத்தப்பட்டது.

**கோனூர் சமத்துவபுரம்**

கோனூர் கிராமத்தில் தேர்வு செய்யப்பட்ட இடம் மேட்டூர்–சேலம் நெடுஞ்சாலையில் மேட்டூரிலிருந்து சுமார் 5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இந்த இடம் தனியாரிடமிருந்து ஏக்கர் ரூ.60,000 வீதம் ரூ.7,59,000 செலுத்தி கையகப்படுத்தப்பட்டது.

**சமத்துவபுரம் அமைப்பு**

சமத்துவபுரங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட நிலங்களில் 5 செண்டு அளவு கொண்ட வீட்டுமனைகள் 100 பிரிக்கப்பட்டு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன. சமத்துவபுரங்களில் சாலைகள், சாக்கடை, குழந்தைகள் பூங்கா, தொலைக்காட்சி மற்றும் நூலக அறை, சமுதாயக் கூடம், குழந்தைகள் நல மையம், குடிநீர், மின்வசதி ஆகிய அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவை தவிர கோனூர் சமத்துவபுரத்தில் தொடக்கப்பள்ளி மற்றும் நியாய விலைக்கடைகள் நிறுவப்பட்டுள்ளன. சமத்துவபுரங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு சுற்றுச்சூழல் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 3 சமத்துவபுரங்களின் அருகாமையில் சுகாதார துணை மையம் உள்ளது.

மூன்று சமத்துவபுரங்களும் நல்ல காற்றோட்டத்துடன், அழகிய இயற்கைச் சூழலில் காண்போர் கண்களைக் கவரும் வகையில் அமையப்பெற்றுள்ளன.

**பயனாளிகள் தேர்வு**

சமத்துவபுரங்களில் வீடுகள் வழங்கப்படுவதற்காக விண்ணப்பங்கள் பெறப்படும் என்று சமத்துவபுர கிராமங்களிலும் அருகிலுள்ள கிராமங்களிலும் முறையாக விளம்பரம் செய்யப்பட்டது.

வரப்பெற்ற விண்ணப்பங்களை முறைப்படி விசாரணை செய்து தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களை மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், சேலம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், சேலம், வருவாய்க் கோட்டாட்சியர், சேலம் வருவாய் வட்டாட்சியர், சம்பந்தப்பட்ட தனி வட்டாட்சியர் (ஆதி) மற்றும் சம்பந்தப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர் கொண்ட குழு தேர்வு செய்தது.

இக்குழு 40 ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள், 25 பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், 25 மிகவும் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் 10 இதர இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோரைச் சேர்த்து மொத்தம் 100 பயனாளிகளைத் தேர்வு செய்துள்ளது. இக்குழுவால் தேர்வு செய்யப்பட்ட பட்டியல் மாவட்ட ஆட்சியரால் இறுதியாக அங்கீகரிக்கப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட அனைவரும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் என உறுதியாகத் தெரிந்த பின்னர் தேர்வு செய்யப்பட்டனர்.

பயனாளிகள் அனைவரும் பாகுபாடின்றி ஒன்றாகக் கலந்து



வசிக்கும் வகையில் வீடுகளை குலுக்கல் முறையில் தேர்வு செய்து மதம், இனம் பாராமல் வீடுகள் மாறி மாறி அமையும் வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வீட்டுமனை மற்றும் வீடுகள் குறித்த விவரம்**

சமத்துவபுரங்களில் தேர்வு செய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு தலா 5 செண்டு விதம் வீட்டுமனை ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி 5 செண்டு இடத்தில் 280 சதுர அடி பரப்பில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. வீட்டில் தங்கும் அறை, சமையல் அறை, குளியல் மற்றும் கழிவறை வசதி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது. வீட்டின் மேல் கூரை ஆர்.சி.சி. கான்கிரீட் போடப்பட்டு மேற்கூரையில் தட்பவெப்ப மாற்றத்தைத் தாங்கும் செங்கல், சுண்ணாம்பு போன்ற கலவையாலான ஒரு தளவரிசையும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டிட அமைப்பு பிற்காலத்தில் இவ்வீட்டினை விரிவுபடுத்திக் கொள்ளவும் மாடிகளை கட்டவும் வசதி கொண்டதாக வழி வகுக்கப்பட்டுள்ளது. வீட்டின் முன் வாயிலில் மழைநீர், சூரிய ஒளி ஆகியவை வீட்டினுள் வராமல் தடுக்கும் ஆர்.சி.சி. கான்கிரீட்டினாலான முன் கூரை கட்டப்பட்டுள்ளது. அதேபோல் ஒவ்வொரு சன்னலுக்கு மேலேயும் மேற்கூரை அமைக்கப்பட்டுள்ளது.

**சமத்துவபுரத்தில் இரட்டை வீடுகள்**

ஒரு கூரையின் கீழ் இரு வேறு பிரிவினர் வசிப்பதால் சமத்துவமும், சகோதரத்துவமும் பரஸ்பர அந்நியோன்யமும் ஏற்பட ஏதுவாகும் என்ற நல்ல நோக்கத்தில் இம்முறையில் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால், சமத்துவபுரத்தின் நோக்கம் ஒரு படி மேலோங்குகிறது. இவ்விரட்டை வீடு கட்டுவதால் ரூ.4000 மிச்சமாகிறது. இதன் பயனாக கட்டட முன்கூரை சன்னல் மேல்கூரை சிமெண்ட் கான்கிரீட் கூரை போன்ற கூடுதல் வசதிகள் செய்திட ஏதுவாகிறது. மேலும் ஒவ்வொரு பயனாளிக்கும் கூடுதலாக இட வசதியும் கிடைக்கிறது.

> **தோழமைத்தான் சமத்துவத்தின் கனி**
> **சமதர்ம மணம்; இதைக் காண**
> **வேண்டுமானால், சாதி தொலைய வேண்டும்!**
>
> **– பேரறிஞர் அண்ணா**

**விடு கட்ட அரசு மானியம்**

இம்மாவட்டத்தில் அமைந்துள்ள 3 சமத்துவபுரங்களில் பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.35,000 விதம் வீடு கட்டும் மானியமாக அரசு கொடுத்துள்ள ஒதுக்கீட்டை பயனாளிகள் சார்பாக சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலரிடம் வழங்கி வீடுகள் கட்டப்பட்டுள்ளன. சமத்துவபுரங்களில் அமைந்துள்ள ஒவ்வொரு வீட்டின் மதிப்பும் ரூ.47,000 ஆகிறது. அரசு வழங்கிய மானியம் நீங்கலாக ஒவ்வொரு வீட்டிற்கும் தலா ரூ.2,000 மத்திய கிராமப்புற கழிப்பிட வசதித் திட்ட மானியமாகவும் ரூ.10,000 பயனாளி பெயரில் சேலம் நகரக் கூட்டுறவு வங்கி மற்றும் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் மூலம் கடனாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

***அடிப்படை வசதிகள்***

**மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால், ஒவ்வொரு சமத்துவபுரத்திலும், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. அங்குள்ள அனைத்து தெருக்களிலும் 20 முதல் 22 இடங்களில் குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டு அப்பகுதியை சுத்தமாக வைத்திருக்க, குழாய் மேடைப்பகுதி செராமிக் ஓடுகள் பதிக்கப்பட்டு அழகாக அமைக்கப்பட்டுள்ளன.

**அங்கன்வாடிகள்**

சமத்துவபுரத்தில் குடிபுகும் பயனாளிகள் குழந்தைகள் சத்துணவு உட்கொள்ளும் வகையில் அங்கன்வாடி மையங்கள் புதியதாக கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**கிளை நூலகம்:**

சமத்துவபுரத்தில் கிளை நூலக வசதி செய்து தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு நூலகத்திற்கும் வேண்டிய மேசை, நாற்காலிகளும் 750 புத்தகங்களும் 3 நாளேடுகளும் வழங்கப்பட்டுள்ளன. இதனுள்ளேயே அறிவொளி தொடர்கல்வி மையமும் செயல்பட உள்ளது.

**தொலைக்காட்சி அறை**

சமத்துவபுர பயனாளிகள் பயன்பெறும் வகையில் ஒரு தொலைக்காட்சி அறை கட்டப்பட்டுள்ளது. வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

**சமுதாயக் கூடம்**

சமத்துவபுரத்தில் வசிக்கும் பயனாளிகளின் குடும்பங்களில் நிகழும் பொது நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு வசதியாக சமுதாய கூடம் ஒன்று அழகாக அமைக்கப்பட்டுள்ளது.

**பள்ளிக்கூடம்**

சமத்துவபுரத்தில் குடிபுகும் பயனாளிகளின் குழந்தைகள்

கல்வி பயிலும் வகையில், கோனூர் சமத்துவபுரத்தில், ஒரு புதிய பள்ளிக் கட்டித் தரப்பட்டுள்ளது. நெய்க்காரப்பட்டியில் சமத்துவபுரத்திலிருந்து 200 மீட்டர் தொலைவில் பள்ளி வசதி உள்ளது. கத்தேரியில் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் பள்ளி வசதி உள்ளது.

ஓய்வு எடுப்பதற்கு பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்காக, ஊஞ்சல், சறுக்கல் மற்றும் விளையாட்டு கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் விளையாட்டினை ஊக்கப்படுத்தும் வகையில், இளைஞர் சமுதாயத்திற்காக, பூப்பந்து விளையாட்டு

வண்ணம் வடிகால் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

**மரங்கள் வளர்த்தல்**

அனைத்து சமத்துவபுரங்களிலும், தலா 75 மரங்கள் வீதம், சாலையோர நிழல் தரும் மரங்கள் நடப்பட்டுள்ளன. இதுதவிர ஒவ்வொரு வீட்டிலும் ஒரு



**மின் வசதி மற்றும் தெரு விளக்குகள்**

ஒவ்வொரு வீட்டிற்கும் மீட்டர் பொருத்தப்பட்ட மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. நெய்க்காரப்பட்டி சமத்துவபுரத்தில் உள்ள தெருக்களில் 23 குழல் விளக்குகளும் கோனூர் மற்றும் கத்தேரி சமத்துவபுரங்களின் தெருக்களில் தலா 20 குழல் விளக்குகளும் பொருத்தப்பட்டு எந்தவொரு இடத்திலும் இருள் இல்லாத வகையில் ஒளி மயமாக்கப்பட்டுள்ளன.

**பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம்**

சமத்துவபுரத்தில்' பெரியவர் முதல் குழந்தைகள் வரை அனைவரும் மாலை நேரங்களில்

மைதானம் அமைத்துத் தரப்பட்டுள்ளது.

**தார் சாலை வசதி**

சமத்துவபுரங்களில் உள்ள அனைத்து தெருக்களும் தார் சாலைகளாக அமைத்துத் தரப்பட்டுள்ளன. அந்த தெருக்களுக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ் மன்னர்கள், தமிழ் புலவர்கள் ஆகியோரின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. பிரதான சாலைகளிலிருந்து சமத்துவபுரத்திற்குச் செல்லும் சாலைகள் அகலப்படுத்தப்பட்டு தார் தளம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

**வடிகால் வசதி**

சமத்துவபுரங்களில் உள்ள அனைத்து தெருக்களின் இரு புறங்களிலும் மழை நீர் தேங்கா

தென்னங்கன்று வைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு வீட்டின் பின்புறத்திலும் 3 பழச் செடிகள் வைக்கப்பட்டுள்ளன.

**மர பாதுகாப்பு வளையங்கள்**

ஒவ்வொரு சமத்துவபுரத்திலும், நடப்படும் சாலையோர மரங்களின் பாதுகாப்பிற்காக சேலம் இரும்பாலையிலிருந்து பெறப்பட்ட அழகுமிக்க எவர்சில்வரால் செய்யப்பட்ட பாதுகாப்பு வளையங்கள் வைக்கப்பட்டு உள்ளன.

**நியாய விலைக்கடை**

நெய்க்காரப்பட்டி சமத்துவபுரத்திலிருந்து 200 மீட்டர் தூரத்தில் நியாய விலைக் கடை

உள்ளது. கத்தேரியில் ஒரு கிலோ மீட்டரில் நியாய விலைக் கடை வசதி உள்ளது. கோனூரில் ஒரு புதிய நியாய விலைக் கடை கட்டடம் கட்டித் தரப்பட்டு அங்கு ஒரு பகுதி நேர நியாய விலைக்கடையும் துவக்கப்பட்டுள்ளது.

## குடும்ப அட்டைகள்

சமத்துவபுர பயனாளிகள் பயன்பெறும் வகையில், நெய்க்காரப்பட்டி மற்றும் கத்தேரி சமத்துவபுரங்களின் அருகில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு, சமத்துவபுர பயனாளிகளின் குடும்ப அட்டைகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. கோனூரில் புதியதாக துவக்கப்பட்ட நியாய விலைக்கடையில் பயனாளிகள் பயன் பெறும் வகையில், அவர்களின் குடும்ப அட்டைகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

## சுகாதார வசதி

சமத்துவபுரங்களில் குடிபுகும் அனைத்து பயனாளிகளுக்கும் சுகாதார குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. நெய்க்காரப்பட்டியில் துணை சுகாதார மையம் 100 மீட்டர் தொலைவிலும் கத்தேரியில் 200 மீட்டர் தூரத்திலும் கோனூரில் 200 மீட்டர் தொலைவிலும் துணை சுகாதார மையங்கள் உள்ளன.

## குப்பைத் தொட்டிகள்

சுற்றுச் சூழலை காக்கும் வகையில் சமத்துவபுரங்களில் உள்ள வீதிகளின் இரு புறங்களிலும் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

## சொட்டு நீர் பாசன வசதி

சமத்துவபுரங்களில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டு மனையிலும் நடப்பட்டுள்ள தென்னை மரங்களுக்கு பாசன வசதி செய்யும் பொருட்டு, சேலம் வேளாண்மைப் பொறியியல் துறையினரால் சொட்டு நீர் பாசன வசதி அமைக்கப்பட்டுள்ளது.

## பயனாளிகளுக்கு கடன் வசதி

சமத்துவபுரங்களில் உள்ள அனைத்து பயனாளிகளுக்கும், நிரந்தரமான வருவாய்க் கிடைக்கும் வகையில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் சேலம் பால் பண்ணை மூலம் கறவை மாடுகள் வாங்கிட கடன் உதவிகளும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் சலவை பெட்டிகளும், சமூக நலத்துறை மூலம் தையல் இயந்திரங்களும், கதர் வாரியம் மூலமாக சர்க்காக்களும் வழங்கப்பட்டு உள்ளன. இந்த உதவிகள் அளிப்பதன் மூலம் இங்குள்ள பயனாளிகளுக்கு நிரந்தர வருமானம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## போக்குவரத்து வசதி மற்றும் நிழற்கொடை வசதி

சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பகுதிக்கும் தற்போது போதுமான அளவில் பேருந்து வசதிகள் உள்ளன. இருந்தபோதிலும் ஒவ்வொரு சமத்துவபுரத்திற்கும் செல்லும் வகையில் சிறப்பு. பேருந்து வசதிகள் செய்யப்பட்டு வருகிறது.

கோனூர் மற்றும் கத்தேரி சமத்துவபுரங்களில் பொதுமக்கள் நிதி உதவியுடன் பயனாளிகளுக்கு பேருந்து நிழற்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. நெய்க்காரப்பட்டியில் சமத்துவபுர நுழைவாயில் அருகே பேருந்து நிழற்கூடம் உள்ளன.

## மயான வசதி செய்து கொடுத்தல்

அனைத்து சமத்துவபுரங்களின் அருகில் தேவையான மயான வசதி சுமார் அரை கிலோ மீட்டர் தொலைவிலிருந்து 1.25 கிலோ மீட்டர் தொலைவிற்குள் உள்ளன. இவைகளை பயனாளிகள் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

கோனூர் சமத்துவபுரத்தில் 'டோக்ரா' குழு அமைக்கப்பட்டு அந்த குழுவிற்கு சுழல்நிதியும் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இங்குள்ள பெண்களுக்கு வருமானம் கிடைத்திட வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

## அரசுத் துறைகளின் சிறப்பு முகாம்கள்

சமத்துவபுர பயனாளிகளும், சமத்துவபுரத்தைச் சுற்றியுள்ள பொதுமக்களும் பயன்பெறும் வகையில் 3 மாதங்களுக்கு ஒருமுறை மருத்துவத் துறை மூலம் அனுபவமிக்க சிறப்பு மருத்துவர்களைக் கொண்டு தேவையான மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சைகளும், வேளாண்மைத் துறை மூலம் விவசாயப் பயிற்சிகளும், கால்நடை பராமரிப்புத் துறை மூலம், கால்நடை மருத்துவ முகாம்களும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## சமத்துவபுரங்களை வங்கிகள் தத்து எடுத்தல்

சேலம் மாவட்டத்தில் உள்ள மூன்று சமத்துவபுரங்களையும் தத்து எடுத்துக் கொள்ளவும், அவைகளை பராமரிக்கவும், மேம்படுத்தவும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் முன்வந்துள்ளன. நெய்க்காரப்பட்டி சமத்துவபுரத்தை இந்தியன் வங்கியும், கோனூர்

சாதி பிரிவினிலே தீமூட்டுவோம்
சந்தை வெளியினிலே கோல் நாட்டுவோம்!

– சித்தர் பாடல்கள்




சமத்துவபுரத்தை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும் மற்றும் கத்தேரி சமத்துவபுரத்தை கனரா வங்கியும் தத்து எடுத்துக் கொள்ள ஒப்புக் கொண்டுள்ளனர்.

### ஆவின் பால் வழங்கு நிலையம்

பயனாளிகள் வசதிக்காக நெய்க்காரப்பட்டி சமத்துவபுரத்தில் சேலம் பால் பண்ணை மூலம் ஆவின் பால் வழங்கும் நிலையம் ஒன்று அமைத்துத்தரப்பட்டுள்ளது.

### கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம்

கத்தேரி சமத்துவபுரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் ஒன்று துவக்கப்பட்டுள்ளது. நெய்க்காரப்பட்டி மற்றும் கோனூர் சமத்துவபுரத்தில் உள்ள பயனாளிகள் உற்பத்தி செய்யும் பாலை அருகே உள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தில் வழங்கிட வகை செய்யப்பட்டு அவர்கள் அனைவரும் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

### சமத்துவபுர அபிவிருத்திக் குழு

சமத்துவபுரத்தை நிர்வகிக்கவும் பராமரிக்கவும் 7 பயனாளிகளை உறுப்பினராக கொண்டு அபிவிருத்தி குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு சமத்துவபுரத்தினை சுத்தமாக வைத்துக் கொள்ளுதல், தெருக்குழாய்களை பராமரித்தல், தொலைக்காட்சிப் பெட்டியை பராமரித்தல், மரங்களை பராமரித்தல், மது அருந்துபவர்களை கண்டித்து அவர்களின் பழக்கத்தை மாற்றுவது, சிறு சிறு தகராறுகள் கூட வராமல் பார்த்துக் கொள்ளுதல் மற்றும் பொது நலன் சம்பந்தப்பட்ட அனைத்து பொருள்களை குறித்து விவாதித்து நடவடிக்கை எடுத்தல் போன்ற சமத்துவபுரத்தின் பணிகளை கவனிக்கும்.

### சிறுசேமிப்பு

மூன்று சமத்துவபுரங்களில் உள்ள அனைத்து பயனாளிகளும் சிறுசேமிப்புத் திட்டத்தில் பங்கேற்று உள்ளனர். ஒவ்வொரு பயனாளியும் தலா ஒரு வளரும் மாத சேமிப்புக் கணக்கைத் துவக்கி உள்ளனர்.

### முகப்பு வாயில்

சமத்துவபுரங்கள் ஒவ்வொன்றிலும் அனைவரையும் கவரும் வகையில் அழகுமிக்க தோரணமுகப்பு வாயில்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இவை சுமார் ரூ.1.10 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று முகப்பு வாயில்களும் முழுக்க முழுக்க பொதுமக்கள் நிதி உதவியுடன் கட்டப்பட்டு உள்ளன.

### வரைபடப் பலகை

ஒவ்வொரு சமத்துவபுரத்தின் முகப்பிலும், அந்தந்த சமத்துவபுரத்தின் வரைபடம் மற்றும் அங்கே உள்ள அனைத்து அடிப்படை வசதிகள் குறித்த விவரப் பலகை வைக்கப்பட்டுள்ளது. ●

> **சா**தி என்ற சொல்லே பழந்தமிழ் இலக்கியங்களில் இல்லை; இப்போது அதற்காக மோதிக் கொள்கிறார்களே – இது என்ன நீதி?
>
> **– கி.ஆ.பெ. விசுவநாதம்**

# ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்விற்கான பயிற்சி முறைகள்

— பேராசிரியர் க.மு.பாதுசா

பள்ளி, கல்லூரித் தேர்வுகளில் நூற்றுக்கு நாற்பது, ஐம்பது மதிப்பெண்கள் பெற்றால் போதும் — அனைவரும் தேர்ச்சி பெற்று விடலாம். போட்டித் தேர்வுகளில் ஒரு பணிக்கு நூறு இடங்கள் காலியாக இருக்கின்றன, என்று சொன்னால் அந்தத் தேர்வில் முதல் நூறுபேர் அதாவது மதிப்பெண்களில் முதல் நூறு மதிப்பெண்களைப் பெற்றவர்கள் மட்டுமே பணிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் — குறைந்த மதிப்பெண் என்பது எதுவுமில்லை — குதிரைப் பந்தயத்தில் இரண்டு குதிரைகள் ஒரே நேரத்தில் எல்லைக் கோட்டைத் தொட்டாலும் புத்திசாலிக் குதிரை மூக்கை நீட்டி முன்னுக்கு வந்துவிடும் — போட்டித் தேர்வுகளைப் பொறுத்தவரை மற்றவர்களைக் காட்டிலும் அதிக மதிப்பெண்களை நாம் பெறுகிறோமா என்பதுதான் முக்கியம். போட்டியாளர்கள் பெறுகின்ற ஒவ்வொரு மதிப்பெண்ணும் தரத்தினைப் (Rank) பெறுவதில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணரவேண்டும்.

குடிமைப் பணி பயிற்சித் தேர்வில் (IAS & IPS) வெற்றி என்பது கீழ்க்கண்ட நான்குவகை அறிவினைப் பொறுத்தே அமையும் : மொழி அறிவு, துறை அறிவு, பொது அறிவு, நுண்ணறிவு என்பனவாகும். (Success in the civil services exam depends on your communication skills, Awareness of the world around, Mastery of a couple of subjects of special interest, and balanced personality trails).

பள்ளிப் பருவம் தொட்டே மொழி அறிவினை வளர்த்துக் கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். தமிழிலும், ஆங்கிலத்திலும் மொழிச் செம்மை பெறப் பயிற்சிகள் பெறவேண்டும். சுயமாக சிந்தித்துக் கட்டுரைகள் எழுத, சரியான சொற்களை பயன்படுத்த, வாக்கியங்களைச் சரியாக அமைக்க கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். சொற்திறனை பெருக்கிக் கொள்ள வேண்டும். வாசிப்பு தொடர் நிகழ்ச்சியாக இருக்க வேண்டும். புதிய சொற்களை காணுந்தோறும் அகராதியோடு தொடர்பு கொள்ள வேண்டும். ஆங்கில அறிவினை வளர்த்துக் கொள்ள ஆங்கில நூல்கள், ஆங்கில நாளேடுகள் ஆகியவற்றை தொடர்ந்து பயன்படுத்த வேண்டும். ஆங்கிலத்தில் நண்பர்களோடு பேசிப் பழகுவதோடு, ஆங்கில நாளேடுகளை தொடர்ந்து படிப்பதோடு, தொலைக் காட்சி, வானொலியில் ஆங்கிலச் செய்திகளை தொடர்ந்து கேட்டல் வேண்டும். குறிப்பாகப் போட்டித் தேர்வுக்கான செய்திகள் எல்லாம் ஆங்கில ஏடுகளிலேயே அதிகம் வெளிவருகின்றன. எனவே செம்மையான ஆங்கில அறிவு வெற்றிக்கு வித்தாகும்.

போட்டித் தேர்வுகளில் மொத்தம் மூன்று கட்டங்கள் உண்டு. அவையாவன: செய்தி சேகரித்தல், தயாரித்தல், வெளிப்படுத்துதல், ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வோடும் அதீதமான அக்கறையோடும் போட்டியாளர்கள் செயல்பட வேண்டும். குறைவில்லாத நினைவாற்றலும், படிப்பதில் சுகம் காணலும் போட்டியாளர்களிடையே காணப்பட வேண்டும். ஒரு பழ மரத்திற்கு அது பூக்கிற காலத்தில் மட்டும் நீர்வார்த்தால் போதும் என்ற நினைப்பதைப் போல, போட்டித் தேர்வை அறிவித்த பிறகு படிக்கத் தொடங்குவது அரைகுறைத் தயாரிப்பாக போய்விடும். கல்லூரியில் படிக்கும்போதே போட்டித் தேர்விற்கான செய்திகளை அறிந்துக் கொண்டு செயலாற்றத் தொடங்க வேண்டும்.

### பொது அறிவு

பொது அறிவு என்பது ஒரு பாடமல்ல; அது ஒரு தொடர் பயிற்சியேயாகும். அனைத்துத் துறைகளிலும் அடிப்படைச் செய்திகளை தெரிந்து கொண்டு அவ்வப்போது அத்துறைச் சார்ந்த மேம்பாட்டுச் செய்திகளை மனதில் பதித்துக் கொள்ளவேண்டும். இதற்கான சில யுக்திகளை கடைப்பிடிக்க வேண்டும். தினந்தோறும் தமிழ், ஆங்கில நாளேடுகளை வாசிக்க வேண்டும். முக்கிய நிகழ்வுகளை, பெயர்களை ஒரு பதிவேட்டில் குறித்துக் கொள்ளவேண்டும். கவனத்தை ஈர்க்கும் கட்டுரைகளை கத்தரித்து வைத்துக் கொள்ள வேண்டும். பொது அறிவிற்கான பருவ இதழ்களை தொடர்ந்து படித்து குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும். இந்திய, உலக வரைபடங்களை வாங்கி அதனை பார்த்து படித்தல் வேண்டும். பல்வேறு துறைச்சார்ந்த பருவச்சுவடிகளை வாசிக்க வேண்டும். ஆண்டுச் சிறப்பேடுகளை வாங்கி ஒப்பீடு செய்து பயன்படுத்த வேண்டும். National council of Education, Research and Training வெளியிடுகின்ற 8–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை உள்ள பாடநூல்களையும் National Book Trust வெளியிடுகின்ற நூல்களையும், சொந்தமாக வாங்கி வைத்து தொடர்ந்து படித்துப் பயிற்சி பெற வேண்டும். தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளையும் தொடர்ந்து கேட்டுவர வேண்டும். குடிமைப்பணி தேர்விற்கான பொது அறிவு நூல்களையும் நூலகத்தில் பெற்று படித்துப் பயிற்சிப் பெறவேண்டும். அத்தோடு கலையியல் சார்ந்த போட்டியாளர்கள் அறிவியல் சார்ந்த போட்டியாளர்களோடு தொடர்ந்து உரையாடி பொது

அறிவு செய்திகளை பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டும். கடந்த பத்தாண்டுகாலக் குடிமைப்பணி தேர்விற்கான வினாக்களின் திரட்டினை அறிந்து அதற்கேற்பப் பயிற்சி முறைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கான வினா வங்கிகளையும், ஆடியோ, வீடியோ கேசட்டுகளையும் வாங்கி பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வணிக முறையில் பொதுஅறிவு தேர்விற்கான குறிப்பேடுகளை வாங்கி படித்துக்கொள்ளலாம். அனைத்திந்திய பல்கலைக் கழகப் பேரவை வெளியிட்டுள்ள வினா வங்கிகளை இதற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

### *விருப்பப் பாடங்களின் தேர்வு*

குடிமைப்பணி தேர்வில் மையத் தேர்வாணையம் 26 விருப்பப் பாடங்களை அறிவித்திருக்கிறது. இவற்றுள், முதல்நிலை தேர்விற்கு ஒரு விருப்பப்பாடத்தினையும், முதன்மைத் தேர்வுக்கு இரண்டு விருப்பப் பாடங்களையும் போட்டியாளர்கள் தீவிரமான ஆய்விற்குப் பின்னர் தேர்ந்தெடுத்து செயல்படுகின்றனர். பொதுவாகப் பெரும்பாலான போட்டியாளர்கள் இளநிலையில் தாம் படித்த பாடத்தினையே விருப்பப்பாடமாக தேர்ந்தெடுத்து கொள்கின்றனர். இரண்டாவது விருப்பப்பாடத்தை தேர்ந்தெடுப்பதில் போட்டியாளரின் ஈடுபாடு, பாடக் குறிப்பேடுகள், கருவி நூட்கள், சகப் போட்டியாளரின் தொடர்பு, வல்லுனர் ஆலோசனை இவற்றினைப் பொறுத்தே அமையும். விருப்பப் பாடங்களின் தேர்வுதான் தேர்வில் வெற்றியினை நிர்ணயிக்கும். குழு விவாதம், வினா வங்கி, நூலகம் முதலியவற்றினைப் பொறுத்தும் போட்டியாளர்கள் வெற்றி வாய்ப்பினை மேம்படுத்திக் கொள்ள முடியும். பெரும்பாலான போட்டியாளர்கள் விருப்பப் பாடங்கள் சம்பந்தப்பட்ட அடிப்படை நூல்களை படிக்காமல் பாடக் குறிப்பேடுகளை முழுவதுமாக நம்புவதுண்டு. வைட்டமின் மாத்திரைகளால் மட்டுமே வயிறு நிரம்பி விடாது. துறைச்சார்ந்த நூல்களோடு பருவ இதழ்களையும், வல்லுனர்களையும் இத்தேர்வுகளில் பங்கேற்று வெற்றி பெற்ற அண்மைக்கால சிவில் சர்வீஸ் அலுவலர்களையும் கலந்து தயாரிப்புக்களை மேம்படுத்திக் கொள்வதின் மூலமே வெற்றிக் கனியினைத் தட்டிப்பறிக்க முடியும். மூன்றாவது கட்டமாகிய 'நேர்முகத் தேர்வுதான்' வெற்றியை இறுதியாக நிர்ணயிக்கிறது. நேர்முகத் தேர்வு 'ஒரு குறுக்கு விசாரணை' அல்ல. மாறாக இது ஒரு இனிய கலந்துரையாடல் நிகழ்வேயாகும். இத்தேர்வின்போது போட்டியாளர்களின் உற்சாகம், பேசுகின்ற திறமை, உணர்ச்சி வசப்படாமை, முன்னிற்கும் திறன், தன்னம்பிக்கை, ஒழுக்கம், தலைமைப் பண்பு, இனிய சுபாவம், நல்லத் தோற்றம், நல்ல படிப்புப் பின்னணி போன்றன மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன. போட்டியாளர்களின் விண்ணப்பத்தின் அடிப்படையில் வினாக்கள் தொகுக்கப்படக்கூடும். போட்டியாளரின் உணர்ச்சியைத் தூண்டுகின்ற அளவில் வினாக்கள் கேட்கப்பட்டாலுங்கூட, உணர்ச்சிவசப்படாமல் பொறுமையாக வீடையிறுப்பது சிறப்பாகும். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் அரசு மற்றும் தனியார் பயிற்சி நிலையங்களில், போதிய எழுத்துப் பயிற்சி, மீள்பார்வைத் தேர்வுகள், மாதிரித் தேர்வுகள் நடத்தப்படுவதுமில்லை. நடத்தப்படுகின்ற ஒரு சில தேர்வுகளும் சரியாக மதிப்பீடு செய்யப்படுவதுமில்லை. வருங்காலத்தில் இது கவனத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். நேர்முகத் தேர்வுக்குச் சராசரியாக ஆண்டுதோறும் தமிழகத்திலிருந்து ஐம்பதுபேர் அழைக்கப்படுகின்றனர். கடந்த ஓரிரு ஆண்டுகளாக தமிழக அரசு இதற்கும் ஓரிரு முறை மாதிரி நேர்முகத் தேர்வினை நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

### *இறுதியாக....*

தமிழகக் கல்வியாளர்கள் தமிழகத்தின் பங்கு இத்துறையில் உரிய அளவு பெற அரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். கல்லூரிகள் தோறும் இதற்கான 'முனைப்பு இயக்கம்' ஒன்றினை தோற்றுவிக்க வேண்டும். பல்கலை நிர்வாகங்கள் 'பாடத்திட்டங்களை மறுஆய்வு' செய்யலாம். இணைப்புக் கல்லூரிகளில் 'நூலகங்கள் மேம்படுத்தப் படுவதோடு' போட்டித் தேர்விற்கான 'சிறப்பு நூலகப்' பிரிவுகள் தொடங்கப்படலாம். முதுகலைப் பயிற்றுவிக்கும் இணைப்புக் கல்லூரிகள், கல்லூரிகளின் உள்ளுறுப்பு வசதிகளை அதிகரிக்க வேண்டும். மொழிப்புலமையை மேம்படுத்தும் செயற்திட்டங்களை கல்வி வளாகங்கள் மேற்கொள்ள வேண்டும். இப்போட்டித் தேர்வுகளில் பங்கு கொள்வோருக்கு 'ஊக்கப் பரிசுகள்' வழங்கப்பட வேண்டும். தகவல் தொடர்பு சாதனங்கள் தக்கமுறையில் இத்தேர்வுகளுக்குத் துணை புரிய வேண்டும். ஆற்றல்மிக்க தமிழக மாணவர்களை இத்துறைக்கு ஆற்றுப்படுத்தவேண்டும். வள்ளுவர் பெருந்தகை கூறுவதைப்போல வேண்டிய கருவிகளுடன் காலத்தையும் அறிந்து செயல்பட்டால் வெற்றி கிடைக்கத்தானே செய்யும்.

"அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்" – *குறள் 483.*

### *ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற தேர்வுகளில் தமிழகத்தின் பங்கு உயர...*

மத்திய அரசின் பொதுப்பணித் தேர்வுக் குழுமத் (UPSC) தேர்வுகளில் தமிழகத்தினர் சிறப்பிடங்களைப் பெற்று, கொடிகட்டிப் பறந்த செய்தியை நாடறியும். ஆனால் இத்தேர்வுகளில் நமது சரிவு அறுபதுகளிலேயே தொடங்கிவிட்டது. (1950–54) 24.3 சதவீதம், 1955–59, 31 சதவீதம், 1965–69 7.4 சதவீதம்; 1970–74 6.8 சதவீதம்) இந்தியாவின் மொத்த மக்கட் தொகையில் 6.6 (1991) சதவிகிதம் உள்ள நாம் இத்தேர்வுகளில்



நீண்ட நாட்களாக நமது மக்கட் தொகைக்கேற்ற, குறைந்தபட்ச விகிதமான **6.6** சதவிகித இடத்தைக் கூடப் பெறவில்லை. **4** முதல் **4.5** என்ற நிலையிலேயே இருக்கிறோம். இவற்றுள்ளும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பதவிகட்குத் தகுதிபெறுவோர் சதவிகிதம் இதனினும் குறைவாக இருக்கலாம். இதன் விளைவு, தமிழகத்தில் இருக்கும் அனைத்து மைய அரசு அலுவலகங்களிலும், தமிழகத்தின் நிர்வாகம் பொருளாதார மேம்பாடு, காவல் ஆகியவற்றின் உயர் பதவிகள் அனைத்திலும் கணிசமாக மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்தான் பொறுப்பேற்பார்கள், இந்தப் போக்கினைத் தடுத்து நிறுத்தி, நாம் பயணத்தை தொடங்குவதில் சற்றுவேகமாகவே செயல்படவேண்டிய சூழ்நிலை உருவாகிவிட்டது. இல்லாவிட்டால் எதிர்கால அரசியல் விளைவுகள் நம் கூட்டாட்சி முறைக்குக் கூட குந்தகம் விளைந்துவிடுமோ என்று அஞ்ச வேண்டிய நிலைகூட எழுந்துவிட்டது.

**1976**–ல் அரசின் ஆணைப்படி எஸ்.குருமூர்த்தி இச்சிக்கலை ஆய்ந்து அறிக்கை ஒன்றினை அளித்தார். ஒய்வுபெற்ற தலைமைச் செயலர் வி.கார்த்திகேயன் தலைமையில் அமைக்கப்பட்டக் குழு **1989**–ல் தனது அறிக்கையை அளித்தது. எனினும் நமது சரிவின் பரிமாணங்கள் இன்னும் சரிசெய்யப்படவில்லை. பெற்றோர்கள், கல்வியாளர்கள், பட்டம் பெற்ற இளைஞர்கள் மத்தியில் இத்தேர்வு பற்றிய விதிகள், தேர்வுத்திட்டங்கள், பாடத்திட்டங்கள், பயிற்சி முறைகள், கருவி நூட்கள் பற்றிய விழிப்புணர்வினை குறிப்பாக மேல்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்கின்ற காலகட்டத்தில் உணர்த்த வேண்டும். அரசின் முயற்சி தேவைதான் என்றாலும் கல்வியாளர்கள்தான் இளம் தலைமுறையினரிடம் இதுகுறித்து தெளிவினை ஏற்படுத்த வேண்டும்.

தமிழக அரசு தாழ்த்தப்பட்ட இன மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க நீண்ட நாட்களாகவே பயிற்சி மையம் ஒன்றினை நடத்தி வருகிறது. 1971–லேயே இதனை அடையாளங்கண்ட **கலைஞரின்** ஆட்சி பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கட்கு பயிற்சி நிலையம் ஒன்றினை நிறுவியது. இப்பொழுது **கலைஞர்** அரசு இப்பிரச்சினையில் முழுபரிமாணத்தினை அறிந்து விரிவான செயல்திட்டங்களைத் தீட்டியுள்ளது. ரூபாய் ஒரு கோடியில் சைதை கல்வி வளாகத்தில் புதியதோர் பயிற்சி மையம் ஒன்றினை நிறுவத் திட்டமிட்டுள்ளது. இத்தேர்வுகளை தமிழில் எழுத கருவிநூட்களை உருவாக்கும் பணியில் தமிழ்வளர்ச்சித் துறை அமைச்சர் மாண்புமிகு **தமிழ்குடிமகன்** தலைமையில் அமையப்பெற்ற வல்லுநர் குழு ஒன்று செயலாற்றி வருவது குறிப்பிடத் தக்கது. தமிழக அரசின் தகவல் விளம்பரத் துறை இத் தேர்வுகள் குறித்து ஒரு 'விளக்கப் படம்' தயாரித்து தமிழகக் கல்வி நிலையங்களில் காட்டினால்

### சிறப்புக் குறிப்புகள்

முதல்நிலைத் தேர்வில் வினாக்களுக்கு விடையளிக்கும்போது தரப்பட்டிருக்கும் விடைகளில் சரியானவற்றை தேர்ந்தெடுத்து விடையளிக்க வேண்டும் (Objective type). வினாத்தாட்கள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் இருக்கும். தேர்வுக்குரியகாலம் இரண்டுமணி நேரமே. பொது அறிவு வினாத்தாள் படித்த இந்தியர் யாரும் விடையளிக்கத்தக்க வகையில் அமைந்திருக்கும். இந்தியப் பொருளாதாரம், புவியியல், அரசியல், வரலாறு, புள்ளியியல், வணிகவியல், சுதந்திரப் போராட்டம், சுற்றுபுறச் சூழல், சுகாதாரம், பொது அறிவியல், பண்பாடு, அண்மைக்கால உள்நாட்டு வெளிநாட்டு நடப்புகள் ஆகியன தொடர்பாகவே வினாக்கள் அமையும். இளநிலை விருப்பப்பாடத்திற்கான பாடத்திட்டம் ஏற்ப பட்டவகுப்பு பாடத்திட்டத்திற்கு அமைந்திருக்கும்.

முதன்மைத் தேர்வு கட்டுரை அமைப்பில் அமைந்திருக்கும். தேர்வுக்காலம் மூன்று மணி நேரம். மொழித்தாட்கள், மெட்ரிக்குலேசன் தரத்தில் அமைந்திருக்கும். முதல் இரு மொழித்தாட்களிலும் பெருகின்ற மதிப்பெண்கள் தேர்ச்சிக்கு மாத்திரமே எடுத்துக்கொள்ளப்படும். 'Rank' பெறுவதற்கு இது கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. மொழி இலக்கியங்கள் உட்பட அனைத்து விருப்பப் பாடங்களுக்குமான பாடத்திட்டங்கள் ஆண்டுதோறும் மேம்படுத்தப்பட்டு சிறப்பு அறிவிப்பில் வெளியிடப்படுகின்றன. இதனை போட்டியாளர்கள் கூர்ந்து கவனித்துக் கொள்ள வேண்டும். பாடத் திட்டங்கள் அனைத்துமே பட்ட மேற்படிப்பு தரத்திற்கும் அதற்கு மேலும் மேம்படுத்தப்பட்டு தரப்படுகின்றன. விருப்பப்பாடங்களுக்குரிய மூலநூட்களோடு துறைசார்ந்த பருவ இதழ்களை போட்டியாளர்கள் தொடர்ந்து படித்தால்தான் வினாக்களுக்குரிய விடையினை அளிக்க முடியும். வினாத்தாள் ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் அமைகின்றன. முதன்மைத் தேர்வில் விடையளிக்கின்றபோது வார்த்தைகளின் அளவிட்டிற்கு ஏற்ப 250, 150, 100, 50 - என்ற வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்க பயிற்சிகளை மேற்கொள்வது பயன்தரும்,

### தமிழில் எழுதலாம்

தமிழ் உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட அனைத்து மொழிகளிலும் முதன்மைத் தேர்வில் விடையளிக்கலாம். முதன்மைத் தேர்வினை தமிழில் எழுதியோர் நேர்முகத் தேர்விலும் தமிழை பயன்படுத்த வாய்ப்புண்டு. போட்டியாளர் ஆங்கிலத்தில் நேர்முகத் தேர்வினைசெய்ய விரும்பினால் அதற்கும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

உரிய விழிப்புணர்வு உடனடியாக ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

### டிசம்பர் அறிவிப்பு

பொதுப் பணி தேர்வுக் குழுமம் ஆண்டு தோறும் இத் தேர்வுகளை டிசம்பர் மாதத்தில் அறிக்கை மூலம் அறிவித்து வருகிறது. கல்வித்தகுதி, வயது வரம்பு, தேர்வுத் திட்டம், பாடத்திட்டங்கள் போன்ற செய்திகளை முழுஅளவில் அறிவிக்கிறது. தேவைப்படுவோர் இவ்வறிப்புப் பற்றிய செய்திகளை Employment News என்ற ஏட்டில் பார்த்துக் கொள்ளலாம். பிரபல நாளேடுகளிலும் இது குறித்த விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

### கல்வித் தகுதியும் வயது வரம்பும்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளநிலை பட்டதாரியாக இருக்க வேண்டும். MBBS அல்லது வேறுமருத்துவ பட்ட வகுப்பில் பயில்பவர், தங்கள் துறையில் Intership பகுதியினை முடியாமல் இருந்தாலுங்கூட முதன்மைத் தேர்வினை எழுத அனுமதியுண்டு. நேர்முகத் தேர்வுக்கு முன்னர் பட்டச் சான்றிதழைப் பெற்றிட வேண்டும்.

முதல்நிலை தேர்வுக்கான விண்ணப்பதாரர், எந்த ஆண்டில் இத்தேர்தவை எழுத விண்ணப்பம் செய்கிறாரோ அந்த ஆண்டில் ஆகஸ்ட் முதல்நாள் அன்று குறைந்தளவு 21 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். உச்ச வயது வரம்பு, Forward சமூகத்தினருக்கு 28 வயதாகவும், OBC- பிரிவினருக்கு இது 31 வயதாகவும், SC & ST பிரிவினருக்கு இது 33 வயதாகவும் மாற்றப்பட்டுள்ளது. பழங்குடியினர், ஓய்வு பெற்ற இராணுவத்தினர், அண்மையில் இலங்கை முதலிய நாடுகளில் இருந்து புதிதாகக் குடியேறிய இந்திய வம்சாவழியினருக்கு வயது வரம்பில் விதிவிலக்குகளை மையத்தேர்வாணையை அறிக்கைகளில் கண்டுகொள்ளலாம்.

### எத்தனை முறை இத்தேர்வுகளை எழுதலாம்

Forward- பகுதி சமூகத்தினர் நான்கு முறைகளிலும், OBC- யினர் ஏழு முறைகளிலும், SC & ST–யினர், அனுமதிக்கப்பட்ட வயது வரம்பிறகுள் எத்தனை முறை வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளலாம். தேர்வில் ஒருதாளை மட்டும் எழுதினாலுங்கூட அது ஒரு முயற்சி எனக் கணிக்கப்படும்.

### இட ஒதுக்கீடு

மண்டல்குழு அறிக்கையின்படி தாழ்த்தப் பட்டவர்களுக்கு (SC) - 15%, பழங்குடியினருக்கு (ST) - 7.5% பின்தங்கியவர்களுக்கு (OBC) - 27% மீதமுள்ள இடங்கள் பொதுவானவை (Open Competition) ஒரு ஆண்டில் இந்திய ஆட்சிப்பணிக்கு 100 பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று கொள்வோமெயானால் சமூகநிலை மற்றும் மதிப்பெண் அடிப்படையில் தாழ்த்தப்பட்டவர்கள் 15 பேரும், பழங்குடியினர் 7 அல்லது 8 பேரும், பிற்படுத்தப் பட்டவர்களில் 27 பேரும் தேர்வு செய்யப்படுவர்.

### பதவிகள்

மையத் தேர்வாணையம் நடத்தும் இந்த ஒரு தேர்வின் மூலம் நாட்டிலுள்ள மிக உயர்ந்த 27 பதவிகளுக்கு (IAS; IFS; IPS; IRS; IAASS; IRS; IOFS; IDAS; IRAS; IRPS; IIS; ITS போன்றவைகள்) மதிப்பெண்கள், இட ஒதுக்கீடு மற்றும் தேர்வு பெற்றோரின் விருப்பங்கள் இவைகளுக்கு ஏற்ப பரிந்துரைக் கப்பட்டவர்கள் நியமனம் பெறுவர். ★

---

தமிழகத்தில் சென்னையிலும், மதுரையிலும் முதல்நிலைத் தேர்வினை எழுதுவதற்குரிய மையங்கள் செயல்படுகின்றன. ஆனால் முதன்மை எழுத்துத் தேர்வினை சென்னையில் மட்டுமே எழுத முடியும். நேர்முகத் தேர்வு டெல்லியில் மட்டுமே நடைபெறுகிறது. நேர்முகத் தேர்விற்கு டெல்லி செல்வோர்க்கு மையத் தேர்வாணையம் போக்குவரத்திற்கான புகைவண்டி கட்டணச் சலுகையை அளிக்கிறது. தமிழக அரசு டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் இவர்கள் தங்க முன்னுரிமையோடு சலுகை கட்டணத்தில் இடவசதி அளிப்பதும் குறிப்பிடத்தக்கது.

முதன்மைத் தேர்வில் கட்டுரைத்தாளினை திறம்பட எழுதுவதின் மூலமே போட்டியாளர்கள் தரம்பெற முடியும். மொழிச் சுவையோடு எடுத்துக்கொண்ட தலைப்பில் பொருள் பொதிவு முறைப்படுத்தப்பட்ட அவசியம்.

முதன்மைத் தேர்வில் பொதுஅறிவு தாள்களுக்கான பாடத்திட்டங்கள் குறிப்பாக அரசியல், வரலாறு, புவியியல், பொருளாதாரம், புள்ளியியல் அண்மைக்கால உள்நாட்டு, வெளிநாட்டு நடப்புகள், அறிவியல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் வரையறுக்கப்பட்ட பாடத் திட்டங்கள் தரப்படுகின்றன. இருப்பினும் இத்துறைகளில் அண்மைக்காலங்களில் ஏற்படுகின்ற தாக்கங்களைப் பற்றிய வினாக்கள் சிறப்பிடம் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

இதுபோன்ற அடிப்படைச் செய்திகள் மேல்நிலைப்பள்ளி பருவத்திலிருந்தேஇன்றைய இளம் தலைமுறையினருக்கு முறையாக அறிவிக்கப்படுவதில் ஆசிரியர்கள் தனிக்கவனம் செலுத்தலாம். கல்லூரிகளில் 'பொது அறிவு மன்றங்கள்' அமைத்து மாணவர்களை போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்வது மிகுந்த பலனைத் தரும். பட்டவகுப்பு இறுதியாண்டு படிக்கும் மாணவர்கள்கூட முதல்நிலைத் தேர்வினை எழுதுவதற்குரிய வாய்ப்பினை உருவாக்கி செயல்பட்டால் தேர்வுதிட்டம், பாடத்திட்டங்கள் பற்றிய செய்திகள் மாணவர்களுக்கு நன்கு புலப்படும். இவ்வாறு செயல்பட்டால் தமிழகம் இழந்த பெருமையினை குடிமைப்பணி தேர்வுகளில் மீண்டும் பெறும் என்பதில் ஐயமில்லை.

★ ★ ★

# பெருமரம்

வெளிநாட்டினர் தொடர்பால் மக்களிடையே நிகழும் பண்பாட்டுப் பறிமாற்றங்கள் ஒருபுறமிருக்க தாவரங்களும், விலங்குகளும் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு நிலை பெறுகின்றன. நாம் அன்றாட் வாழ்வில் பயன்படுத்தும், மிளகாய், காபி, தேயிலை ஆகியன தமிழ்நாட்டிற்குரியன அல்ல என்பதை அனைவரும் அறிவர். அரேபியர் வாயிலாகக் குதிரையும், டச்சுக்காரர்கள் வாயிலாக வான்கோழியும், நம்மிடையே பரவியுள்ளன. இவை போன்று தமிழ்நாட்டில் அரேபியர்களால் கொண்டு வரப்பட்ட ஒரு மரம்தான், பெருமரம். இம்மரம் 'பெருக்கமரம்', பே(ய்) மரம், பப்ரபுளி, பேப்புளி, ஆனைப்புளி என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.

தூத்துக்குடி நகரின் பழமையான பொருளாக, கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் அருகில் இம்மரம் நிற்பதாக 'திருநெல்வேலி வரலாறு' என்ற ஆங்கில நூலில் (1881) பிஷப் கால்டுவெல் குறிப்பிடுகிறார். இது அரேபிய வணிகர்களால் நடப்பட்டிருக்கலாம் என்று கருதும் கால்டுவெல் இத்தேவாலயம் கட்டுமுன்பே இம்மரம் அங்கு நிற்பதாகப் பாரம்பரியச் செய்தியுள்ளதாகக் கூறுவதுடன் ஆப்பிரிக்க நாட்டு மரமான இதைப் 'பெயரில்லா மரம்' என்று உள்ளூர்வாசிகள் அழைப்பதாகவும் எழுதியுள்ளார். தற்போது இம்மரம் கால்டுவெல் குறிப்பிட்டுள்ள தேவாலயத்தில் இல்லை. ஆனால் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரின் இல்லத்திலும், ஏ.பி.சி. வீரபாகு மெட்ரிகுலேசன் பள்ளி வளாகத்திலும், எஸ்.ஏ.வி. மேல்நிலைப்பள்ளி வளாகத்திலும் உள்ளது. தூத்துக்குடியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் சாலையில் உள்ள பழைய காயல் என்ற கடற்கரைச் சிற்றூரில் இருந்த இம்மரம் ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளுக்கு முன் பட்டுப்போய்விட்டது. தூத்துக்குடியிலிருந்து புதியம்புத்தூர் செல்லும் சாலையில் புதூர் பாண்டியாபுரம் என்ற கிராமத்திலும், இராசாவின் கோவில் என்ற ஊரிலும் இம்மரம் உள்ளது. இவை தவிர திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவிலிலிருந்து கோவில்பட்டி செல்லும் சாலையிலுள்ள அழகுநேரி என்ற கிராமத்திலும் இம்மரம் உள்ளது.

இம்மரத்தை ஆங்கிலத்தில் Bao Bab என்றும் Monkey-Bread Tree என்றும் குறிப்பிடுகின்றனர். இதன் இலைகள் பெரியதாகவும் மென்மையாகவும் இருக்கும். ஆடன்சன் (Adanson) என்ற பிரெஞ்சு

**பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்**

தாவரவியலாளரின் பெயராலும் விரல்போன்று (Digitate) இதன் இலை இருப்பதன் அடிப்படையிலும் Adansonia Digitata என்ற இம்மரம் தாவரவியலாளர்களால் அழைக்கப்படுகிறது.

மற்றைய மரங்களிலிருந்து இதை வேறுபடுத்துவது இதன் சுற்றளவு தான். இம்மரம் வளரும்போது இதன் பட்டையும் கீழ்நோக்கி வளர்ந்து கொண்டே செல்வதால் இதன் சுற்றளவு பெருகிக்கொண்டே இருக்கிறது. இதனால் தான் என்.எம். ஷாஜஹான் என்ற எழுத்தறிஞர் "மரம் வரவர பெருக்கமடைந்து வருவதன் காரணமாகவே பெருக்கமரம் எனப் பெயரிட்டனர் போலும்" என்று கூறுகிறார்.

ஐயாயிரம் ஆண்டுகள் வரை இம்மரத்தின் ஆயுள் ஆப்பிரிக்காவில் உள்ளதாக ஆடன்சன் கூறுகிறார். இதன் தாயகம் மடாஸ்கர் என்றும், மத்திய ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு இம்மரம் வந்ததாகவும் கௌன் என்ற இந்தியத் தாவரவியலாளர் குறிப்பிடுகிறார். இலங்கையின் வடபகுதியில் அரேபியர்கள் குடியிருப்புகளில் இம்மரத்தை நட்டு வளர்த்ததாகக் குறிப்பிடும் ஷாஜஹான், புத்தளம்—திகழி போன்ற இஸ்லாமியர் வாழும் ஊர்களின் பள்ளி வாசல்களில் இம்மரம் இருந்ததாகவும் கூறுகிறார். "ஊருக்கலங்காரம் ஒசந்த பள்ளி பெருக்க மரம்" என்று கிராமியப்பாடல் கூறுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் வரலாற்றறிஞர் சைமன் காசிச்செட்டி, புத்தளம் என்ற ஊரின் பள்ளி வாசலில் இருந்த பெருக்க மரத்தைக் குறித்து எழுதியுள்ள பின்வரும் பகுதியினை மேற்கோளாகக் காட்டுகிறார்.

இம்மரத்தை தமிழில் "பப்பரப்புளி", "இராட்சதப்புளி" எனவும், "தொதி" எனவும், "பெருக்க மரம்" எனவும் அழைப்பர். மலைக்குன்றைப் போன்று கடுங்கருமை நிறத்துடன் நாற்பதைந்து அடி சுற்றளவுக்குத் தோற்றமளித்தது. நிலத்திலிருந்து எட்டரை அடி உயரத்தில் இம்மரத்தினடிப் பாகம் இரு கவராகப் பிரிந்து நேர் உயரமாக வளர்ந்திருந்தது. அக்கவர்களிலிருந்து பல கிளைகள் வளர்ந்து பெரிய பரப்பை உள்ளடக்கியிருந்தன. ஒரு கவரின் சுற்றளவு இருபத்திரண்டரை அடியாகவும் மற்ற கவரின் சுற்றளவு இருபத்தாறே கால் அடியாகவும் இருந்தன. கிளைகள் மெலிந்த இலைகளுடையதாகக் காட்சியளித்தன. அதன் பெரிய உருவத்திற்கேற்ப உயரம் போதுமானதல்ல. எழுபது, எண்பது அடி உயரமேயிருந்தது. அம்மரத்தின் இலைகளை உடம்பில் வரும் பருக்களுக்கும், கட்டிகளுக்கும் மருந்தாக உபயோகித்தனர். ஆடுகளின் உணவாகவும் பயன்பட்டது. அதன் பூக்கள் வெண்மையாகவும் அழகு, மணம், இல்லாததாகவும் இருந்தன. இதன் பழம் நீண்டதாகவும் ஐந்தாறங்குலமுள்ளதாகவும். மூன்று, நான்கங்குலத் தடிப்புள்ளதாகவும் வெளிப்பரப்பு கடினமானதாகவும் மிருதுவான மயிர் அடர்ந்ததாகவும் இருந்தது. அப்பழத்தின் உள்ளேயுள்ள சுளைகள் புளிப்புக் கலந்த இனிப்புச் சுவையுடையதாக இருந்தன. உள்ளூர் வாசிகள் இப்பழத்தை உண்கின்றனர்.

இம்மரத்தின் பழமானது சுரைக்காய் வடிவத்தில் காட்சியளித்தது.

**சென்னையில் முதலில் வெளியான செய்தித்தாள்**

சென்னையில் வெளியான முதல் செய்தித்தாளின் பெயர், 'மெட்ராஸ் கூரியர்' என்ற செய்தித்தாள் இது ரிச்சர்டு ஜென்ஸன் கம்பெனியரால் 12.10.1785ல் வெளியிடப்பட்டது.

> **கா**டு திருந்திடவேண்டும்! வளம் பெருகிட வேண்டும், வேலையற்றோர்க்கு வேலைதந்து அவர்களைச் செய்தொழிலில் நேர்த்தி கொண்டவர்களாக மாற்றிட வேண்டும். நிலத்தைத் தோண்டி கனிப்பொருட்களை எடுத்திட வேண்டும்! சாதாரண பொருட்களை மட்டுமல்ல! வரலாற்றுப் பொருட்களையும் தோண்டி எடுத்திட வேண்டும்.
>
> – பேரறிஞர் அண்ணா

இப்பழத்தினுள் கடற்பாசி போன்ற சதைப்பகுதியும் கெட்டியான நார்ப் பொருளால் சூழப்பட்ட குண்டிக்காய் வடிவான கருநிற விதைகளும் இடம் பெற்றுள்ளன. இப்பழத்தின் சதைப்பகுதி மாவு போன்று இருப்பதுடன் உண்ணுவதற்கும் உரியது. இப்பழத்தின் சதைப்பகுதியிலிருந்து உருவாக்கப்படும் பானம் வியர்வையை அதிகரிக்கச் செய்து காய்ச்சலை மட்டுப்படுத்துகிறது.

இதன் பழமானது இரத்தத்தின் வெப்பத்தைக் கட்டுப்படுத்துவதால் தொற்று நோய்க் காய்ச்சலின் போது முக்கிய காப்பு மருந்தாகப் பயன்படுவதாக பிரெஞ்சு நாட்டுத் தாவரவியலாளர் ஆடன்சன் கண்டறிந்துள்ளார். உடல் எரிச்சல், சொறி, கரப்பான், வயிற்று நோய்கள் ஆகியனவற்றைக் குணப்படுத்தும் மருந்துகளும் இம்மரத்தின் பழத்திலும் தயாரிக்கப்படுகின்றன. குஜராத் மீனவர்கள் தங்கள் வலைகளில் மிதவைகளாகக் காய்ந்த பழங்களைப் பயன்படுத்துகின்றனர், துறவியர்கள் இப்பழத்தை நன்றாகக் காயவைத்து தண்ணீர்க் குடுவையாகப் பயன்படுத்துகின்றனர். இம்மரத்தின் இளம் இலை சுவையூட்டும் பொருளாக மசாலாவில் சேர்க்கப்படுகின்றது. ஆஸ்துமா நோய் வராது தடுக்க கினிப் பன்றிகளுக்கு இதன் இலைகளைத் தூள் செய்து உண்ணக் கொடுக்கிறார்கள். இதன் பழத்திலுள்ள சதைப்பகுதி வியர்வையை உண்டாக்கும் தன்மையுடையது. பிராங்கைல் ஆஸ்துமா, ஒவ்வாமையினால் ஏற்படும் தோல் அழற்சி ஆகியனவற்றிற்கு இது நிவாரணமளிக்கிறது. இதன் விதைப் பருப்புகளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. இதன் பட்டைகளில் மென்மையான நார் கிடைக்கிறது. காகிதம் செய்யவும் தட்டுகள் சிறுபடகுகள் மிதவைகள், மீன்பிடி வலைகள் செய்யவும் இம்மரம் பயன்படுகிறது. இவ்வாறு இந்தியத் தொழில் ஆய்வு நிறுவனம் (CSIR) வெளியிட்டுள்ள The useful Plants of Indian (1992) என்ற நூலில் இம்மரம் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.

நெல்லை மாவட்டத்திலுள்ள அழகநேரி கிராமத்தில் இம்மரத்தின் இலையை அரைத்து கைக்குழந்தைகளுக்கு உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை தேய்ப்பர். அது நன்றாக உலரும் வரை காத்திருந்து பின் நீராட்டுவர். சிலர் இரவில் தேய்த்து காலையில் நீராட்டுவதுமுண்டு இதனால் குழந்தை நன்றாக வளரும் என்று நம்புகிறார்கள். இதன் அடிப்படையில் "பிள்ளை வள(ர்)த்தி" என்றும் இம்மரத்தை இப்பகுதியில் அழைக்கின்றனர்.

இதன் பட்டையிலிருந்து மிகவும் வலுவான கயிறு திரிக்கப்படுகிறது. முதிர்ந்த மரங்களின் உள்ளீடான வேர்ப்பகுதியில் ஆப்பிரிக்கர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். பாடம் செய்யும் முயற்சியெதுவு மின்றியே இப்பிணங்கள் உலர்ந்து காணப்படுகின்றன. இம்மரம் ஒன்றின் வேர்ப்பகுதியில் நூறுகாலன் தண்ணீர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தண்ணீரைச் சேமித்து வைக்கும் இவ்வாற்றலின் காரணமாகவே இம்மரம் வறட்சியைத் தாக்குபிடித்து நிற்கிறது. இவ்வாறு இந்தியத் தாவரவியலாளர் கௌன் இம்மரத்தின் பயன்பாடுகளைக் குறித்துக் குறிப்பிட்டுள்ளார்.

இம்மரத்தின் வேகமான வளர்ச்சி, மதிப்புமிக்க பழம் மற்றும் நார்ப் பொருளின் காரணமாக இதைப் பரந்த அளவில் பயிரிடுவது ஆதாய மிக்கதாக அமையும். ஆனால் இதுவரை வெற்றிகரமாக இது மேற்கொள்ளப்படவில்லை என்று இந்தியத் தாவரவியலாளர் கௌன் குறிப்பிட்டுள்ளார். வரண்ட பகுதிகளிலும் வளரும் தன்மை கொண்ட இப்பயன்மிகு மரத்தை தமிழ்நாட்டில் பரந்த அளவில் வளர்ப்பதற்கு, தமிழ்நாட்டுத் தோட்டக்கலை விஞ்ஞானிகளும், வனத்துறையினரும் திட்டமிடுவது அவசியமானதாகும்.

★ ★ ★

# திட்டசெயலாக்கத்தில் திருப்புமுனை

நா. ஆதிமூலம், இ.ஆ.ப.,
செயலாளர்,
வேளாண்மைத்துறை.

தலைப்பு வித்தியாசமாக இருக்கின்றதே என்ற நினைக்கின்றீர்களா! தலைப்பு மட்டுமின்றி இங்கே விவரிக்கப்போகும் திட்ட செயலாக்க முறையும் மாறுபாடு கொண்டதே. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் மைய அரசு திட்டமாயிருப்பினும், மாநில அரசும் இணைந்தே செயல்படுத்தப்பட்டு வருகின்றது. திட்ட ஒதுக்கீட்டில் இவ்விரு அரசுகளும் சம அளவில் பங்கு கொள்கின்றன.

இத்திட்டம் 1972-ஆம் ஆண்டு முதல் பல்வேறு மாநிலங்களில் தமிழ்நாடு உட்பட செயல்பட்டு வந்திருப்பினும், அதனால் எதிர்பார்த்த அளவிற்கு பயன் மக்களுக்குப் போய் சேரவில்லை என்பது மைய அரசு நியமித்த வல்லுநர் குழுவின் கருத்தாகும். மைய அரசு, புதிய வழிகாட்டி நெறிமுறைகளை 1995-ஆம் ஆண்டு முதல் வகுத்துள்ளது. அவ்வழிமுறைகள் இத்திட்ட செயலாக்கத்தில் பெரிய மாற்றங்களை செய்துள்ளது சுருங்கச் சொல்லின் அவ்வழிகாட்டி நெறிமுறைகள் திட்ட செயலாக்கத்திற்கு ஒரு திருப்பு முனையாகவே அமைந்துவிட்டது.

வளர்ச்சித் திட்டங்கள், பொதுவாக மக்களின் குறிப்பாக நலிந்தோர் வாழ்க்கை வளம் பெற அரசால், அலுவலர்களால், திட்டம் வகுக்கப்பட்டு அலுவலர்களின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இம்முறைக்கு மேலிருந்து கீழ்வரை அல்லது உயர்மட்டத்திலிருந்து அடி மட்டம் வரை என்னும் அணுகுமுறையைச் சார்ந்தது. இம்முறையைப் பின்பற்றியே வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் 1994-ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டு வந்தது. இம்முறையில் சாதனையின் இலக்குகள் குறிப்பாக நிதிச் சாதனை அடைவதில் வாய்ப்புகள் அதிகமாயிருப்பினும் அதனால் பயனாளிகளுக்கு உண்மையிலேயே பயன் கிடைத்ததா என்பது கவனிக்கப்பட வேண்டும். அதுமட்டுமின்றி மிக முக்கியமான அம்சம் என்னவென்றால் திட்டத்தில் பயனாளிகளின் ஈடுபாடு, பங்கு ஏதுமில்லை என்பதால் அதில் அவர்கள் நாட்டம் செலுத்துவதில்லை. ஏனோ, தானோ என்கின்ற மனப்பான்மையைக் கொண்டிருந்தனர். அதனால் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் இயற்கை வளங்கள் திட்டக்காலம் முடிந்தவுடன் பயனாளிகள் பராமரிப்பதில்லை, சரியான பராமரிப்புயில்லை என்பதால் சொத்துக்கள் நாளடைவில் பழுதுபட்டு பயனற்றுபோகும் நிலையும் எற்பட்டது. ஓரிரு இடங்களில் அச்சொத்துக்களைத் தங்களுக்கு இடையூறு எனக் கருதி பயனாளிகளே அழிக்கும் சூழ்நிலைகளும் ஏற்பட்டுள்ளன. இதற்குக் காரணம் என்ன? பயனாளிகளின் தேவையை அறிந்து உள்ளூர் நிலைமைகளுக்கேற்பத் திட்டங்கள் தீட்டப்படாததும், அத்திட்ட செயலாக்க முறையில் பயனாளிகளை ஈடுபடுத்தப் படாததேயாகும். இந்தக் குறைகளை நீக்கும் நோக்கத் தோடு திட்டம் தீட்டும் முறையில் அடிமட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை என்னும் அணுகுமுறையை பின்பற்றி, 1995-96 ஆம் ஆண்டிலிருந்து வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

## திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

இத்திட்டத்தின் செயல்பாட்டில் அரசின் பங்கு வசதி செய்து தருபவர் (Facilitator) மட்டுமே. குறிப்பாக வறட்சிக்கு இலக்காகும் பகுதியில் வாழும் கிராம மக்களுக்கு இத்திட்டத்தின் நோக்கத்தைப் பற்றியும் அதில் அவர்களது பங்கு பற்றியும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது, பயனாளிகளுக்கு நிர்வாகம் மற்றும் திட்டப் பணிகளில் உரிய பயிற்சி அளிப்பது மற்றும் தொழில்நுட்ப திட்டப் பணிகளில் அவர்களுக்கு உரிய ஆலோசனை வழங்குவது, அவர்கள் வகுத்த திட்டங்கள் ஆய்ந்து எற்பது, திட்டப் பணிகள் வழிகாட்டி நெறிமுறைகளின்படி செயல்படுத்தப்படுகின்றதா? என்று கண்காணிப்பதேயாகும். நேரிடையாக திட்டப்பணிகளை அரசு மேற்கொள்வதில்லை. அதே சமயத்தில், இப்பணிகளைக் கிராம அளவில் செயல்படுத்தத் தேவையான நிர்வாக அமைப்புகள், தொழில் நுட்ப வல்லுநர்கள் அடங்கிய குழு அமைத்தல் போன்ற ஆதார வசதிகள் செய்து கொடுப்பதுடன் அரசின் பங்கு முடிகின்றது.

திட்டம் தீட்டுவதாக யிருப்பினும், அத்திட்டத்தைச்

செயல்படுத்துவதாகயிருப்பினும், திட்டப் பணிகள் நல்லமுறையில் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்று மதிப்பீடு செய்வதிலும், அத்திட்டப் பணிகளுக்கு ஏற்ப செலவினத்தை மேற்கொள்ளும் பொறுப்புகள் அனைத்தும் பயனாளிகளையே சார்ந்ததாகும். சுருங்கச் சொல்லின் இந்திய நாட்டின் மக்களாட்சி முறைப்படி, இத்திட்டம் கிராம மக்களின் பயனுக்காக அப்பகுதி மக்களால் தீர்மானிக்கப்பட்டு அம்மக்களின் மூலம் செயலாக்கப் பட்டு அம்மக்களாலேயே பராமரிக் கப்பட்டு வழிவகை செய்யப் பட்டுள்ளது. அரசு அதற்கான அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது.

## திட்டப்பகுதி

வறட்சியினால் பாதிக்கப் படும் மானாவாரி நிலப்பகுதிகள் அதிகமாக உடைய 16 மாவட்டங் களிலுள்ள 80 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் தமிழ்நாட்டில் 1995-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இப்பகுதிகளை மைய அரசு, மாநில அரசின் பரிந்துரையின் பேரில் முடிவு செய்கின்றது. அவ்வூராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த கிராமங்களில் சுமார் 500 எக்டேர் கொண்ட பரப்பளவில், வல்லுநர்களின் உதவியுடன் நீர்ப்பிரிமுகடு பகுதி (Water Shed) தெரிவு செய்யப்படுகின்றது. தமிழ்நாட்டில் முதல்கட்டமாக அத்தகைய 297 நீர்பிரிமுகடு பகுதிகள் தெரிவு செய்யப்பட்டு 1995-96 முதல் கடந்த மூன்று ஆண்டுகளாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, நடப்பு ஆண்டில் இத்திட்டம் முடிவடையும் நிலையில் உள்ளது. இத்திட்டப் பகுதியில் இருக்கும் அனைத்து நிலங்களையும் தனியார் நிலம் உட்பட இத்திட்டத்தின் கீழ் சீரமைக்கப்படும், 297 பகுதிகளில் திட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் அவ்வூராட்சி ஒன்றியங்களிலுள்ள இதர பகுதிகளுக்கும் மைய அரசின் இசைவுடன் இத்திட்டம் படிப்படியாக விரிவாக்கப்படவுள்ளது.


## திட்டத்தின் நோக்கம்

நீர்ப்பிரிமுகடு பகுதியில் உள்ள தரிசுநிலம், நீர், தாவரங்கள் போன்ற இயற்கை ஆதாரங்களை வளப்படுத்துதல் குறிப்பாக மழைநீரை சேமித்து அதனால் நீர்வள ஆதாரங்களைப் பெருக்குதல், அப்பகுதியில் வாழும் மக்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தல், குறிப்பாக வருவாய் வழிவகையில்லாத ஏழை எளியவர்கள், பெண்கள் உட்பட நலிந்த பிரிவினரின் பொருளாதார சமூக நிலையை மேம்படுத்துதல் மேலும் அப்பகுதி சுற்றுப்புறம் சூழ்நிலை பாதுகாத்தல் போன்றவை திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

## நீர்ப்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம்

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் நீர்ப்பிரிமுகடு அணுகுமுறையை பின்பற்றி செயல்படுத்தப்படுகின்றது. அதற்காக நீர்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கின்றது. அத்திட்டத்தின் கீழ், மேற்கொள்ளும் முக்கிய பணிகள் பின்வருமாறு :

- நிலங்களுக்கு வரப்பு, நீர் ஓடைகளுக்கு கரை அமைத்தல்.



- கசிவு நீர்க் குட்டைகள், தடுப்பு அணைகள், மழைநீர் சேமிப்பு அமைப்புகள் நிர்மானித்தல்.
- மரக்கன்றுகள் நடுவது, வேளாண் காடு வளர்ப்பு, தீவன பயிர் வளர்ப்பு.
- மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள், மண் அரிமான தடுப்பு உட்பட நிலத்தைச் சமன்படுத்துதல், கோடை உழவு ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல் மூலம் வேலைவாய்ப்பு உருவாக்கி வருவாய் கிடைக்கச் செய்தல்.
- காய்கறிகள், பழங்கள், கோழி, மீன், கால்நடை வளர்ப்பு போன்றவை உற்பத்தி / விருத்தி செய்தல்
- நுழைமுகப் பணிகள்

### திட்டச் செயலாக்க முறை

ஒவ்வொரு நீர்ப்பிரிமுகடு பகுதியில் உள்ள கிராம ஊராட்சி தலைவரின் தலைமையில் அப்பகுதிவாழ் மக்களைக் கொண்ட சங்கம் ஒன்று அமைக்கப்பட்டு 'நீர்ப்பிரிமுகடு சங்கமாக' பதிவு செய்யப் படுகின்றது. சங்கத்தின் தலையாய பணி நீர்ப்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டத்தினை வகுத்தல், மேம்படுத்தல், திட்ட செயல்பாட்டை கண்காணித்தலாகும். அன்றாட திட்டப் பணிகள் மேற்கொள்வதற்காகவும் வழிகாட்டி குறிப்பில் குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்வதற்காகவும் பிரிதொரு செயலாக்க குழு நீர்ப்பிரிமுகடுப் பகுதிக் குழுவின் பெயரில் அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவில், பயனாளிகள் சுய உதவிக்குழு மற்றும் கிராம ஊராட்சி உறுப்பினர்கள் சுமார் 12 நபர் அடங்கிய குழுவாகும். இக்குழுவிற்குத் தலைவர் ஒருவரை இக்குழுவின் அங்கத்தினர்கள் தெரிவு செய்கின்றனர்.

### செயலர், தொண்டர் நியமனம்

செயலர் மற்றும் தொண்டர் ஆகியோர் கிராம திட்டப்பணி அலுவலர்களாக நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் சங்கம் மற்றும் குழுவின் நிர்வாகப் பணிகள், கணக்குகள் பராமரித்தல், செயல்திட்டப் பணிகளை அளவிடுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுகின்றனர். அவர்களுக்கான மதிப்பூதியம் திட்டச் செலவிலிருந்து கொடுக்கப் படுகிறது.

### நீர்பிரிப்முகடுப் பகுதி மேம்பாட்டு அணி

திட்டப் பணிகளில் பயனாளிகளுக்கு உதவி புரியவும், தொழில்நுட்ப உத்திகளைச் சொல்வதற்கும் பல துறைகளைச் சார்ந்த வல்லுநர் கொண்ட அணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. தாவர அறிவியல், வேளாண் பொறியியல், சமூக அறிவியல் போன்ற பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றோர் இவ்வணியில் உள்ளனர். இந்த அணி 10 முதல் 12 நீர்ப்பிரி முகடுகளின் திட்டப் பணியை மேற்பார்வை செய்வதுடன் நீர்ப்பிரிமுகடு குழுவிற்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குகிறது. மேலும் மக்களுக்கு இத்திட்டத்தின் பயன்களைத் தெரிவிக்கவும், பயிற்சி அளித்தும் வருகின்றது.

### திட்ட அமுலாக்க முகமை

ஊரகச் செயல்பாட்டில் அனுபவம் கொண்ட நிறுவனத்தை, நீர்ப்பிரிமுகடு பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகச் சுமார் 10 நீர்ப்பிரிமுகடு பகுதிகளுக்கு ஒரு திட்ட அமுலாக்க முகமை நியமிக்கப் படுகின்றது. தமிழ்நாட்டில், அரசு சார்பான 30 நிறுவனங்கள் திட்ட அமுலாக்க முகமைகளாக செயல்பட்டு வருகின்றன. திட்ட செயற்பாட்டினை நிர்வகித்தல், கணக்குகளை ஆய்வு செய்து சான்றளித்தல், மேற்பார்வை யிடுதல், பயனாளிகள் மற்றும் இதர பிரிவினர்க்கு உரிய பயிற்சி அளித்தல் போன்ற பணிகளை இம்முகமை பார்த்துக் கொள்கிறது.

### மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

வழிகாட்டி குறிப்புகளை மாவட்ட அளவில் செயல் படுத்துவது மாவட்ட ஊரக வளர்ச்சி அமைப்பின் பொறுப்பாகும். மைய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து நிதியைப் பெற்ற, நீர்ப்பிரிமுகடு குழுவினர்களுக்கும் திட்டப்பணி நிறைவேற்றுவதற்காகவும் பங்கீடு செய்யும். மேலும் மாவட்ட நீர்ப்பிரிமுகடு பகுதி மேம்பாட்டு ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின்படி திட்டப் பணிகளை அங்கீகரிக்கின்றது.

### மாநில நீர்ப்பிரிமுகடு பகுதி திட்ட செயலாக்கம் மற்றும் ஆய்வுக்குழு

நீர்ப்பிரி முகடு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல் படுத்துவதின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், ஆய்வு மற்றும் மதிப்பீடு செய்யவும் மாநில அளவில் இக்குழு அமைக்கப்



படுகிறது. தலைமைச் செயலர் அவர்களின் தலைமையில் 15 நபர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

### நிதி வழங்குதல்

பயானளிகள் மற்றும் சுய உதவிக்குழு மேற்கொண்ட திட்டப் பணிகளுக்கான செலவிற்கு உரிய ஆவணங்களின் அடிப்படையில் பணியின் தரத்தை மதிப்பீடு செய்த பிறகு தொகையை வழங்க நீர்ப்பிரிமுகடு குழுவின் தலைவர், செயலர் மற்றும் மேம்பாட்டு அணியின் அங்கத்தினர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஊரக வளர்ச்சி ஒதுக்கும் நிதி, வங்கியில் திட்டப் பணிக்காக தொடங்கப்பட்டிருக்கும் சேமிப்புக் கணக்கில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

### நிதியின் அளவு

ஒவ்வொரு நீர்ப்பிரி முகட்டிற்கும் திட்டத்தின் கீழ் நான்கு ஆண்டுகளுக்காக மொத்தம் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கப்படுகின்றது. மைய மற்றும் மாநில அரசுகள் தலா ரூ.10 இலட்சம் தங்கள் பங்குகளாக தருகின்றன. அதில் ரூ.2 இலட்சம் நிர்வாகச் செலவிற்கும், பயிற்சி மற்றும் சமுதாய விழிப்புணர்ச்சிகளுக்காகத் தலா ரூ.1 இலட்சமும் ஒதுக்கப்படுகின்றது. மீதமுள்ள ரூ.16 இலட்சத்தில் 'நுழைமுகப் பணிகளுக்காகவும் நீர்ப்பிரிமுகடு திட்டப் பணிகளுக்காகவும் ஒதுக்கப்படுகின்றன. மைய அரசும் மாநில அரசும் 1995-96 முதல் இதுநாள் வரை 297 நீர்ப்பிரி முகடுகளின் செயல்பாட்டிற்கு மொத்தம் ரூ.49.32 கோடி ஒதுக்கியுள்ளது.

### புதிய பகுதிகள் சேர்த்தல்

மாநில அரசு மைய அரசுடன் மேற்கொண்ட முயற்சிகளினால் கூடுதலாக 103 நீர்ப்பிரி முகடுகளில் திட்டப்பணி மேற்கொள் மைய அரசு அனுமதித்து, அதில் 42 பகுதிகளுக்கான முதல் தவணை உதவியாக ரூ.84.84 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இப்பகுதிகளில் நிர்வாக அமைப்புகள் உருவாக்கும் ஆதார பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் கூடுதல் பகுதிகள் தெரிவு செய்வதில் பயன்படுத்தப்படாத நிலங்களின் மேம்பாட்டிற்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

இத்திட்டம் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், தரிசு நிலங்களில் விளைச்சல்களைப் பெருக்கும் நோக்கத்தோடு, ஒவ்வொரு நீர்ப்பிரிமுகடுப் பகுதியின் திட்டப் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் வெற்றி, கிராம மக்களின் வெற்றி என்று சொன்னால் அது மிகையாகாது. அதனால் வறட்சிப் பகுதிகள் இனி வளமைப் பகுதிகளாக மாறும் சூழ்நிலை இத்திட்டத்தினால் உருவாக்கப்பட்டுள்ளதால் இதனைத் திட்ட செயலாக்கத்தில் ஒரு திருப்பு முனை என்று சொல்வது மிகவும் பொருத்தமாகும். □

# சிற்றிதழ்கள் செய்ததும் செய்யத் தவறியதும்

- வல்லிக்கண்ணன்

2000 ஆவது ஆண்டு பிறக்கும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. 1900 எண் வரிசையில் கணக்கிடப்பட்ட வருடங்களின் முடிவுக்கு இன்னும் அதிக காலம் இல்லை.

இது வெறும் எண்கள் பற்றிய கணக்கு இல்லை. தோன்றி, வளர்ந்து, தேய்ந்த ஒரு கால கட்டத்திய அளவு ஆகும். ஒரு நூற்றாண்டு முடிகிறது. புதியதோர் நூற்றாண்டு பிறக்கிறது.

முடிவை நெருங்கிக் கொண்டிருக்கும் இருபதாம் நூற்றாண்டு, உலக நாடுகளுக்கும், மனித இனத்துக்கும் எவ்வளவோ நன்மைகளையும், தீமைகளையும், இலாபங்களையும், நஷ்டங்களையும், இன்பங்களையும், துன்பங்களையும், எதிர்பார்ப்புகளையும், ஏமாற்றங்களையும், சோதனைகளையும், வேதனைகளையும், ஆக்கங்களையும், அழிவுகளையும், சேர்த்துள்ள காலப்பகுதியாகும். அறிவியல், வாழ்வியல், பொருளாதாரம், சமூக இயல், அரசியல், கலை கலாச்சாரம் போன்ற பல துறைகளிலும் பெரும் வளர்ச்சியும் - அதே சமயம் சிதைவும் சீரழிவும் - ஏற்பட வகை செய்திருக்கிறது. ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள், பரிசோதனைகள் மூலம் உலகத்தையும் மனித இனத்தையும் நாகரிக வளர்ச்சிப் பாதையில் முன் நடத்திச் சென்றிருக்கிறது. அதே சமயம் உணர்ச்சிவெறி, தன்னல நோக்கு, சாதி - மத - இனக் கண்ணோட்டச் செயல்கள், குறுகிய மன இயல்புகள் மூலம் அநாகரிக - பூர்வ காட்டு மிராண்டித்தனமான - போக்குகளிலேயே உழல வைத்திருக்கிறது.

இவை பற்றி எல்லாம் சிந்தனையாளர்களும், அறிவு ஜீவிகளும், கல்வியாளர்களும், சமூக இயலாளர்களும், வரலாற்று ஆய்வாளர்களும், பிறரும் பேசியும் எழுதியும் கணக்கிடுவார்கள். பத்திரிகைகள் அவற்றில் பலவற்றைப் பிரசுரிக்கும். இப்போதே சில பத்திரிகைகள் அந்த விதமான கட்டுரைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன.

பத்திரிகைகள், எழுத்து முயற்சிகள், (இலக்கிய முயற்சிகள் - கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, நாடகம்) ஆகியவற்றுக்கு இந்த நூற்றாண்டு எவ்வாறு உதவியிருக்கிறது? இவற்றை அளவிடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் நல்லது.

நெடிய காலப் பாதையில் அவ்வப்போது இப்படி கணக்கிடப்பட்டிருக்க வேண்டும். 1920-30-40 என்று ஒவ்வொரு பத்து வருட எல்லையிலும், இத்தகைய ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

அப்படிச் செய்திருந்தால், துறைதோறும் என்னென்ன முயற்சிகள் நடந்திருக்கின்றன; அவற்றின் தன்மை என்ன; பலங்களும், பலவீனங்களும் என்னென்ன; வளர்ச்சியா, தேய்வா, தேக்கமா என்பதெல்லாம் தெரிய வந்திருக்கும். வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் புதுமைச் சோதனைகளுக்கும் ஊக்கம் அளிக்கும் உந்துதலாகவும் அவை அமைந்திருக்கக் கூடும்.

பத்து வருடக் கால அளவில் செய்யப்படாது போயினும், கால் நூற்றாண்டு - அரை நூற்றாண்டு, எழுபத்தைந்து வருட எல்லை (முக்கால் நூற்றாண்டு) எனும் நோக்கிலாவது இந்த விதமான அளவிடுதல்களும் ஆய்வுகளும் செய்யப்பட்டிருந்தால் பயன் உள்ளதாக இருந்திருக்கும். இதுவரை செய்யப்பட்டுள்ளவை எத்தரத்தில் உள்ளன; இனி என்ன செய்யப்பட வேண்டும் என்ற உணர்வோடு, இத்துறையில் ஈடுபட்டவர்களும் இனி ஈடுபடப் போகிறவர்களும் உழைத்துப் புதுமைகளை வளத்தோடும் வனப்போடும் ஆக்கி, தத்தமது தனித்தன்மையை நிலைநிறுத்த ஊக்கம் தருவனவாகவும் அந்த ஆய்வுகள் உதவியிருக்கும்.

தமிழில் சிறுகதை சம்பந்தப்பட்ட வரையில் இப்படி ஒரு பெரிய

## தெரிந்து கொள்வோம்

### *இந்தியாவின் முதல் பத்திரிகை*

இந்தியாவில் தொடங்கிய முதல் பத்திரிகை பெங்கால் கெஜட் என்ற பத்திரிகை; துவங்கப்பட்ட இடம் கல்கத்தா, 1780 ஜனவரி 29ஆம் நாள் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்பவரை ஆசிரியராக கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

★ ★ ★

### *இந்தியாவின் முதல் பெண்கள்*

இந்தியாவில் முதல் பெண் டாக்டர் கதம்பினி கங்குலி, முதல் பெண் சபாநாயகர் சுசிலாநய்யார், முதல் பெண் மேயர் சுலோசனாமோடி, முதல் பெண் வக்கீல் ரெஜினாகுஹா, முதல் பெண் முதல் மந்திரி சசிதா கிருபனானி.

★ ★ ★

### *தமிழக அரசின் சின்னம்*

தமிழக அரசின் சின்னம் ஸ்ரீவில்லிபுத்தூர் கோவில் கோபுர சின்னமாகும்.

★ ★ ★

### *இந்தியமொழியில் அச்சு*

இந்திய உள்நாட்டு மொழிகளிலே புத்தகங்கள் முதல் முதல் அச்சிட தொடங்கியது 1577ஆம் வருடம். முதல் முதலாக அச்சிடப்பட்ட புத்தகம்"கிறிஸ்திய கொள்கை" என்ற புத்தகமாகும்.

★ ★ ★

### *பேனா முனை*

ஆஸ்டியம், இரிடியம் என்ற இரண்டு உலோகங்கள் சேர்ந்த ஆஸ்மியிரிடியம் என்ற கலப்பு உலோகம் தான் பேனா நிப்பின் முனையில் வைக்கப்படுகிறது. இதுவே உறுதியாகவும், வளையாமலும், தேயாமலும் இருக்கிறது.

*தொகுப்பு : ஐ.எஸ்.அனந்தராஜன்*

நல்ல முயற்சிக்கு அடித்தளம் இடப்பட்டது. ஆனால் அது ஆரம்பக் கட்டத்தோடு நின்று விட்டது.

தமிழ்ச் சிறுகதை இலக்கியத் தரம் பெறத் தொடங்கியது 1920 களில். 1930 களில் அது வலிமையும் வனப்பும் பெறத் தொடங்கியது. அக்கால கட்டத்தில் படைப்பாளர்கள் சிலராகவே இருந்தனர். படைப்பு முயற்சிகளும் குறைந்த அளவு தான்.

ஆகவே, தமிழ்ச் சிறுகதை ஆரம்பக் கட்டத்தை 1920 முதல் 1940 வரையிலான இருபது வருடங்களுக்குள் அடக்கி, அக்காலத்திய படைப்பாளிகளையும் அவர்களுடைய படைப்புகளையும் பார்வையிட்டு மதிப்பீடு செய்வது. அடுத்தடுத்து ஒவ்வொரு பத்து வருடங்களுக்கும் உரியனவற்றை - 1940 முதல் 1950 வரை: 50 முதல் 60 வரை... இப்படி மேலே கணக்கிட்டு - ஆய்வு செய்வது என்பது திட்டம்.

இதைச் செயல்படுத்த முன் வந்தது பம்பாய்த் தமிழ்ச் சங்கம். ஒருவரே மதிப்பீடு செய்தால் போதாது; இரண்டு பேர் தனித் தனியாக ஆய்வுசெய்து கருத்துரை வழங்குவது: இவ்விருவரது பார்வைக்கு அப்பாலும் ஒரு பார்வை இருக்கலாம் அல்லவா? அந்தப் பார்வை வாசகருடையதாக இருக்கட்டும் என்று இத்திட்டத்தை வகுத்தவர்கள் தீர்மானித்தார்கள். "தமிழ்ச் சிறுகதை - மூன்று பார்வைகள்" என்று அதற்குப் பெயரிட்டார்கள். 2 விமர்சகர்களின் மதிப்பீடுகள் கொண்ட முதல் புத்தகம் - 1920க்கும் 1940க்கும் உட்பட்ட சிறு கதைகள் பற்றியது - 'மூன்று பார்வைகள்' முதல் வெளியீடு என்று பிரசுரம் பெற்றது. அசோக மித்திரன், என்.ஆர். தாசன் இருவரும் அக் காலகட்டத்திய சிறுகதைகள் பற்றிய அவரவர் பார்வைகளை விரிவாகப் பதிவு செய்திருந்தார்கள், உரியமுறையில் அவற்றைப் படிக்கிற வாசகர்கள் தத்தமது பார்வையை மூன்றாவது மதிப்பீடாகக் கொள்ளலாம்.

வரவேற்புக்கும் பாராட்டுதலுக்கும் உரிய இந்த முயற்சி முதலாவது புத்தகத்துடன் நின்று போயிற்று. அடுத்தடுத்த கால கட்டங்களின் படைப்பாளிகள் - படைப்புகள் பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளப்படவேயில்லை. இது வருத்தத்துக்குரிய விஷயம்தான்.

தமிழ் இலக்கியத்தின் வனப்பான பகுதியான சிறுகதை பற்றி இவ்விதம் ஒரு முயற்சியாவது மேற்கொள்ளப்பட்டது. வளமான - மிகுதியாக - வளர்ந்துள்ள - நாவல் குறித்து ஒரு சிறு முயற்சி கூட கையாளப்பட்டதில்லை. வெகு வேகமாகவும் மிக அதிகமாகவும் வளர்ந்துவிட்டதாகப் பேசப்படுகிற கவிதை சம்பந்தமாக மதிப்பீட்டு முயற்சி எதுவுமே செய்யப்பட்டதில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒரு நூற்றாண்டு முடிவுற இருக்கிறபோது, இந்த நூற்றாண்டில் தமிழ் இலக்கியத்தில் துறைதோறும் என்ன செய்யப்பட்டிருக்கின்றன என்று அளவிட வேண்டியது அவசியம் ஆகும்.

'தமிழில் உருப்படியாக எதுவுமே இல்லை - சாதனைகள் என்று குறிப்பிட்டுச் சொல்லும்படியாக ஒன்றும் இல்லை' - என்று சில விமர்சன மேதாவிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவ்விதமான 'மதிப்பீடுகள்' சில அறிவு ஜீவிகளின் தலைகனத் தன அகங்கார மமதை பேச்சுக்களே என்று எடுத்துக் காட்ட, பத்துப் பத்து வருடங்களின் அளவில் தோன்றியுள்ள எழுத்து முயற்சிகளின் அளவீடுகள் உதவும்.

இப்பொருள் குறித்து எழுதுவதற்கு இன்னும் ஏராளமான விஷயம் இருக்கிறது.

*நன்றி* : 'சிற்றிதழ்ச் செய்தி'

# சென்னை மத்திய கூட்டுறவு வங்கி

சென்னை மத்திய கூட்டுறவு வங்கி 68 ஆண்டுகளாக, தமிழகத்தின் தலைநகரமாகிய சென்னை மாநகரில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

**நிர்வாக அமைப்பு**

இவ்வங்கி 59 கிளைகள் கொண்டுள்ளது. தென் இந்தியாவிலேயே முதன் முறையாக 'நடமாடும் வங்கி'யை அறிமுகப்படுத்தி, வங்கி வசதியில்லாத நகர் பகுதியிலுள்ள மக்களுக்கும் சேவையை அளித்து வருகின்றது.

526 கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்டு அவர்களின் கடன் தேவையை உடனுக்குடன் நிறைவு செய்து வருகின்றது.

**பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன்கள்**

சென்னை மத்திய கூட்டுறவு வங்கி பிரதம பணியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, அவற்றின் உறுப்பினர்களுக்கு பிணைக்கடன் மற்றும் நுகர்வோர் கடன் வழங்க நிதி உதவி அளித்து வருகின்றது. பிணைக்கடனாக உறுப்பினர் ஒருவருக்கு அதிக அளவாக ரூ.50,000 மற்றும் நுகர்வோர் கடனாக உறுப்பினர்களுக்கு ஒருவருக்கு ரூ.15,000 கடன் பெறும் தகுதிக்கேற்ப வழங்கி வருகிறது. இக்கடன்களுக்கு ஆண்டொன்றுக்கு 16.5% வட்டி வசூலிக்கப்படுகின்றது.

**நகைக்கடன்கள்**

பொதுமக்களின் அன்றாட அத்தியாவசிய மற்றும் அவசர தேவைகளுக்காக கிளைகளின் மூலம் நகை கடன் வழங்கப்பட்டு வருகிறது. தனி நபர் ஒருவருக்கு அதிகப்பட்சமாக ரூ.1,00,000. சவரனுக்கு ரூ.2,000 வீதமும் கடன் அளிக்கப்படுகிறது. இதற்கு ஆண்டு ஒன்றுக்கு 18% வட்டி வசூலிக்கப்படுகிறது.

**நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகள்**


தமிழக அரசு அமல்படுத்தும் அத்தியாவசிய பொருட்கள் வினியோக திட்டத்தின் கீழ் பயன்படும் மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு, சென்னையில் செயல்படும் மொத்த மற்றும் பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு 30.09.1998 வரை வழங்கிய காசுக் கடன் ரூ.7.70 கோடி ஆகும். பொது விநியோக திட்டங்களுக்காக வழங்கப்படும் கடனுக்கு 14% வட்டியும் இதர திட்டங்களுக்கு வழங்கப்படும் கடனுக்கு 14.5% வட்டியும் வசூலிக்கப்படுகிறது.

**கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்**

நம் நாட்டில் விவசாயத்தை அடுத்து பெரும்பான்மையோருக்கு வேலை வாய்ப்பு அளித்து வரும் கைத்தறி தொழிலுக்கு ரூ.9.25 இலட்சங்கள் காசுக் கடனாக பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கியுள்ளது. இதற்கு ஆண்டொன்றுக்கு 13% வட்டி வசூலிக்கப்படுகிறது.

### பண்ணை சாராக் கடன்

பண்ணை சாராக் கடன் திட்டத்தின் கீழ் நபார்டு என்றழைக்கப்படும் தேசிய விவசாய மற்றும் கிராமப் புற வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் சிறுதொழில் முனைவர்களுக்கு சிறுதொழில்



கடன் வழங்கி வருகிறது. இத்திட்டத்தில் அதிக அளவாக ரூ.10 இலட்சங்கள் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் ஈட்டின் பேரில் கடன் வழங்கப்படுகிறது. இதற்கு வட்டி, கடன் ரூ.25,000 வரை 12%, ரூ.25,000 முதல் 2,00,000 வரை 14%, ரூ.2,00,000 மேல் 16.5% வசூலிக்கப்படுகிறது.

30.09.1998 வரை இவ்வகையில் வழங்கப்பட்டுள்ள கடன் 2.60 கோடி ஆகும்.

மருத்துவர்களுக்காக சிட்பி என்று அழைக்கப்படும் சிறுதொழில் வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் மருத்துவ உபகரணங்கள் வாங்குவதற்கும் மருத்துவமனைகள் தொடங்குவதற்கும் அதிகபட்சமாக ரூ.20 இலட்சங்கள் அளிக்கப்படுகிறது. இதற்கு வட்டி ரூ.25,000 வரை 12%, ரூ.25,000 முதல் 2,00,000 வரை 13.5%, ரூ.2,00,000 மேல் 17% வசூலிக்கப்படும்.

### ஓய்வு ஊதியம் பெறுவோர்கான கடன்

ஓய்வூதியம் பெறும் மூத்த குடிமக்களான மத்திய மற்றும் மாநில அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு மருத்துவ செலவிற்காக ரூ.5,000 வரை கடன் வழங்கப்படுகிறது. இக்கடனுக்கு ஆண்டொன்றுக்கு 16.5% வட்டி வசூலிக்கப்படுகிறது.

### கணிப்பொறிக் கடன்

இன்று கணிப்பொறி வாழ்வின் இன்றியமையாத அம்சமாக திகழ்கிறது. சிறு வியாபாரி முதல் பெரும் வர்த்தக நிறுவனங்கள் ஈறாக கணிப்பொறிகளை பயன்படுத்தி வருகின்றன. இல்லங்களிலும் சொந்த உபயோகத்திற்கு கணிப்பொறிகளை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் ரூ.50,000 வரை தனிநபர் சொந்த உபயோகத்திற்கு கணிப்பொறி வாங்க கடன் வழங்கப்படுகிறது. இக்கடனுக்கு ஆண்டொன்றுக்கு 16.5% வட்டி வசூலிக்கப்படுகிறது.

### வீட்டின் பேரில் ஈட்டுக்கடன்

நகர மக்களின் பெருகி வரும் தேவைகளை கருத்தில் கொண்டு வீடுகளின் ஈட்டின் பேரில் நபர் ஒருவருக்கு அதிகப்பட்சமாக ரூ.10 இலட்சம் வரை ஆண்டொன்றுக்கு 18% வட்டி வீதத்தில் வழங்கப்படுகிறது. இவ்வகை கடனாக 30.09.1998 வரை ரூ.4.67 கோடி வழங்கப் பட்டுள்ளது.

### அடையாளச் சிறுதொழில் கடன்

நடைபாதை சிறுவியபாரிகளுக்கு அவர் தம் தொழில் செய்ய நபர் ஒருவருக்கு அதிக அளவாக ரூ.2,000 ஆண்டொன்றுக்கு 15% வட்டியில் நபர் ஜாமீன் அடிப்படையில் கடன் வழங்கப்படுகிறது.

இவ்வகையில் 30.09.1998 வரை ரூ.7.47 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★

சாதி மதபேதங்கள் மூடவழக்கங்கள்
தாங்கி நடைபெற்றுவரும் சண்டை உலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம்; பின்னர்
ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம்!
– புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

**புதியதோர் உலகம் செய்வோம்!**


சென்னை மாநகரில்

# குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுப் பணிகள்

சென்னை நகரில் செப்டம்பர் 96க்கு முன் தினசரி 25 கோடி லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. கடைமடை பகுதிகளான திருவான்மியூர், இந்திராநகர், வேளச்சேரி, தரமணி ஆகிய பகுதிகளுக்கு நிலத்தடி நீர் படுகையிலிருந்து 50 இலட்சம் லிட்டர் நீர் எடுத்து வழங்கப்பட்டு வந்தது.

மக்களுக்கு வழங்கும் குடிநீர் அளவினை படிப்படியாக உயர்த்தவும் பற்றாக்குறையின்றி சமமாக விநியோகிக்கவும் ஒரு பெரும் தொலைநோக்கு திட்டம் சுமார் ரூ.1296 கோடி மதிப்பீட்டில் 1991—ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு, இத்திட்டம் தேவைகேற்ப படிப்படியாக முடிக்க திட்டமிடப்பட்டு, முதல் கட்டமாக சுமார் ரூ.132 கோடி செலவில் பல பணிகள் நிறைவேற்றப்பட்டன. இரண்டாவது கட்டப் பணிகள் ரூ.906 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மேலும் மூன்றாம் கட்டப் பணிகள் ரூ.900 கோடி செலவில் நிறைவேற்றப்படவுள்ளது.

முதல் கட்டத்தில் முடிக்கப்பெற்றுள்ள பணிகளில், செங்குன்றத்தில் 30 கோடி லிட்டர் திறன் கொண்ட ஒரு சுத்திகரிப்பு நிலையமும் சுத்திகரித்த நீரை சென்னைக்கு கொண்டுவர அமைக்கப்பட்ட பெரிய பைப்புகளும் முக்கியமானதாகும். இப்பணிகள் முடிக்கப் பெற்றபின், 29-9-1998லிருந்து தினமும் சென்னை நகருக்கு 44 கோடி லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.



குடிநீர் விநியோகத்தில் சமநிலை பெறவும், உயர் அழுத்தத்தை உருவாக்கவும் தற்போதுள்ள 4 நீர் வழங்கு நிலையங்களுடன் மேலும் 12 நீர் வழங்கு நிலையங்களும், குடிநீர் கொண்டுசெல்ல பெருங்குழாய்களும் புதிய குடிநீர் விநியோகக் குழாய்களும் அமைக்க திட்டமிடப்பட்டது. இவற்றில் திருவல்லிக் கேணி மற்றும் வள்ளுவர் கோட்டம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட நீர் வழங்கு நிலையங்கள் கட்டிமுடிக்கப்பெற்றுத் தற்போது இயங்கிவருகிறது.

மேலும் கண்ணப்பர் திடல் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் குடிநீர் வழங்கு நிலையம் இவ்வாண்டு இறுதியில் முடியும் நிலையில் உள்ளது. மீதமுள்ள ஒன்பது நிலையங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகிறது. அவைகள் 2000ஆம் ஆண்டு முடிக்கப்பெறும்.

இந்த பணிகள் முடிந்தபின் சென்னை நகரம் முழுவதிலும் குடிநீர் சமநிலையில் உயர் அழுத்தத்துடன் கிடைக்கும். இதனால்

நாளொன்றுக்கு நபரொன்றுக்கு 100 லிட்டர் முதல் 120 லிட்டர் வரை குடிநீர் வழங்கப்படும்.

**பராமரிப்பு மேம்பாட்டுப் பணிகள்**

தற்போது சுமார் ரூ.654 இலட்சம் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளுக்கும், ரூ.354 இலட்சம் கழிவுநீர் மேம்பாட்டுப் பணிகளுக்கும் ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவற்றில் சுமார் ரூ.650 இலட்சம் அளவிற்கு பணிகள் முடிக்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள பணிகள் வருகிற மார்ச் 99க்குள் முடிக்கப் பட்டுவிடும்.

இம்மேம்பாட்டுப் பணிகள், டாக்டர் இராதாகிருஷ்ணன் தொகுதியில் தண்டையார் பேட்டை, வண்ணாரப்பேட்டை ஆகிய இடங்களில் குடிநீர்ப் பணிகள் ரூ.57.52 இலட்சத்திற்கும், கழிவுநீர் மேம்பாட்டுப் பணிகள் ரூ.20.52 இலட்சம் ஆக ரூ.78.04 இலட்சத்திற்குப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இராயபுரம் மற்றும் துறைமுகப் பகுதிகளில் குடிநீர்ப் பணிகளுக்கு ரூ.16.04 இலட்சத்திற்கும், கழிவுநீர்ப் பணிகள் ரூ.39.35 இலட்சத்திற்கும் ஆக மொத்தம் ரூ.55.39 இலட்சத்திற்குப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வியாசர்பாடி, பெரம்பூர் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர்ப் பணிகள் ரூ.83.17 இலட்சத்திற்கும், கழிவுநீர்ப் பணிகள் ரூ.41.51 இலட்சத்திற்கும் ஆக மொத்தம் ரூ.124.68 இலட்சத்திற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.

வில்லிவாக்கம், அயனாவரம், கீழ்ப்பாக்கம் மற்றும் கொளத்தூர் பகுதிகளுக்கு குடிநீர் மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.58.79 இலட்சத்திற்கும், கழிவுநீர் மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.18.54 இலட்சத்திற்கும், ஆக மொத்தம் ரூ.77.33 இலட்சத்திற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அண்ணாநகர், அரும்பாக்கம் மற்றும் புரசைவாக்கம் பகுதிகளில் குடிநீர்ப் பணிகளுக்கு ரூ.151.12 இலட்சத்திற்கும், கழிவுநீர்ப் பணிகள் ரூ.48.45 இலட்சத்திற்கும் ஆக மொத்தம் ரூ.199.57 இலட்சத்திற்குப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சிந்தாதிரிப்பேட்டை, சேப்பாக்கம், திருவல்லிக்கேணி மற்றும் இராயப்பேட்டை பகுதிகளுக்குக் குடிநீர்ப் பணிகள் ரூ.75.97 இலட்சத்திற்கும், கழிவுநீர்ப் பணிகள் ரூ.68.68 இலட்சத்திற்கும் ஆக மொத்தம் ரூ.144.65 இலட்சத்திற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆயிரம்விளக்கு, நுங்கம்பாக்கம் மற்றும் எழும்பூர்ப் பகுதிகளுக்குக் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.38.35 இலட்சத்திற்கும் கழிவுநீர் மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.21.01 இலட்சத்திற்கும் ஆக மொத்தம் ரூ.59.36 இலட்சத்திற்குப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தியாகராயநகர் மேற்குமாம்பலம் மற்றும் நந்தனம் பகுதிகளில் குடிநீர்ப் பணிகளுக்கு ரூ.45.99 இலட்சத்திற்கும், கழிவுநீர்ப் பணிகள் ரூ.32.49 இலட்சத்திற்கும் ஆக மொத்தம் ரூ.78.48 இலட்சத்திற்குப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சைதாப்பேட்டை, கோட்டூர்புரம், கே.கே.நகர் ஆகிய பகுதிகளுக்குக் குடிநீர்ப் பணிகள் ரூ.23.02 இலட்சத்திற்கும், கழிவுநீர்ப் பணிகள் ரூ.24.80 இலட்சத்திற்கும் ஆக மொத்தம் ரூ.47.82 இலட்சத்திற்குப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மயிலை, அடையாறு, திருவான்மியூர் மற்றும் வேளச்சேரிப் பகுதிகளுக்குக் குடிநீர் மேம் பாட்டுப் பணிகளுக்கு ரூ.103.87 இலட்சத்திற்கும் கழிவுநீர் மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.38.12 இலட்சத்திற்கும், ஆக மொத்தம் ரூ.141.99 இலட்சத்திற்குப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இம்மேம்பாட்டுப் பணிகள் தூர்ந்துபோன இரும்புக் குழாய்களை மாற்றியமைத்தல், பிவிசி/ கல்நார் குழாய்களை இரும்புக் குழாய்களாக மாற்றியமைத்தல், குழாய் மட்டங்களை இறக்கிப் பதித்தல் மற்றும் ஆழ்நுழைவாயில்கள்

**சாதி—சமய வேறுபாடு கூடாது.**
**எல்லா மக்களும்**
**'ஒரே தாய் வயிற்றுப்**
**பிள்ளைகள்'**
**போல இணைந்து சமநிலையில்**
**வாழ வேண்டும்.**

**— காந்தியடிகள்**



## பெண்ணில் ஆண் அடக்கம்

| | |
|---|---|
| She | - he |
| Woman | - man |
| Lady | - lad |
| Female | - Male |
| Her | - He |

பெண்ணில் ஆண் அடக்கம் என்பதை விளக்கும் ஆங்கிலச் சொற்கள்.

அமைத்தல், கழிவுநீர்க் குழாய்களைச் சுத்தப்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதனால் சுமார் 7 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

மேலும், மாதவரம் நீரேற்று நிலையத்திலிருந்து 700 மி.மீ. விட்டமுள்ள குழாய்கள் புதுப்பிக்கும் பணிகள் ரூ.337 இலட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

இதனால் வட சென்னைக்கு குடிநீர் தேக்கி வைக்கப்படும் அண்ணா பூங்காவிற்கு குடிநீர் தடங்கல் இல்லாமல் தொடர்ந்து வந்து சேரும். இதனால் வடசென்னை பகுதியிலுள்ள தண்டையார்பேட்டை, ராயபுரம் போன்ற பகுதிகளில் குடிநீர் விநியோகம் தடையின்றி வழங்கப்பட்டு, நாளொன்றுக்கு நபரொன்றுக்கு 50லிருந்து 70 லிட்டராக உயர்த்தப்படும்.

திருவல்லிக்கேணி நீரேற்று நிலையம் அமைக்கப்பட்ட பிறகும், சில தெருக்களில் குடிநீர் அழுத்தம் குறைவாக இருப்பதை அறியப்பட்டு, அதைச் சீர் செய்ய ரூ.64 இலட்சம் செலவில், ஒரு தனிக் குழாய் பதிக்கும் பணி தொடங்கப்பட உள்ளது. இதனால் 41 தெருக்களில் குடிநீர் அழுத்தம் அதிகரித்து கூடுதலான குடிநீர் விநியோக்கப் படும்.

90,000 மக்கட்தொகை கொண்ட கொளத்தூர் பகுதி, கிழக்கு மேற்கு மற்றும் தெற்கு என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, 24,000 மக்கட்தொகை கொண்ட தெற்குப் பகுதிக்கு இராஜமங்களம் நீரேற்று நிலையத்திலிருந்து தினமும் நாளொன்றுக்கு நபரொன்றுக்கு 50 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 66,000 மக்கட்தொகை கொண்டுள்ள கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளுக்கு பழைய கொளத்தூர் நீரேற்று நிலையத்திலிருந்து ஒரு நாள் விட்டு ஒரு நாள், நபரொன்றுக்கு 27 முதல் 50 லிட்டர் வரை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இப்பகுதிக்கும் தினமும் குடிநீர் வழங்க தற்போதிருக்கும் அமைப்பில் இயலவில்லை. ஆகவே தினமும் குடிநீர் வழங்க ஏதுவாக 300 மி.மீ. விட்டமுள்ள குழாய் பதிக்கும் பணி ரூ.56 இலட்சம் செலவில் எடுத்துக்கொள்ளப் படவுள்ளது. இந்தப் பணி முடிந்தபின் 40 குடிநீர் தொட்டிகள் 14 லாரி நடைகள் குறைக்கப் படவும் உள்ளன. இதனால் கொளத்தூரில் உள்ள எல்லா மக்களுக்கும் நாளொன்றுக்கு, நபர் ஒன்றுக்கு, 50 லிட்டர் குடிநீர் கிடைக்கும்.

### கழிவுநீர் அகற்று மேம்பாட்டு பணிகள்

சென்னை நகரில் கழிவுநீரகற்று அமைப்பு முதன்முதலாக 1890ல் அமைக்கப்பட்டுப் பின் படிப்படியாக மேம்பாடு செய்யப்பட்டு விரிவடைந்துள்ளது. தற்போது நகரில் மொத்தம் 1900 கி.மீ. நீளமுள்ள கழிவுநீர்க்குழாய்கள் கொண்ட கழிவுநீர் அகற்று அமைப்புகளும், 114 கழிவுநீரகற்று நிலையங்களும் மற்றும் 6 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களும் உள்ளன. நகரில் குடிநீர் வழங்குவது அதிகரிப்பிற்கேற்பக் கழிவுநீர் உற்பத்தி பெருகும். இவ்வாறு பெருகிவரும் தேவையினைப் பூர்த்தி செய்ய ஒரு பெரும் திட்டம் தீட்டப்பெற்றுப் பணிகள் ரூ.400 கோடி செலவில் படிப்படியாக நடந்துவருகிறது.

சீத்தம்மாள் காலனி கழிவு நீரேற்று நிலையத்திலிருந்து தனிக்குழாய் மூலம் தெற்கு மயிலாப்பூர் கழிவு நீரேற்று நிலையத்திற்கு குழாய் பதிக்கும் பணி ரூ.58 இலட்சம் செலவில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இதனால் சீத்தம்மாள் காலனி, ஸ்ரீராம் நகர், டிமான்டி காலனி போன்ற பகுதிகளில் கழிவுநீர் அடைப்பு முழுமையாக குறைக்கப்படும்.

— இவ்வாறாக சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணிகள் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



சாதிக் கொடுமைகள் வேண்டாம் – அன்பு தன்னிற் செழித்திடும் வையம்!

– பாரதியார்

# ஊனம் ஒரு தடையில்லை

அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாள் விழாவில் 1998-ஆம் ஆண்டிற்கு ஊனமுற்றோரில் சிறந்த பணியாளருக்கான மாநில விருதுபெற திரு.மேகலிங்கம் சுப்பிரமணியன், (செயலாளர், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை - 600 098) அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு 3-12-1998 அன்று கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.நாஞ்சில் கி.மனோகரன் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் திருமதி.சற்குணபாண்டியன் ஆகியோர் கலந்துக் கொண்டு விருதினை வழங்கினார்கள்.

**திரு.மேகலிங்கம் சுப்பிரமணியன் பற்றிய குறிப்பு**

குழந்தை பருவத்தில் 4.2.1943-ல் எட்டயபுரத்தில் சாதாரண ஏழை நெசவாளர் குடும்பத்தில் பிறந்த திரு.சுப்பிரமணியன், இளம்பிள்ளை வாத நோயினால் பாதிக்கப்பட்டு இரண்டு கால்களும் ஊனம் அடைந்தார். குழந்தை பருவ ஊனத்தின் காரணமாக பல வேதனைகளையும், சோதனைகளையும் கடந்து, 1968-ல் தனது பி.காம் படிப்பை முடித்தார். அவரது படிப்பை முடிப்பதற்கு அவரது அன்னை அங்கம்மாள், அண்ணன் அழகர்சாமி, பள்ளி தாளாளர், பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி முதல்வர் திரு.அ.சீனிவாச ராகவன் போன்றோர் உறுதுணையாக இருந்து உதவி செய்துள்ளனர். கல்லூரிப் படிப்பை முடித்தபின் 2-8-1969-ல் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தின் கணக்காளராக பணியில் சேர்ந்தார். தனது பணியில் படிப்படியாக தலைமை கணக்கர், பிரசுரபிரிவு, விற்பனை பிரிவு, நிர்வாகப் பிரிவு, நிதி பிரிவு என்று வளர்ந்து நிதி நிறுவனத்தின் உயர்ந்த பதவியான செயலாளர் பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

தனது பணிக்காலத்தில் உத்திரபிரதேசத்திலுள்ள சகோதர நிறுவனத்தின் வளர்ச்சிக்கு துணைபுரிந்தார். தில்லியிலுள்ள பல அரசு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு நிறுவனத்தின் நூல்கள் விற்பனை, மொழியாக்கம் மற்றும் பதிப்புதுறைக்கு ஆக்க பூர்வமான சேவை செய்ததன் மூலம் தமிழக மக்களுக்கு தரமான நூல்களை மக்கள் வாங்கும் சக்திகேற்ப கிடைக்க உதவி செய்தார்.

குறிப்பாக டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் எழுத்து மற்றும் சொற்பொழிவுகளை தமிழில் வெளியிடவும் விற்பனை செய்யவும் முன்முயற்சி செய்தார். அரசு நிறுவனங்களான உலக சுகாதார நிறுவனம், மைய அரசின் பதிப்பகங்கள், தேசிய புத்தக அறக்கட்டளை, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், இந்திய வரலாற்று ஆய்வுக்கழகம், தமிழக அரசு வெளியிடும் அனைத்து தமிழ் நூல்கள் ஆகியவற்றுக்கு விற்பனை உரிமை பெற்று தமிழகத்தில் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்தார். இவரது பணியின் மூலம் தமிழகத்திலுள்ள அனைத்து பல்கலைக் கழகங்களிலும், பெரும்பாலான தன்னாட்சி கல்லூரிகளிலும், தென்னிந்தியாவில் தமிழை பாடமாக வைத்துள்ள பல்கலைக்கழகங்களிலும், தில்லிப் பல்கலைக்கழகத்திலும் இவர் பணிபுரியும் நிறுவனத்தின் நூல்கள் பாடநூல்களாக பரிந்துரைக்கப் பட்டுள்ளன. மைய அரசின் பள்ளிகளிலும் தமிழ்நூல்கள் பாடநூல்களாக பரிந்துரைக்கப் பட்டுள்ளன.

தஞ்சை, சென்னை, காமராசர், பாரதிதாசன் பல்கலைக் கழகங்களின் நூல்கள் விற்பனை உரிமை பெற்று விற்பனை பெருக்குவதற்கு தூண்டுகோலாக இருந்தார்.

மைய அரசு நிறுவனங்களான தேசிய புத்தக அறக்கட்டளை, உலக சுகாதார நிறுவனம், அறிவியல் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிறுவனம், சென்னைப் பல்கலைக் கழகம் ஆகிய நிறுவனங்களுடன் கூட்டாக இணைந்து தமிழில் அறிவியல் நூல்களையும், பாடநூல்களையும் பதிப்பிக்க உதவினார்.

அறிவொளி இயக்கத்திற்கும், தமிழக மக்களுக்கும் வாங்கும் சக்திகேற்ப நூல்களை பதிப்பித்ததோடு, சோவியத்



மற்றும் சீன முற்போக்கு நூல்களை இறக்குமதி செய்து தமிழக வாசகர்களிடையே படிக்கும் பழக்கத்தை வளர்க்க சேவை புரிந்தார்.

இவர் மாஸ்கோவிற்கு இருமுறை சென்று பன்னாட்டு புத்தக விற்பனை மற்றும் பதிப்பில் பயிற்சி பெற்றுள்ளார். இலங்கையில் தமிழ் சாகித்ய விழா மற்றும் இலங்கை இந்திய நூல்கள் காட்சி ஆகியவற்றில் கலந்து கொண்டு, தமிழ் நூல்களை விற்பனை செய்த சாதனையுமுண்டு.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தின் 9 கிளைகளுக்கும், 13 டிப்போக்களுக்கும் நடமாடும் புத்தக நிலையத்திற்கும் நேரடியாக பலமுறை சென்று, தனது ஊனத்தைப் பொருட்படுத்தாமல் பணிகளை கவனித்து வருகிறார்.

பணியில் நேர்மை, நாணயம், கடின உழைப்பு, மனத்தின்மை, விடாமுயற்சி இவையனைத்துமிருந்தால் முன்னேற்றத்திற்கு ஊனம் ஒரு தடையல்ல. ●

## ஊனமுற்றோருக்கு

ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் 3ஆம் நாள், "உலக ஊனமுற்றோர் நாளாகக்" கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. உடலளவில் ஊனமுற்றவர்கள், உள்ளத்தில் உறுதி குன்றாது ஊக்கமுடன் செயலாற்றி வாழத்தக்க வண்ணம், பற்றும் பரிவும் காட்டி, அவர்களிடம் தன்னம்பிக்கையை ஊட்டிடும் பணிகளில் அனைவரும் முனைந்திட வேண்டும் என்பதை வலியுறுத்துவதுதான் இந்நாள்.

தமிழக அரசைப் பொறுத்தவரை, ஊனமுற்றவர் நலம்பெற வழங்கிவரும் உதவிகள் பலப்பல. ஊனமுற்றோர்க்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் மூன்று சக்கர வண்டிகளின் எண்ணிக்கை 1,000 என்பதை 1,500 என உயர்த்தியும், சக்கர நாற்காலிகள் 100 என்பதை 150 என உயர்த்தியும், கடுமையாக உடல் ஊனமுற்றவர்களுக்கு மாதம்தோறும் வழங்கப்படும் பராமரிப்புத் தொகை 100 ரூபாய் என்பதை, 150 ரூபாய் எனவும், இத்திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 1,050 என்பதை 4,900 எனவும் உயர்த்தியும், கிராமப்புற உடல் ஊனமுற்ற பள்ளி மாணவர்களுக்கு, 25 ரூபாய் வீதம் வழங்கப்பட்ட உதவித்தொகையை, 6 முதல் 8ஆம் வகுப்பு வரை 75 ரூபாய், 9 முதல்12ஆம் வகுப்பு வரை 85 ரூபாய் என்றும், பட்டப்படிப்பு மாணவர்களுக்கு ஆண்டுக்கு 150 ரூபாய் என வழங்கப்பட்ட உதவித்தொகை மாதத்திற்கு 150 ரூபாய் வீதமும், தொழிற் படிப்பு மாணவர்களுக்கு ஆண்டுக்கு 200 ரூபாய் என வழங்கப்பட்ட உதவித்தொகை மாதத்திற்கு 170 ரூபாய் வீதமும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் அனுமதிக்கப்பட்டு வந்த இலவசப் பயணச் சலுகை தூரம் 30 கி.மீ. என்பதை 100 கி.மீ. வரை நீட்டித்தும், விரைவுப் பேருந்துகளில் இலவசப் பயணத்தை அனுமதித்தும்

## உதவிடும்

ஆணைகள் வழங்கியுள்ள இந்த அரசு, அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கு ஊனமுற்றவர் என்பதற்கான மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையையும் நீக்கியுள்ளது.

இவையல்லாமல், உடல் ஊனமுற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்தம் மாத உணவுச் செலவு 120 ரூபாய் என்பதை 200 ரூபாய் எனவும், சீருடைக் கட்டணம் 120 ரூபாய் என்பதை 250 ரூபாய் எனவும் உயர்த்தி வழங்குவதுடன், பேசும் திறனிழந்து, காதும் கேளாத நிலையில் வாழ்பவர்களைத் திருமணம் செய்து கொள்ளும் உடற்குறையிலா இருபால் இளைஞர்களையும் ஊக்கப்படுத்தும் வகையில், அவர்களுக்கு 5,000 ரூபாய் திருமண உதவித்தொகை வழங்கும் திட்டத்தையும் அறிமுகப்படுத்தி உதவிகளை வழங்கிவருகிறது.

இவைகளுடன், உடல் ஊனமுற்றவர்கள், ஊனம் மறைந்து வாழ தேவையான மருத்துவ வசதிகள் அனைத்தையும் வழங்கிட வேண்டும் என்பதற்காக, அனைத்துவகை ஊனங்களுக்கும் உரிய உதவிகள் வழங்கிடத்தக்க மறுவாழ்வு நிலையங்களை அனைத்து மாவட்டங்களிலும் கடந்த ஆண்டில் நிறுவி – இத்தகைய வசதியை மாநிலம் முழுதும் ஏற்படுத்தும் முதல் மாநிலம் தமிழகமே என்ற பெருமையையும் தமிழகத்திற்குத் தேடித் தந்துள்ளது இந்த அரசு.

இப்படி, இயன்ற வழிகளில் எல்லாம் உதவிகளை வழங்குவதுடன், உரிய மருத்துவ வசதிகளையும் உருவாக்கி, தமிழகத்தில் வாழும் ஏறத்தாழ 11.12 இலட்சம் ஊனமுற்றவர்களின் நலன்களும் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன.

## அரசு



அரசு, தான் வழங்கும் இத்தகைய உதவிகள் மட்டும் அல்லாமல், ஊனமுற்றவர்க்கு உதவிடும் சிறந்த சமூகப் பணியாளர்களுக்கு இரண்டு புதிய விருதுகளையும் ஆண்டுதோறும் வழங்கி, அவர்களையும் இப்பணிகளில் ஊக்கப்படுத்தி வருகிறது என்பதனைச் சுட்டிக்காட்டிடுவதுடன், "தாழ்வு மனப்பான்மை நீங்கி, சமுதாயத்தில் சமவாய்ப்புகளையும் சம உரிமைகளையும் – ஊனமுற்றவர் பெற அரசும் உதவுகிறது. நாமும் உதவிடுவோம்" எனும் உணர்வுடன், முனைப்போடு தொண்டுகள் ஆற்றி – மனித நேயத்தை இம்மண்ணில் வளர்ந்திட உறுதியேற்குமாறு தமிழக மக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன்.

***– மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உலக ஊனமுற்றோர் நாள் செய்தி 3.12.98***

## TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

### APPLICATION FORM FOR DIRECT RECRUITMENT TO THE POSTS INCLUDED IN GROUP - I SERVICES - 1998-99

### PRELIMINARY EXAMINATION

**Instructions :**

i) Format should be filled in and sent in a thick foolscap paper superscribing the name of the centre and its Code Number in the Cover. Copies of Certificates need not be sent for preliminary examination (except in the case of Physically Handicapped Candidates)

ii) Fill up the application in ink in Capital letters with one letter in one box. Leave one box empty between two words.

Passport size photograph duly signed by the candidate should be affixed here

Examination Centre :

Code :

Register No. : (to be filled by the Office)

1. Name of the Candidate with initials (in Block Letters) :

2. Name of the Father/Guardian :

3. Address for Communication :

Pincode :

4. (a) Place of Birth of the Candidate :

Place of Birth | District | State

(b) Place of Birth of the Candidate's Father :

Place of Birth | District | State

5. Candidate's Date of Birth (in Figures and Words) :

Date | Month | Year

..................day of.......................................19

6. Do you claim age concession? YES/NO
If 'Yes', under what categories? : ..........................................................................

7. (i) Community with Sub-Caste (Community Code Numbers SC-01; ST-02; BC-03; G.T.(others)-04; MBC/DC-05)

Name of the Community | Code

Sub-Caste

(ii) Religion :

(iii) Nationality :

8. Educational Qualification

| S.No. | Name of the Examination Passed | Subject | University | Year of Passing | Class | % of Marks |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

9. Centre chosen : [ ] Name of the Centre [ ] Code

10. Details of Demand Draft enclosed :

(i) Name of the Bank : ..............................

(ii) Branch : ..............................

(iii) D.D.Number : ..............................

(iv) Date of D.D. : ..............................

(v) Amount : Rs. ..............................

11. Do you claim fee exemption? : YES/NO
If 'Yes' under what Category? ..............................

12. Are you Physically Handicap : YES/NO
If 'Yes' furnish the particulars
(P.H.Certificate obtained from
Government Hospital should be enclosed)
(Orthopaedically handicapped - 01,
Deaf-02) : [ ] Code

Percentage of Handicapped :

Do you wish to claim any relaxation : Age relaxation/Relaxation of other qualifications

13. Sex : MALE/FEMALE : [ ]

14. Have you been debarred by the
Commission previously?
If 'Yes' give details : YES/NO ..............................

15. DECLARATIONS :

(1) I certify that the above particulars are true to the best of my knowledge and belief. In the event of any information being found false or incorrect or ineligibility being detected before or after the examination, penal action can be taken against me by the Commission besides rejecting my application.

(2) I have informed my employer in writing that I have applied for this examination.
(Strike off this, if not applicable)

Place :

Date :

APPLICANT'S SIGNATURE

## GROUP - I SERVICES PRELIMINARY EXAMINATION 1998-99

## IDENTITY CARD / ATTENDANCE SHEET

Passport size Photo duly signed by the candidate should be affixed here

1. Register Number : [ ]
(to be filled by office)

2. Candidate's Name :

3. Address :

4. Preliminary Examination Centre and Code No. : [ ] CENTRE [ | | ] CODE NO.

5. Subject
General Knowledge

............................................................ Signature of the Candidate
(to be signed in the Examination Hall)

............................................................ Signature of the Invigilator

---

## தமிழ்நாடு தேர்வாணையம்

தமிழ்நாடு தேர்வாணையம் முதல் நிலை பணி (Group I Service) தேர்விற்கான விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து அனுப்ப கடைசி நாள் 12.1.1999. துணை ஆட்சியர்-13, வணிகவரி அலுவலர்-9, வட்டார தீயணைப்பு அதிகாரி-1, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்-1, வட்டார வளர்ச்சி அலுவலர்-5, காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் (பிரிவு-1)-16 மற்றும் மாவட்டப் பதிவாளர்-1 பதவிகளுக்கு தேர்வு நடைபெறவுள்ளது. அதற்கான விண்ணப்பப் படிவம் மேலேக் கொடுக்கப்பட்டுள்ளது.

**தகுதிகள் :**

கல்வி : இளநிலைப் பட்டதாரி

வயது :


1. 1.7.98 அன்று 21 வயது பூர்த்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும்.
2. தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு வயது வரம்பு - 35.
3. மற்ற வகுப்பினருக்கு வயது வரம்பு - 30.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆப., இயக்குநர், செய்தி—மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை — தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை—600 002. தொலைபேசி:568926, 568927, 564906



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23









